www.padippakam.com
நன்றி - நூலகத்தமிழ்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மார்ச்.13-19,1994
ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 42

## ஆயுதமானது வாக்கு! அடி சறுக்கியது ஆனைக்கு!!

உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒரு கண்ணோட்டம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்




இன ஐக்கியத்தை வலியுறுத்தும் பஞ்சரதப் பவனி

அரசியல் அலசல்

வாசக நெஞ்சங்களுக்கு ரம்மியமான ரம்ழான் வாழ்த்துக்கள்.

வசந்தங்கள் பொழியட்டும் பூப்போல் இனிதாய்- அழகாய் வாழ்வு மலர்ந்து சிறக்கட்டும்!

-ஈத் முபாரக்-



முகப் பயிற்சி

லேடீஸ் ஸ்பெசல்

வசூல் மன்னர் மிஸ்டர் குரங்கார்

அதிசயத் தகவல்கள்-தகவல் பெட்டி





ரஜனியின் வீரா
-சினிவிசிட்-

## அதிசய உருவம்-அழகிய நடனம்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அனுகூலமான துணையானவர்

**"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர்."**

**சங்கீதம் 46:1**

நமக்குத் தேவையானபோது கிடைக்காத உதவியின் மதிப்பு மிகவும் குறைவானதே. வீட்டில் வைத்துவிட்டுப் போன நங்கூரம் புயல் ஏற்படும் போது மாலுமிக்குப் பயன் அற்றதாகும். கடன் பட்டிருப்பவனுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருக்கும் போது, ஒரு காலத்தில் அவனிடமிருந்த பணம் பயன் அற்றதாகும்.

உலகப் பிரகாரமான துணைகளில் ஒன்றிரண்டையே "அனுகூலமான துணை"கள் எனலாம். அவைகளைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதாயும், பயன் படுத்துவதற்கு சிரமமாயும் இருக்கும். ஒருமுறை பயன்படுத்தப்பட்டபின் அவை அனுகூலமான துணையாய் இருக்காது.

ஆனால் நம் கடவுளாகிய ஆண்டவர் நாம் தேடும் போதும், நமக்குத் தேவைப்படும்போதும், நாம் ஒருமுறை பயன்படுத்தி மகிழ்ச்சியடைந்த பின்னும் அனுகூலமான துணையாகவே இருப்பார்.

அவர் நமக்கு மிகவும் நெருக்கமான துணையானவர். நம் நெருங்கிய நண்பரை விட அனுகூலமான துணையானவர். ஏனெனில் ஆபத்துக் காலத்தில் நம்மில் இருக்கிறார்.

நம்மைவிட நமக்கு அனுகூலமான துணையானவர், ஏனெனில் சில வேளைகளில் நமக்கு மனஞ் சோராமை தேவைப்படுகிறது. அவர் எப்போதும், நேர் பயனுள்ளவராய், இரக்கமுள்ளவராய், முழுவதுமாக அனுகூலமான துணையாயிருக்கிறார். இது நமக்கு துக்கமான காலமாயிருந்தால் அவர் இப்போது அனுகூலமான துணையானவர்; நாம் அவரைச் சார்ந்து இளைப்பாறலாம். அவர் நமக்கு அடைக்கலமானவர்.

ஆகையால் அவரோடு சேர்ந்திருக்கலாம். ஆகையால் இப்போது அவரில் மன அமைதி உள்ளவர்களாய் இருக்கலாம். நமக்கு ஒரு நிமிடம்கூட கவலை அல்லது அச்சம் இருக்க வேண்டியதில்லை "சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாகோபின் தேவன் நமக்கு அடைக்கலமானவர்.

**குணத்தி பிரபா**
**கனடா.**

## ஆன்மீகம்



# நோன்பாளிகள் நாவைப் பேணுதல் கடமை

**நோ**ன்பை முறிக்கும் காரியங்களில் ஈடுபடும் ஒருவன் வெறுமனே பசியோடும்-தாகத்தோடும் இருப்பது உண்மையான நோன்பாகாது. நோன்பு நோற்கும் முஸ்லிம் வீணான பேச்சுக்களை விட்டும் தனது நாவைப் பேணிக்காக்க வேண்டும். நாவினால் பொய்யுரைப்பது, பிறரை ஏசுவது, மற்றவரின் குறைகளைத் துருவி ஆராய்ந்து அம்பலப்படுத்துவது, பிறரை மனம் நோகச் செய்தல், ஆகிய பாவங்கள் ஏற்படாமல் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.

மனிதன் எத்தகைய பண்புள்ளவன் என்பதை அவனது வாயிலிருந்து வரும் வார்த்தைகள் பிரதிபலிக்கும். வீண் பேச்சுப் பேசுவது பெரும்பாவம் என்று கருதிய நம்முன்னோர்களான மகான்கள் இறை தியானத்திலேயே தம் நாவுகளைத் திளைக்கச் செய்து "இறையருள்" பெற்றதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எமது நாவையும் ஏனைய உடல் உறுப்புக்களையும் பாவச் செயல்களைவிட்டும் பாதுகாத்துக் கொள்ளாமல், வெறுமனே பசியுடனும்-தாகத்துடனும் இருந்து தம்மை "நோன்பாளி" என்று கூறிக்கொள்வதில் எந்தப் பயனும் கிடையாது. (மறுமை நாளில்) மனிதர்களின் வாய்க்குப் பூட்டுப் போடப்படும். அவர்களது கைகள்-கால்கள், ஏனைய உறுப்புக்கள் அம்மனிதன் புரிந்த பாவகாரியங்கள் குறித்து சாட்சியம் கூறும் என அல்குர் ஆனில் இறைவன் எச்சரிப்பதை நாம் சிந்திப்போமாக! நாவினால் நரகம் புகாமல் நம்மைக் காப்போமாக!

**எம்.எச்.எம். ஹாரித், திஹாரிய.**

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
கிழக்கிலும்-வவுனியாவிலும்
தேர்தல் திருவிழா
ஆளும் கட்சியின் கொடி இறக்கத்தோடு
அதிக அசம்பாவிதங்கள் இல்லாமல்
அங்கங்கே அதிகார பலத்தோடு நடந்த
தில்லு முல்லுகள்-திருகுதாளங்களோடு
இனிதே நிறைவேறிவிட்டது.

தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள
முக்கியமான உள்ளூராட்சி சபைகளை
ஆளும் கட்சியால் வசப்படுத்த முடியவில்லை.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக உள்ள
உள்ளூராட்சிச் சபைகளிலும்
ஆளும் கட்சிக்கு அதிக சாதகமில்லை.
அமைச்சர் பெரு மக்கள் இருந்தும்
வெற்றிக்காற்று
முஸ்லிம் காங்கிரஸ் பக்கம் வீசியிருக்கிறது.

ஜனாதிபதியின் கருத்துக்களால்
தமிழர்களும் முஸ்லிம்களும்
அதிருப்தி கொண்டுள்ளதையே
முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

மரம்-செடி-கொடி போன்ற
உதாரணங்கள் தவிர்க்கப்பட்டிருந்தால்
ஆளும் கட்சிக்கு
அதிக பாதகமில்லாத நிலை இருந்திருக்கலாம்.

சுயேச்சைக் குழுக்களுக்கும்
முஸ்லிம் காங்கிரசுக்கும்
கிடைத்துள்ள மொத்த வாக்குகளை
கணக்கிட்டுப் பார்க்கும் போது
பிரிப்பு முயற்சிக்கு கிழக்கில்
அதிக வரவேற்பில்லை என்றே தெரிகிறது.

பெரும்பான்மையினர் ஒன்றுபட வேண்டும்
என்று-
அடிக்கடி ஜனாதிபதி கூறுவதால்
தமிழ் பேசும் மக்களும்
தமக்குள் பிரிவுகள் வேண்டாம்
என்று ஐக்கியத்தை விரும்பியிருக்கிறார்கள்.

தேர்தல் என்றால்
தில்லு முல்லுகள் இல்லாமல் போனால்
ஒரு சுவை இருக்காது. சூடு இருக்காது
ஆகவே-தில்லு முல்லுகள்
அமர்க்களமாய் அரங்கேறட்டும்
என்று- எழுதப்படாத தேர்தல் விதி
நிரந்தர நியதியாகி விடுமோ என்று
நினைக்க வேண்டி இருக்கிறது.

அந்தளவுக்கு-சில பகுதிகளில்
வெளிப்படையாகவே விதி மீறல்கள்,
மிரட்டல்கள், தில்லு முல்லுகள்
நடந்து முடிந்ததாக எதிரணி வேட்பாளர்கள்
புகார் செய்துள்ளார்கள்.

அரசியல் கட்சிகள் சிலவும்
தேர்தல் நடந்த முறையைக்
கண்டித்து கருத்துச் சொல்லியுள்ளன.

உள்ளூராட்சி தேர்தலில்கூட
இத்தனை தில்லு முல்லுகள் என்றால்
சர்வசன வாக்கெடுப்பு என்று
ஒன்று நடத்தப்படுமானால்
நிலமை என்னாகும் என்பதை
நினைத்துப் பார்க்க முடியும்- முடிகிறது.

தமிழ் அரசியல் கட்சிகள்
தமக்கு விழுந்துள்ள வாக்குகளை
தம்மீதான முழு நம்பிக்கை என்று
முற்றாக நினைத்துவிடக் கூடாது.

ஒன்றுபட்ட, ஆளுமை மிக்க
அரசியல் தலைமைத்துவம்
இருந்திருக்குமானால்
ஆரோக்கியமான விளைவுகளை
உருவாக்கிக் காட்டியிருக்க முடியும்.

மக்கள் தமக்குத் தெரிந்த வழிகளில்
தமக்குச் சரியென்று பட்ட முறையில்
சிந்திக்கிறார்கள்.
வழிகாட்டப் போவதாகச் சொல்பவர்கள்
வழுக்கி விழுவதற்கு
மக்கள் பொறுப்பல்ல.

ஆளும் கட்சிக்கு எதிராக
மேடைகளில் போர்க்கொடி உயர்த்திய
தமிழ் அரசியல் கட்சிகள்
இனிமேல்
எந்த வழியில் போகப் போகிறார்கள்?

அரசாங்க விரோதப் பேச்சுக்கள்
வாக்கு அறுவடைக்கான முயற்சிகளா
என்பது இனிக் கவனிக்கப்பட வேண்டும். ■

மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-39

களம்தேடி வந்த கவிதைகளில்
வெற்றி முகம் கண்டதுவும்–வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**யார் தருவார்?**

ஒருவேளை நீரை தான்
சூரங்காரும் தந்துவிட்டார்.
உருவான யுத்தத்தில் தினமும்
பறிபோகும் உயிர்களை யார் தருவார்?

தெ. லோஜனா
கொழும்பு-15.

### வியக்கப்பட்டவை

**அறிவு!**

"உறிஞ்சட்டும் நீ"யென்று
உறிஞ்சாமலிருந்தேன்-நீயும்
"உறிஞ்சட்டும் நா"னென்றா
உறிஞ்சாமலிருந்தாய்?
அறிவைந்து உனக்கில்லை
அறிவாறு உண்டு-ஐந்து
அறிவுள்ள மனிதர்தான்
அதிகம் பேர் உண்டு.

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

இசை கொண்ட மகுடிக்கு
பாம் பொன்றே தானடங்கும்
அன்பென்ற விலங்கிற்கு
எவ்விலங்கும் தான் மடங்கும்.

தர்சிக்கா. கனகசிங்கம்
கல்லடி, மட்டக்களப்பு.

**எப்போது?**

சீதையைத் தேடி வந்த அனுமான்
சினேகிதம் கொண்டது
எப்போது?

கின்னியா தௌஸீர்.

**ஒத்திகை**

இனங்களுக்கிடையிலான
ஒற்றுமையை வளர்க்க
இங்கே ஓர் ஒத்திகை
நடக்கின்றது.

முனவ்வரா ஹமீட்
முருதகஹாமுல்ல.

**விந்தை**

மாந்தரை மாந்தரே கொன்று
குவிக்கும் இப்புவியில்
மந்தியும் மழலையும்
மகிழ்ந்திருப்பது விந்தைதான்.

சு. அருந்ததி-வேலணை-06.

பரிணாம வளர்ச்சியின்
முகவுரை நீயானதால்
முடிவுரை நாமானோம்.

சன். டிலக்ஷிகா-திருகோணமலை.



**இணைப்பு**

நானிலத்தில் மேவியுள்ள
வேற்றுமைச் செடிதனை
வேறறுத்திட
நாட்டமுடன் இன்றே
ஒன்றாய் இணைந்தனவோ
ஆறறிவும் ஐயறிவும்

கின்னியா சபறுள்ளா.

பகிர்ந்து உண்டால்
பசியாறும் என்பது
இது தானோ?
எம் பழந்தமிழர்
சொன்னதும் சரிதானோ?

செல்லையா மீனாம்பிகா
நியூபர்க் எஸ்டேட், எல்ல.

**வெஞ்சமர்**

விட்டுக் கொடுத்து வாழ்ந்தால்
வேதனைக்கு வேலையில்லை- என்றும்
ஒட்டி உறவு கொண்டால்
வெஞ்சமர்கள் எழுவதில்லை.

ச. மகாலிங்கம்-வெளிமடை.

## கவிதைப் போட்டி இல-42



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.
அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 19.3.1994.

–முகவரி–
கவிதைப் போட்டி இல: 42
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

**விஷமில்லை**

விழிகளுக்கு
விருந்து-
வெள்ளை ஏட்டில்
விஷமில்லை!

செல்வி. இராமநாதன் பிரிதர்சனி
அப்புகஸ்தன்ன தோட்டம்.

**பாடம்**

இனமிரண்டு
இணைந்திருப்பது
இனபேதம் பேசுவோர்க்கு
பாடம் புகட்டவோ?

எம்.எம்.சலீம்
இதல, கொட்டாரமுல்ல.

**சங்கமம்**

உள்ளங்கள்
உணரும் வரைதான்
உருவங்கள்
வேறுபாடு

ஆர். பவானி-வவுனியா.

**உபதேசம்**

இனவெறி
மதவெறி
நிறவெறியில்
பிளவுபட்ட உலகத்துக்கு
புது முறை
உபதேசம்.

எஸ். யேசுநாதன்
கோமாரி-01.

## வாசகர்சாலை

தேர்தல் தொடர்பாக முரசு தந்த அரசியல் பார்வைகள் அருமை. பக்கம் சாராமல் அரசியல் கோளாறுகளை பகிரங்கப்படுத்தி விட்டீர்கள். ராஜதந்திரிக்கும்-நாரதருக்கும் சபாஷ்!

**வி. சுதாகர்-கொழும்பு-11.**

•

ராஜதந்திரி துணிச்சலாக செய்துவரும் அலசல் முரசின் போக்குக்கு பொலிவு சேர்க்கிறது. புலிகள் மீது சிறிய சார்பு காட்டுகிறாரோ என்றும் சில அலசல்கள் கேட்க வைக்கின்றன.

**என். ரஹீம்-கல்முனை.**

•

அதிரடியார் தேர்தல் விளையாட்டுக்களை சுவைபடக் குத்திக் காட்டிவிட்டார். வேட்பாளர்களது செத்த வீடுகளுக்கான திக் விஜயங்கள் சிரிக்க வைத்தன.

**கே. சாந்தினி-திருகோணமலை.**

•

தமிழ் கட்சிகளின் வெற்றிகளுக்கு ஜனாதிபதியின் உரைகள் பெரும் உதவி புரிந்ததை முரசு தெளிவாக சொல்லியிருந்தது. தமிழ் கட்சிகள் சில அயுதங்களை மட்டுமே அரசியலுக்கும் நம்பியிருப்பதும் புரிந்துகொள்ள முடிகிறது.

**கு. சாரங்கன்-மஸ்கெலியா.**

•

வாராவாரம் முரசு சுமந்துவரும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். ரசிகனின் கொலை விழும் நேரம் விறுவிறுப்பாக உள்ளது. தேர்தல் காலம் என்பதால் ஒற்றன் கிழக்கிற்குச் சென்றுவிட்டாரா? மகாபாரதத்தை தமிழில் தரும் முரசுக்கு நன்றிகள் பற்பல. என்றும் நீ வளர என் நல்லாசிகள்.

**செல்வி. எஸ். விஜி-நவகம்புர.**

•

வாரமொருமுறை வெளிவரும் தினமுரசின் சகலப் படைப்புகளும் பிரமாதம். கவிதைப் போட்டி எக்ஸ்ரே ரிப்போர்ட், தகவல் பெட்டி, லேடீஸ் ஸ்பெஷல், சினிவிசிட், பாப்பா முரசு, ஸ்போர்ட்ஸ் போன்ற சகல படைப்புகளும், வாசகர்களை கவரக்கூடியதே. ரசிகனின் இலக்கிய நயம் சூப்பர்.

முரசு வளர வாழ்த்தும் முரசின் பிரியர்கள்-முஹம்மட் பௌமி, பாஹிரா அனஸ், ஏ.ஜே.எம். பைஸர், பஸ்மியா அனஸ் -பாயிஸா-மக்கொனை.

•

திக்திக்கும் தினமுரசே
இலங்கையில் மட்டுமல்ல வெளி நாடுகளிலும் முரசு கொட்டி உன் சேவையை செய்து கொண்டிருக்கும் முரசே உனக்கு எனது பலகோடி வந்தனங்கள். நீ தரும் அத்தனை அம்சங்களும் சூப்பர். இலக்கிய நயம் தரும் ரசிகனை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. சென்ற வாரம் 23.01.94 முன் அட்டையில் சிவரஞ்சனியின் வண்ணப் படத்தை பிரசுரித்து என்னை மெய்மறக்கச் செய்து விட்டீர்கள். உங்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே தெரியவில்லை. நன்றிகள் பல. வாழ்க உன் சேவை. வளர்க உன் பணி.

**அஸ்ரபுன்நிஸா ஹமீட்- அக்குறணை.**

•

அன்பின் தினமுரசே,
வாரம் ஒரு முறை ரசிகன் தரும் ஒவ்வொரு சிறுகதையும் தொடர்கதையும் என் மனதில் மட்டுமல்ல எல்லோர் மனதிலும் அன்றும், இன்றும் என்றும் தித்திக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வீ. அன்புத்துரை-வெளிமடை.**

•

அன்பின் முரசே,
உன் மேனியில் உருவெடுத்த ரசிகனின் புதிய தொடர்கதை ஆரம்பமே எங்கள் உள்ளத்தை கவர்ந்துவிட்டது. அடுத்த வாரம் எப்போது வரும் என ஆவலுடன் வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் உன் ரசிகைகள்.

**ரி. சாந்தினி, ரி. சின்னவள், ரி. ஜெயா- அன்புவழிபுரம்.**

•

தேனமுதே தினமுரசே,
நீ தரும் தேன் நிறைந்த ஆக்கங்கள் நான் சுவைக்க நீ தரும் பரிசாக எண்ணுகிறேன். சிறுவர் முதல் பெரியோர் வரை உன்னைத் தேடிப்பிடித்து வாங்கி சுவைப்பதை என் கண்ணால் காண்கிறேன்.

**செல்வன். க. விவேகானந்தன்-டிக்கோயா.**



தித்திக்கும் தீஞ் சுவையூட்டும் தினமுரசே, தினமும்தான் கழிந்திடுமோ உன் திருமுகந்தனை காணாமல். திருப்திப்படுத்து எங்களை வாரா வாரம்.

**செல்வி. ராதா ராமநாதன்- பூண்டுலோயா.**

தித்திக்க வைக்கும் சிறப்பான அம்சங்களை தன்னில் வெளிக்காட்டி இரசிகர்களின் எண்ணிக்கையை குவித்துவரும் தினமுரசிற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

**திருமதி. பூமாபாயிஸ்-கோட்டே.**

•

வாரா வாரம் நீ சுமந்து வரும் அம்சங்கள் யாவும் என் இதயத்தை கொள்ளை கொண்டு விட்டன். இனி நான் உன்னை எவ்வாறு மறப்பது. முன்பக்க படங்களோ ஆஹா மிக அற்புதம். மொத்தத்தில் நீ ஒரு சுவையரசு. அதுவே தினமுரசு.

**எஸ்.டி லலிதா-பொகவந்தலாவ.**

•

வாசிக்கும் யாவரையும் உன்னை நேசிக்கும்படி செய்துவிட்ட தித்திப்பான தினமுரசே, நீ புத்தம் புது மலராய் என்றும் பூத்துக் குலுங்க வேண்டுமென போற்றுகிறேன். நீ வாழ்க.

**ராகில் ஏ. காசிம்-மன்னார்.**

•

உலகின் மூலை முடுக்கெல்லாம் புகுந்து செய்திச் சுருள்களை தொகுத்து இனிக்கும் புதுமைகளை வடித்து வாரம் ஒருமுறை வெளியே வந்து சென்றாலும் 'தின'மும் என் கையில் இருப்பது போல் செய்து வருகிறாயே, அது தானே 'தின'முரசு.

**செல்வன். ஆர். உதயச்சந்திரன் அவிசாவளை.**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சபாநாயகர் விஜயத்திற்கு புலிகள் பச்சைக் கொடி

## மற்றுமொரு சமாதான முயற்சி! வெற்றி பெறுமா என்பது கேள்விக்குறி!!

இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் எம்.எச்.முகமட் புலிகள் அமைப்பினரோடு பேசுவதற்கு யாழ் செல்லத் தயார் என்று கூறிவந்தார்.

இப்போது புலிகள் அமைப்பினர் சபாநாயகர் தம்மை வந்து சந்திக்கலாம் என்று கூறியுள்ளனர்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 1ம் திகதி சபாநாயகர் யாழ் வருவார் என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

ஏப்ரல் முதலாம் திகதிதான் ஏப்ரல் பூல் தினமும் வருகிறது. எனவே அந்தத் திகதியில் சபாநாயகர் யாழ் செல்லுவாரா என்பது தெரியவில்லை.

சபாநாயகரோடு அவரது தனிச் செயலாளரும் மற்றும் இலங்கைக்கான மனித உரிமைக் குழுவின் தலைவரும் யாழ் வருவர் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

சபாநாயகர் புலிகள் அமைப்போடு நடத்தப் போகும் பேச்சுக்கள் அரச தரப்பினரின் சார்பிலானதாக அமையாது என்றே தெரிகிறது.

அமைச்சர் தொண்டமான் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் போன்றே சபாநாயகரும் தனிப்பட்ட ரீதியில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டா புலிகளோடு பேசுவதற்கு யாழ் செல்லப் போவதாக கூறியிருந்தபோதும் இதுவரை செல்லவில்லை.

புலிகள், அமைச்சர் தொண்டா யாழ் வந்து அங்குள்ள நிலைமைகளை கண்டறிந்து செல்லலாம் என்று கூறியிருந்தனர்.

புலிகள் அமைப்பினரைப் பொறுத்த வரையில் யார் வேண்டுமானாலும் சமாதான முயற்சிகளில் ஈடுபடலாம். ஆனால் பேச்சுக்கள் நடைபெறுவ்தானால் அரசும், புலிகளும் மட்டுமே பேசவேண்டும் என்று தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சர்வோதயத் தலைவர் கலாநிதி ஆரியரத்னாவின் பெயர் சமாதானப் பேச்சுக்களில் பலமாக அடிபட்டது.

தென்னிலங்கைப் பத்திரிகைகள் கலாநிதி ஆரியரத்னாவின் வடபகுதி விஜயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ஆனால், புலிகள் அமைப்பினர் ஆரியரத்னாவின் சமாதான முயற்சிகள் பற்றி முக்கியத்துவப்படுத்தவில்லை.

யாழ் சென்ற திரு.ஆரியரத்னாவை புலிகளின் சார்பாக கரிகாலன் மட்டுமே சந்தித்துப் பேசியிருந்தார்.



சபாநாயகர் எம்.எச். முகமட்

அந்தச் சமயத்தில் யாழ் சென்ற ஆயர்கள் தூதுக்குழுவை புலிகள் சார்பில் திரு.அன்ரன் பாலசிங்கம், பேபி சுப்பிரமணியம், கரிகாலன், பாலகுமார் போன்ற பல முக்கியஸ்தர்கள் சந்தித்து பேச்சு நடத்தினார்கள்.

திரு.ஆரியரத்னா புலிகளிடம் இருந்து முக்கிய செய்தியைக் கொண்டுவந்ததாக சில பத்திரிகைகள் எழுதி பரபரப்பு ஏற்படுத்தின.

திரு.ஆரியரத்னாவாக இருந்தாலும் வேறு எவராக இருந்தாலும் யாழ் செல்லும்போது புலிகள் ஒரு கருத்தையே வற்புறுத்தி வருகின்றனர்.

"நாம் பேச்சுக்கு தயார். ஆனால் போர் நடைபெறும்போது பேச்சு நடத்த முடியாது. எனவே பேச்சுக்கு முன் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். வடபகுதி மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும்."

யாழ் செல்லப் போகும் சபாநாயகரிடமும் புலிகள் அமைப்பினர் அதனையே வலியுறுத்துவார்கள்.

சபாநாயகரின் சமாதான முயற்சிகளுக்கு அரச தரப்பில் இருந்து எந்தளவு அனுசரணை இருக்கும் என்பது கேள்விக்குறியே.

யாழ் நிலைமைகளை நேரடியாகச் கண்டுகொள்ளவும், அதனை தென்னி லங்கையில் சபாநாயகர் மூலமே வெளிப் படுத்தவும் கூடிய ஒரு வாய்ப்பாக சபாநாயகரின் விஜயம் புலிகள் அமைப்பினரால் நோக்கப்படக்கூடும்.

பாராளுமன்ற சபாநாயகரே புலிகள் அமைப்பினரைத் தேடி வடபகுதிக்கு பேசச் செல்லுவதால், புலிகள் பயங்கரவாதிகள் என்று ஜனாதிபதி கூறிவரும் கருத்தும் பலவீனமாகும். நாட்டின் சபாநாயகர் பயங்கரவாதிகளோடு பேசச் செல்கிறார் என்று அரசாங்கம் சொல்ல முடியாது.

சபாநாயகரைப் பொறுத்தவரை அவர் புலிகள் அமைப்பினரை பற்றி இதுவரை கடுமையான விமர்சனங்களை தவிர்த்தே வந்திருக்கிறார். இனப்பிரச்சனை இல்லை என்ற கூற்றோடும் அவர் உடன்பாடில்லாதவர் போலவே நடந்து வருகிறார்.

சபாநாயகர் மட்டுமல்ல யார் வேண்டுமானாலும் சமாதான முயற்சிகளில் ஈடுபடலாம் என்று அரச தரப்பினர் கூறக்கூடும். எனினும் சபாநாயகர் தம்மைத் தேடி பேச வருவது என்பது புலிகள் அமைப்பினருக்கு அரசியல் ரீதியில் உள்ள பலத்தின் எடையை அதிகரிக்க உதவும்.

சமாதான முயற்சிகள் பற்றிய மிகைப் படுத்தப்பட்ட செய்திகள் மத்தியில் நாடு பூராவும் உள்ள சமாதான நாட்டமும் கவனிக்கப்பட வேண்டியதே.

எதிர்வரும் மாதத்தில் சபாநாயகரின் சமாதான முயற்சிகள் தலைப்புச் செய்தி களாகும். சபாநாயகரின் முயற்சியின் விளைவுகளை அறிய நாடு பூராவும் எதிர்பார்ப்பும் இருக்கும்.

எனினும், இனப்பிரச்சனைக்கு தீர்வு என்பது சபாநாயகரின் கரங்களில் இல்லை. அரச தரப்பின் சார்பில் எவ்வித உத்தர வாதமும் வழங்க முடியாத நிலையில் சபாநாயகர் வடக்கே சென்று வருவாரே யானால் ஏற்கனவே நடைபெற்ற சமாதான முயற்சிகள் போலவே அதுவும் அமைந்து விடுமோ என்றும் கேள்வியை எழுப்பிவிடும்.

## வெற்றியாளர்களுக்கு உரிமை கோருகிறது கொழும்பு ஈரோஸ்!

### ஈரோஸ் குழப்பம் தொடர்கிறது!!

திருமலை நகரசபைத் தேர்தலில் டெலோ அமைப்பின் சார்பிலும் ஈரோஸ் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் குழுவினரது சார்பிலும் போட்டியிட்ட சுயேச்சைக் குழுவினரே வெற்றி யீட்டினார்கள்.

தேர்தலில் வெற்றிபெற்றதையடுத்து திருகோணமலை நகர வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது.

அப்பிரசுரத்தில் 'ஈரோஸ் திருகோண மலை பிராந்தியம்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளையில் கொழும்பில் ஈரோஸ் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் குழுவைச் சேர்ந்தவரான திரு.சுதாகரன் என்பவர் கருத்து வெளியிடும்போது திருமலையில் போட்டியிட்டவர்கள் தமது ஆதரவாளர்கள் என்று தெரிவித்துள்ளார். திருமலை நகரசபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகள் பெற்றவரான திரு.நந்தன் முன்னர் ஈரோஸ் அமைப்பில் இருந்தவர். ஆனால் அவரும் தமது ஆதரவாளர் என்று சுதாகரன் குறிப்பிட்டுள்ளார். திரு.நந்தன் ஈரோஸ் உறுப்பினர் அல்ல என்பதே அதன் அர்த்தமாகும்.

மட்டக்களப்பில் ஈரோஸ் என்ற பெயரில் பிரபாகரன் என்பவரது தலைமையில் போட்டியிட்ட குழு பற்றி திரு. சுதாகரன் எதுவும் குறிப்பிடவில்லை.

எனினும், உள்ளூராட்சி தேர்தல் அறிவிக்கப்பட்டு அது நடந்து முடியும்வரை கொழும்பு ஈரோஸ் குழுவினர் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நடந்து முடிந்த பின்னர் ஈரோஸ் என்ற பெயரில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களை மட்டுமே தமது ஆதரவாளர்கள் என்று கொழும்பு ஈரோஸ் புத்திசாலித்தனமாக அறிவித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பில் ஈரோஸ் என்ற பெயரில் போட்டியிட்ட குழுவினர் தமக்கு பாராளுமன்ற உறுப்பினரான சேகு தாவூத்தின் ஆதரவு தமக்கு உண்டு என்று பிரசுரம் ஒன்று வெளியிட்டிருந்தனர்.

திரு.சேகு தாவூத் கொழும்பு ஈரோஸ் குழுவோடுதான் இருப்பதாக முன்னர் பேசப்பட்டது.

ஈரோஸ் என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் சிலர் வெற்றியீட்டி யுள்ளனர். ஆனால் இன்றுவரை ஈரோஸ் என்னும் அமைப்பின் தலைமை எதுவென்று யாருக்கும் தெரியவில்லை.

மட்டக்களப்பு மாநகர சபையில் ஈரோஸ் என்ற பெயரில் போட்டியிட்டவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிப்பது பற்றி யோசித்து வருவதாகத் தெரிகிறது.

அவ்வாறு அவர்கள் ஆதரவளித்தால் மாநகரசபையில் டெலோ-முஸ்லிம் காங்கிரஸ் கூட்டாச்சி ஏற்படுவது சிக்கலாகலாம்.

மட்டக்களப்பு மாநகர சபையின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே தென்படுகிறது.

திருகோணமலை நகரசபைத் தலைவராக திரு.சூரியமூர்த்தி தெரிவு செய்யப்படலாம். எனினும் திரு.நந்தன் என்பவரே சூரிய மூர்த்தியைவிட கூடுதலான விருப்பு வாக்குகள் பெற்றுள்ளார். தேர்தல் முடிவடைந்தவுடன் திரு.சூரியமூர்த்தி தமது ஆதரவாளர்களை சந்தித்து நன்றி தெரிவித்து வருகிறார். நகர சபைத் தலைவராக வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்து வருகிறார்.

## யாழ்ப்பாணத்தில் சீதனத் தடைச் சட்டம்

## விரைவில் வரும் என்று புலிகள் அறிவிப்பு!

வடபகுதியில் புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் சீதனம் வாங்குவது தடைசெய்யப்படவுள்ளது.

புலிகள் அமைப்பினரால் சீதனம் வாங்குவோருக்கு எதிரான 'தடைச் சட்டம்' ஒன்றை கொண்டுவரப்படவுள்ளதாக புலிகள் மகளிர் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியாகியுள்ள 'சுதந்திரப் பறவைகள்' என்னும் சஞ்சிகையில் 'சீதன தடைச் சட்டம்' பற்றிய கட்டுரை ஒன்று வெளியிடப்பட் டுள்ளது. 'சுதந்திரப் பறவைகள்' சஞ்சிகை புலிகள் மகளிர் பிரிவினரால் வெளியிடப் படுகிறது.

சீதன தடைச் சட்டம் என்று புலிகள் அமைப்பினரால் அறிவிக்கப்பட்ட பின்னர் சீதனம் வாங்குவோர் மட்டுமில்லாமல், வழங்குவோரும் அந்த அமைப்பினரால் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

சீதனக் கொடுமையால் பாதிக்கப்படும் குடும்பங்கள் மத்தியிலும் புலிகள் அமைப்பினரின் சீதன தடை அறிவிப்புக்கு வரவேற்பு கிடைக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## போரதீவிலும் புலிகள் பெயரில் சுவரொட்டி

மட்டக்களப்பு போரதீவுப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்ற திகதியன்று புலிகள் என்று குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகள் காணப்பட்டன.

தேர்தலுக்கு ஆதரவான வாசகங்கள் சுவரொட்டிகளில் காணப்பட்டன.

புலிகள் அமைப்பினர் தேர்தலை நிராகரித்தபோதும், புலிகள் அமைப்பின் பெயரில் சுவரொட்டிகள் வெளியிட்டு அதன்மூலம் இலாபம் அடையும் முயற்சிகள் கிழக்கில் பரவலாக நடைபெற்றுள்ளன.

## "இராணுவத்தீர்வுக்கே அரசு முன்னுரிமை"

## பெண்கள் தின அறிக்கையில் பிரபாகரன்!

இலங்கை அரசு பெரியதொரு போருக்கான தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. கடந்த 40 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்விற்கே முன்னுரிமை கொடுத்து வருகிறது. இவ்வாறு புலிகள் அமைப்பின் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் கடந்த மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்து விடவில்லை. சமாதான வழியில் எமது பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியுமானால் நாம் மகிழ்ச்சி அடைவோம். ஆனால் சமாதானத்தின் பாதைக்கு முட்டுக் கட்டையாக இருப்பவர்கள் யாரென்பதை உலகம் அறியும். என்றும் பிரபாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பெண்கள் புலிகள் இயக்கத்தோடு இணைந்து கொண்டு தமக்கெதிரான சமூக அநீதிகளை எதிர்த்துப் போராட முன்வரவேண்டும் என்று பிரபாகரனது அறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும் குரல் கொடுக்கும் உலகமானது சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் தமிழ் மக்களுக்காகவும் குரல் எழுப்பவேண்டும். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மார்ச் 8ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் பெண்கள் அமைப்பினரால் பெண்கள் எழுச்சி தின நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

பெண்கள் தினத்தை முன்னிட்டு வடக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளால் விடுமுறை தினம் அறிவிக்கப்பட்டது.

## மூதூர் விவசாயிகள் கவலை!

(திருமலை நிருபர்)

நெற் சந்தைப்படுத்தும் சபையால் உடனடியாகக் கொள்வனவு நிலையங்கள் மூதூர் பிரதேசத்தில் நிறுவப்படாவிட்டால் மூதூர் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்ற அச்சம் நிலவுகிறது.

இம்முறை முப்பதினாயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் விளைச்சல் ஏறத்தாழ இரண்டு இலட்சத்து நாற்பதினாயிரம் என எதிர்பார்க்கப் படுகிறது. நெற் சந்தைப்படுத்தும் சபை உதவ முன்வராவிட்டால் தனியாருக்குக் குறைந்த விலையிலேயே விற்று நட்டமடைய நேரும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

"கடன் பட்டுத்தான் எங்களில் அநேகமானோர் விவசாயம் செய்திருக் கிறோம். கொள்வனவு நிலையங்களைத் திறந்து அரசு எமக்கு உதவத் தவறினால் மேலும் நாங்கள் கடன்காரர்களாக்கப்பட்டு விடுவோம்" என்று அனுபவமுள்ள விவசாயிகள் முரசுக்குத் தெரிவித்தனர்.

## கிழக்கில் மூன்று பிரபாகரன்கள்

சமீபத்தில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் பிரபாகரன் என்ற பெயருடைய மூன்று வேட்பாளர்கள் போட்டியிட்டு தெரிவாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபைத் தேர்தலில் ஈரோஸ் என்று போட்டியிட்ட குழுவிற்கு இரா.பிரபாகரன் என்பவரே தலைமை தாங்கினார். அவர் தனது பெயரை (பிரபா) என்று சுருக்கமாக குறிப்பிட்டும் தனது பிரசுரத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

புலிகள் அமைப்பில் இருந்து மனம் திருந்தி வெளியேறி படையினரிடம் கரணடைந்தோர் என்று கூறப்பட்ட குழுவொன்றும் கிழக்கில் போட்டியிட்டது. மண்முனை மேற்குப் பிரதேச சபையில் போட்டியிட்ட அக்குழுவுக்கு பே.பிரபாகரன் என்பவர் தலைமை தாங்கியிருந்தார்.

மண்முனை, ஆரைப்பற்றை பிரதேச சபையில் எஸ். பிரபாகரன் என்பவர் போட்டியிட்டார்.

## வெடிகுண்டு சோதனை!



வாக்களிப்பது ஜனநாயக உரிமை. ஆனால் வாக்களிக்க வருபவர் எவராவது இடுப்பில் வன்முறையை கட்டிக்கொண்டு வந்தால் என்ன செய்வது? அதனால் பலத்த சோதனை. ராஜீவ் கொலைக்கு தானுவே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பெண்களின் இடையிலேதான் பாதுகாப்புப் பிரிவினரின் கவனம் செல்கிறது. அங்கிருந்துதான் சோதனை ஆரம்பம். இந்தப் படம் கிழக்கில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றின் முன்பாக எடுக்கப்பட்டதாகும்.

## காரணமின்றி வேலை நீக்கம் ஏன்?

## நீதி கேட்கிறார் மாகாண சபை ஊழியர்!

(திருமலை நிருபர்)

வேலை நீக்கம் செய்யப்பட்ட தன்னை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் செலவுத் தொகையுட்பட வேறு கொடுப்பனவுகளும் வழங்கப்படவேண்டுமென்றும் கோரி வடக்குக் கிழக்கு மாகாண சபைக்கு எதிராக ஊரியர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

ஜே.எஸ்.மரியதாஸ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில், சரியான கல்வித் தகமைகளுடன் முறைப்படி நியமனம் பெற்று நிரந்தரமாக்கப்பட்ட தன்னை அதிகாரத்துக்குப் புறம்பான வகையில் கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப்.எம்.ஏ.சி.முகைதீன் தகுந்த காரணமின்றி வேலை நீக்கம் செய்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளதுடன் வடக்குக் கிழக்கு மாகாண சபைப் பிரதம செயலாளர் முதலாவது எதிரியாகவும் வடகிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் இரண்டாம் மூன்றாம் எதிரிகளாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இவ் வழக்கின் மனுதார் சார்பில் சட்டத்தரணிகள் திரு.எம்.எம்.அப்போன்சோ, ஜனாப்.எம்.ஏ.சாலி ஆகியோர் ஆஜராகியுள்ளனர். மார்ச் 28ல் வழக்கு விசாரணைக்கு வரவிருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட்டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

### முகவர்கள் தேவை

**வலசுமுல்ல, ஹாலியகொட, எம்பிலிப்பிட்டிய, தனமல்வில, ஹம்புறுப்பிட்டிய, அம்பலாங்கொட, கரந்தெனிய, அக்குரஸ்ஸ, தெனியாய, நெலுவ, மிரிஸ்ஸ, அகலவத்தை, அம்பாறை.**

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.
Phone- 820265

### மிகக் குறைந்த கட்டணம்

கனடா (CANADA) போக வேண்டுமா?
வெளிநாடுகளிலிருந்து வரும் விமானப் பயணச் சீட்டுக்களை எதிர்பார்க்கவேண்டிய சிரமம் இப்போது இல்லை!
மிகக் குறைந்த -சலுகைக் கட்டணத்தில் விமானப் பயணச் சீட்டுக்களைப் பெறலாம்.

**விபரங்களுக்கு:**

Pyramid Air Services Ltd.
Consistory Building, 96-1/4, Front Street,
Colombo-11, Sri Lanka.
Tel: 449806-449154, 448104
**Fax:** 448104 **Telex:** 21975 Laksiri Ce Pyramids
**Cable:** AIRPYRAMID

IATA பதிவு பெற்றது

BAJAJ SUPER THREE WHEEL *சகல உதிரிப்பாகங்களும் விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள எமது காட்சி அறைக்கு விஜயம் செய்யுங்கள்.*

BOSCO
21, FIRST DIVISION, TECHNICAL JUNCTION
MARADANA.
Tel. 445823

### விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

Advertising Mananger
Thina Murasu
*No. 88/14, Somadevi Place,*
*Kirilapone, Colombo-5*
Tel: 820265


## பள்ளிவாசலை கவனியுங்கள்

அனுராதபுரம், கம்பிரிகஸ்வெவ பிரதேசத்துக்குட்பட்ட கட்டுக்கலியாவை எனும் முஸ்லிம்கள் பரந்து வாழும் இக்கிராமத்தில் அமையப் பெற்றிருப்பது 'மஸ்ஜிதுல் முனவ்வரா' பள்ளிவாசல்.

இப்பள்ளி வாசல் சுமார் ஒன்பது வருடங்களுக்கு முன் ஊர் மக்களின் முயற்சியால் தற்காலிக கூரை ஒன்றின் கீழ் மிகச் சிறிய அமைப்பாக நிர்மாணிக்கப்பட்டது. தற்போது ஊர் மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாகவும் இடம் பெயர்ந்து வந்தவர்களின் தொகை காரணமாகவும் இச் சிறிய பள்ளியில் இட வசதி பற்றாக்குறையின் காரணத்தால் தலைவர்; யூ.அகமட், பேஷ் இமாம் இப்றாகீம் லெவ்வை, ஆகியோரின் முயற்சியின் பயனால் புதிய பள்ளிவாசல் நிர்மாணத்துக்கான அத்திவாரம் இடப்பட்டு ஒருவருடமாகின்றது. இதன் கட்டட நிர்மாண வேலை இன்னும் ஆரம்பமாகவில்லை.

இதனை ஆரம்பிப்பதற்கு முஸ்லிம் சமூக கலாசார அமைச்சின் தொடர்பான அதிகாரிகள்அல்லது இது சம்பந்தப்பட்ட அத்தியட்சகர்கள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு இவ்வூர் மக்கள் வேண்டுகின்றனர்.

எ.எம்.மிஸுறுள்லாபி-கம்பிரிகஸ்வெவ.

# வேகமாகிவருகிறது வை.கோ. அலை!

## எதிர் நிற்க முடியாமல் தடுமாறுகிறார் கலைஞர்!!



**தமிழ்நாட்டில் இருந்து பூங்குருவி**

ஏப்ரல் மாதம் 16ம் திகதி தமிழ் நாட்டில் எழுச்சிப் பேரணி நடத்த தி.மு.க. (வை.கோ) அணியினர் தீர்மானித்துள்ளனர்.

"இந்தித் திணிப்புக்கு முடிவு கட்டுவதே அந்த எழுச்சிநாள் பேரணியின் முக்கிய நோக்கமாகும்" என்று வை. கோபால்சாமி தெரிவித்துள்ளார்.

"மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளையும் புறக்கணித்துவிட்டு இந்தியாவை இந்தி இந்தியாவாக்க முற்படுகின்றனர். இந்திய ஒருமைப்பாடு மக்களது உணர்வுகளோடு கலந்து சங்கமிக்க வேண்டுமானால் உண்மையான கூட்டாட்சி நடைபெறவேண்டும். அக் கூட்டாட்சியில் தமிழ் உட்பட அனைத்து தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாக அறிவிக்கப்படவேண்டும்" என்று வை.கோபால்சாமி கூறியுள்ளார்.

■

தி.மு.க. பிளவுபட்டமை தமிழ் நாட்டின் ஆளும் கட்சியான அ.இ.அ.தி.மு.க.வுக்கு மகிழ்ச்சியான விசயமாகவே இருந்தது.

காங்கிரஸ் கட்சியும் தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவை திருப்தியோடு நோக்கியது.

இப்போது கிணறு வெட்டப் பூதம் வந்த கதையாக வை.கோ. அணியினரது வளர்ச்சி அந்த இருகட்சிகளையும் யோசிக்க வைத்துள்ளது.

கலைஞர் சிறந்த அரசியல் தந்திரி. அற்புதமான பேச்சாற்றல் கொண்டவர். வாத, விவாதங்களில் அவரை வெல்ல ஆளே கிடையாது.

அதுவெல்லாம் இப்போது பழைய கதையாகி வருகிறது.

தான் யாரை வேண்டுமானாலும் தூக்கி எறியலாம் என்று கலைஞர் தன் செல்வாக்கைப் பற்றி அதிகமாக மதிப்பிட்டதற்கு எம்.ஜி.ஆர். அலை பதிலடியாக அமைந்தது.

"கூத்தாடிப் பயல்கள் கொஞ்சநாட்கள் கத்துவார்கள். பின்னர் அடங்கிப் போவார்கள்" என்று எம்.ஜி.ஆர். விலக்கப்பட்டபோது கண்ணதாசனிடம் கூறியவர் கலைஞர்.

அவரது நினைப்பை எம்.ஜி.ஆர். பொய்யாக்கினார்.

இப்போது மீண்டும் ஒரு பலத்த அடி.

கட்சியே மூச்சென்று உழைத்த முக்கியமான ஒரு தலைவரை கலைஞர் மிக அலட்சியமாக தூக்கி எறிந்ததை தி.மு.க.வினரால் கூட ஜீரணிக்க முடியவில்லை.

பல கட்சிகளுக்கு தாவியவர்களையும், தி.மு.க. தோல்வி கண்டபோதெல்லாம் கட்சியை விட்டு ஓடியவர்களையும் கலைஞர் மீண்டும் தன்பக்கம் ஈர்த்திருக்கிறார். பதவி கொடுத்திருக்கிறார்.

ஆனால், கட்சியே உயிர் என்று நேர்மையோடு உழைத்த வை.கோ. போன்றவர்களையும் வெளியேற்றத் துடித்திருக்கிறார்கள்.

தனக்குப் பின்னால் கட்சி வாழவேண்டும். அதற்கான துடிப்பான தலைமை வேண்டும் என்று நினைக்காமல் தனக்குப் பின்னரும் தன் குடும்ப ஆதிக்கமே கட்சிக்குள் நிலைக்கவேண்டும் என்று விரும்புகிறார் கலைஞர்.

வை.கோபால்சாமி போன்றவர்களைத் தட்டிக்கொடுத்து, அவர்கள் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்த்துச் செல்லவேண்டியவர். அவர்களை கட்சியில் இருந்து வெட்டிப் பிரித்துவிட நினைத்துவிட்டார்.

கட்சிக்குள் மறவர்கள் இருப்பதைவிட தன் மருமகன் மாறனின் பிடி இறுக்கமாக இருப்பதையே அவர் விரும்பத் தொடங்கி விட்டார்.

கோபால்சாமி கலைஞரைச் சந்தித்து கண்ணீர் விட்டார். தன் விசுவாசத்தைச் சொல்லி விரோதிகளின் கதை கேட்டுத் தன்னை வேறுபடுத்திப் பார்க்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். கலைஞர் எதையுமே காதில் போட்டுக் கொள்ளவில்லை. உண்மையான தொண்டனின் உணர்ச்சிகளை, உணர்வுகளைக் காலில் போட்டு மிதித்து விட்டார்.

விளைவு, கலைஞரின் உறைக்குள் தூங்குவதே மகிழ்ச்சி என்று, பல அவமானங்கள் சந்தித்தும் அமைதியாக இருந்த போர்வாள் இறுதியாக உறைவிட்டுக் கிளம்பியது.

அப்போது கூட தாயின் பரிவோடு தடுத்திருக்க முடியும். சுற்றியிருந்தவர்கள் சொல் கேட்டு கலைஞர் கடுமையாக நடந்து கொண்டார்.

கலைஞருக்கு எப்போதும் தன்னைப் புகழ்கின்றவர்களைப் பிடிக்கும்.

தன்னைவிட அதிகம் புகழப்படுகிறவர்களைப் பிடிக்காது.

ஆற்காடு வீரசாமி என்பவர் கலைஞர் முதல்வராக இருந்தபோது உணவு அமைச்சராக இருந்தவர்.

அப்போது அவர் செய்த ஊழல்கள் கட்டுமீறிப்போக, கலைஞருக்கே பொறுக்காமல் வீரசாமி வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

அந்த வீரசாமி இப்போதும் கட்சியின் முக்கிய தலைவர்.

காரணம்-வீரசாமியால் கலைஞருக்கும் ஆபத்தில்லை. அவர் குடும்பத்திற்கும் பாதிப்பில்லை. மு.க.ஸ்டாலின் தலைவரானால் வாழ்த்துச் சொல்ல வீரசாமி தயாராக இருப்பார். அது கலைஞருக்கும் தெரியும்.

வீரசாமிகளுக்கு உடன்பிறப்பு என்று அந்தஸ்து கொடுத்துவரும் கலைஞர், வீறுமிக்க கோபால்சாமி போன்றவர்களை உடனிருந்தே கொல்லும் துரோகிகள் என்று சொன்னதுதான் தி.மு.க. இளைஞர்களின் வெறுப்பை விசுவரூபம் எடுக்க வைத்திருக்கிறது.

இப்போது கழகச் செயல்வீரர்கள் எல்லாம் வை.கோவின் பக்கம் போய்க் கொண்டிருப்பதற்கும் அதுதான்-அந்த வெறுப்புத்தான் காரணமாக இருக்கிறது.

வை.கோ. அடிபட்ட பாம்பு. ஆனால் நல்ல பாம்பு என்கிறார்கள் வை.கோ. அணியினர். அந்தப் பாம்பை தன் வசப் படுத்தும் மகுடியை கலைஞர் இழந்துவிட்டார். இது ஆபத்துத்தான்.

வை.கோ. புலி ஆதரவாளர் என்று சொல்வதால் கட்சிக்குள் அவருக்கு இழைக்கப்பட்ட துரோகத்தை நியாயப்படுத்த முடியாது.

கலைஞரும் புலிகளை ஆதரித்தவர். ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபாவை புலிகள் சுட்டுக்கொன்றபோது கண்டும் காணாதது போல் இருக்குமாறு தமிழ்நாடு காவல்துறைக்கு கட்டளையிட்டவர்.

ராஜீவ் கொலைக்குப் பின் இந்திய அரசு புலிகளை தடைசெய்தவுடன், தொடர்ந்தும் ஆதரித்தால் சட்டப்பிரச்சனைவரும், அரசியல் செல்வாக்குக்கு பாதிப்புவரும் என்று நினைத்து கலைஞர் புலிகளைக் கண்டித்தார்.

ஆனால், வை.கோ. தன் சகோதரர் புலி ஆதரவாளர் என்று கைதுசெய்யப் பட்டபோதும், தனக்கும் பிரச்சனைகள் வரக்கூடும் என்ற போதும் புலிகளை கண்டித்துப் பேசவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை தமது அரசியலுக்கு பயன்படுத்துவதும், தமது அரசியலுக்கு பாதகம் என்றால் மௌனமாகி விடுவதுமே தமிழக அரசியல் தலைவர்கள் சிலரது வழிமுறையாக இருந்துவருகிறது.

அவர்களில் இருந்து வை.கோ. வேறுபட்டவராக இருக்கிறார்.

புலிகளை வை.கோ. ஆதரிப்பதும், புலிகள் பற்றிய வை.கோ.வின் நிலைப்பாடு சரியா? தவறா? என்பதும் வேறு விடயம். ஆனால், அரசியல் லாபம் கருதி ஒருவரை பயன்படுத்துவதும், பட்டென்று கைவிடுவதும் என்ற அரசியல் விளையாட்டில் வை.கோ. ஈடுபடக்கூடியவரல்ல என்பதுமட்டும் தற்போதைய அளவில் உள்ளங்கை நெல்லிக்கனி.

தமிழ் நாட்டில் வை.கோ. அலை வேகமாகி வருவது அரசியல் அநாகரிகங்களால் சலிப்படைந்தவர்கள் புதிய தலைமையை நாடுகிறார்கள் என்பதற்கான அத்தாட்சி ■

## வை.கோ. அடிபட்ட பாம்பு ஆனால் நல்ல பாம்பு!




## உள்ளது ஒரே ஒரு மைதானம்!

## மழைக்காலம் வந்தால் அதன் நிலையோ பரிதாபம்!!

(புத்தளம் நிருபர்)



புத்தளத்திலுள்ள ஒரேயொரு பகிரங்க விளையாட்டு மைதானமான நகரசபை விளையாட்டு மைதானம் மழைக் காலங்களில் சேறும், சகதியுமாய் காட்சி தருவதை படம் பளிச்சென்று காட்டுகிறது.

புத்தளத்திலுள்ள அனைத்து விளையாட்டு கழகங்களும் தமது தேவைகளை இங்குதான் பூர்த்தி செய்துகொள்கின்றன. அத்துடன் அரசு ஆதரவுடன் நடைபெறும் பொது நிகழ்ச்சிகளும், விளையாட்டுக்களும் இங்குதான் நடைபெறுகின்றன.

"இப்பகுதிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இவ்விளையாட்டு மைதானத்தை சீர்திருத்தி ஸ்டேடியமாக மாற்றித் தருவோம்" என அரசியல் தலைவர்களினாலும், அமைச்சர்களாலும் பலமுறை வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும் அவை யாவும் ஏட்டுச் சுரைக்காய்களாகவே இதுவரையும் இருந்து வந்துள்ளன.

"இனியாவது இம் மைதானத்தை திருத்தி அமைத்து ஒரு விளையாட்டரங்காக மாற்றி அமைக்க உயரதிகாரிகளும், இப்பகுதி அரசியல் வாதிகளும் முன்வர வேண்டும்" என விளையாட்டு வீரர்கள் 'தினமுரசி'டம் கருத்து தெரிவித்தனர்.

## புகார் பெட்டி

### வெள்ளத்தில் மூழ்கும் பாலமும் கிராமவாசிகளும்!

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சின்னச் சிப்பிக் குளம் எனும் கிராமமானது மன்னார் வீதியிலிருந்து தந்திரமலை செல்லும் பிரதான வீதியில் (மன்னார் வீதியிலிருந்து ஒரு மைல் தொலைவில்) அமைந்துள்ளது. இச் சின்னச் சிப்பிக் குளம் கிராமவாசிகள் முக்கிய தேவைகள் ஏற்படுமிடத்து, நகரங்களுக்கு செல்ல முடியாத அவல நிலையில் உள்ளனர். காரணம் என்னவெனில், சின்னச் சிப்பிக் குளத்திற்குச் செல்லும் வீதியில் பாலம் ஒன்று அமைந்துள்ளது. சுமார் முப்பத்தைந்தடி நீளமான இப்பாலம் மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கி காணப்படுகின்றது. இப்பாலத்தை மூடும் வெள்ளமானது பாலத்திற்கு அருகாமையில் குடியிருக்கும் கிராமவாசிகளின் குடி மனைகளை சேதப்படுத்தியதோடு பாரிய நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இப்பாலமானது சரியான முறையில் அமைக்கப்படாததே இதற்குக் காரணமாகும்.

இப்பாலத்தை சரிவர அமைத்து பாலத்தின் இரு மருங்கிலும் கைப்பிடிகள் கட்டுவதன் மூலம் பாலத்தை அச்சமின்றிக் கடக்க வாய்ப்புண்டு.

எனவே! இதை நிவர்த்தி செய்யுமாறு ஊர்மக்கள் சார்பாக அரசாங்கத்தினை கேட்டுக்கொள்கின்றேன்.

ஏ.ஜே.எம். நவ்பர்-வவுனியா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்







# ஆயுதமானது வாக்கு! அடிசறுக்கியது ஆனைக்கு!!

## உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒரு கண்ணோட்டம்

கிழக்கிலும்-வவுனியா நகரிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இரத்தக் களரி எதுவுமில்லாமல் நடந்து முடிந்தவுடன் அரசாங்கத்திடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது.

எந்தப் பக்கத்தால் வந்து தொல்லை கொடுப்பார்களோ என்று புலிகளைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்த படையினரும், எதிர்பார்க்கப்பட்டது போல் எதுவும் நடக்காமையால் பரம திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக இறுக்கமாகவே மேற் கொள்ளப்பட்டிருந்தன.

தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் நுழையக்கூடிய ஓட்டைகள் இல்லை என்று காட்டுவதில் படையினர் மிகுந்த கவனம் செலுத்தினார்கள்.

கிழக்கிலும்,வவுனியாவிலும் குட்டித் தேர்தல்களை நடத்தி முடிக்க அரசாங்கம் எடுத்த முடிவுக்கு படையினர் வழங்கிய உத்தரவாதமும் ஒரு காரணம். தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலமை தெளிவாக இருக்கிறது. அரசின் முடிவுகளை அமுல் நடத்த முடியும் என்று படையினர் தரப்பில் இருந்து கூறப்பட்டதாகவே தெரிகிறது.

ஆகவே, தமது உத்தரவாதத்தை உறுதிப்படுத்த படையினர் அதிகமாகவே அக்கறை எடுத்துக் கொண்டனர்.

தம்மோடு இணைந்து புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஒத்துழைக்கும் உதிரியான நபர்களை சுயேச்சைக் குழுக்களாக தேர்தலில் நிற்கவைத்து உற்சாகம் கொடுக்கும் அளவுக்கு அந்த அக்கறை சென்றிருந்தது.

சீனாவில் புரட்சி நடந்த போது மாஓசேதுங் தலைமையில் மக்கள் விடுதலைப் படைதான் ஆயுதப்படை.

மக்கள் விடுதலை இராணுவம் (செஞ்சேனை) போரிடுவதற்காக மட்டும் போரிடவில்லை. மக்களை அணிதிரட்டவும் போரிடுகிறது என்று மாஓ கூறினார்.

இலங்கை இராணுவத்தால் கிழக்கில் மக்களை அணிதிரட்ட முடிகிறதோ இல்லையோ குறைந்த பட்சம் சில சுயேச்சைக் குழுக்களையாவது அணியாக்கி நிறுத்த முடிந்திருக்கிறது.

அவற்றிலே சில வெற்றியும் பெற்றுள்ளன. அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு.சிறிசேன குரே "சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களும் நம்மவர்களே. அதனால் அவர்களுக்கு வாக்களித்தவர்களும் நம் ஆதரவாளர்களே" என்று கூறியிருந்தார்.

ஆனால், படையினரால் நிறுத்தப்பட்ட சுயேச்சைக் குழுக்கள் மட்டுமில்லாமல், தமிழ் அரசியல் கட்சிகள் நிறுத்திய சுயேச்சைக் குழுக்களும் அரசாங்கத்திற்கு விரோதமாக செல்லக் கூடியவையல்ல.

நண்பர்கள் தமக்குள் இரு குழுவாக பிரிந்து கிரிக்கெட் ஆடுவது போல், அரசாங்கத்திற்கு ஆதரவான தமிழ் அமைப்புக்கள் தேர்தல் விளையாட்டில் ஆளும் கட்சியோடு போட்டியில் ஈடுபட்டன. நட்பு ரீதியான ஒரு போட்டி. எனினும் பார்வையாளர்களுக்கு சுவாரசியம் கொடுக்கவும், கைதட்டல் வாங்கவும் எதிரிகள் மோதுவது போல் விளையாடிக் காட்டி விட்டார்கள்.

விளையாடி முடிந்தவுடன் திரு. சிறிசேன குரே உண்மையைச் சொலலிவிட்டார்.

தேர்தல் சமயத்தில் ஆளும் கட்சிக்கு எதிராக அதிவேகப் பந்துகளை வீசிய தமிழ் கட்சிகளும் சுயேச்சைகளும் அமைச்சர் சிறிசேன குரேயின் 'அவர்களும் நம்மவர்களே' என்ற கருத்துப் பற்றி வாயே திறக்கவில்லை.

ஆனால், வவுனியாவிலும், கிழக்கிலும் வாக்களித்துள்ளவர்களில் பெரும்பான்மையினர் ஆளும் கட்சிக்கு எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாநகர சபை, திருகோணமலை, வவுனியா நகரசபைகள் என்பவற்றை கைப்பற்றிக்கொள்ள ஆளும் கட்சி தீவிரமாய் முயன்றது.

குறிப்பாக வவுனியா நகரசபையைக் கைப்பற்ற யானை சின்னத்தோடு நம்பிக்கையை தும்பிக்கையாக்கி பலத்த முயற்சி மேற் கொள்ளப்பட்டது.

அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன் வவுனியா நகரசபையை கைப்பற்றிவிட வேண்டும் என்று தனிப்பட்ட ரீதியிலும் ஒரு சவாலாக நினைத்து களத்தில் இறங்கினார்.

தமிழ் அரசியல் கட்சிகள் எவற்றுக்கும் மக்களின் ஆதரவே கிடையாது. அவை பற்றி கருத்தில் கொள்ளவே தேவையில்லை என்ற ரீதியில் செயற்பட்டு வருகின்றவர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன்.

அவரது நம்பிக்கை தவறானது, அவரது கணிப்பு பொய்யானது என்பதை வவுனியா வாக்காளர்கள் நாகரிகமான முறையில் எடுத்துச் சொல்லிவிட்டார்கள்.

மட்டக்களப்பு மாநகரசபையில் கணிசமான தமிழ் பேசும் வாக்காளர்கள் யானைக்கு வாக்களித்துள்ளார்கள்.

திருமலை நகரசபையில் தமிழ் பேசும் வாக்காளர்கள் யானைக்கு மட்டுமல்ல, பெரும்பான்மை இன கட்சிகள் யாவற்றுக்குமே தமது பலத்த எதிர்ப்பினை வெளிப் படுத்தியுள்ளார்கள்.

அது மட்டுமில்லாமல் கலைக்கப்பட்ட மாகாண சபையின் ஆளும் கட்சியில் இருந்து தற்போது விலகிவந்து தேர்தலில் குதித்த வேட்பாளர்கள் சிலருக்கும் அன்று நடந்ததை என்றும் மறவோம் என்ற ரீதியில் தமது எதிர்ப்பைக் காட்டியுள்ளார்கள்.

கட்சி மாறி வந்தாலும் முகங்கள் ஒன்றுதான். தாமும் சேர்ந்து ஆடிவிட்டு தலைமையை மட்டும் குறை கூறிக்கொண்டு காற்றுள்ளபோது தூற்றிக் கொள்வோருக்கு வாக்காளர்கள் நெத்தியடி வழங்கியுள்ளார்கள்.

எல்லோருமே தவறான முகங்களாகத் தெரிந்தபோது ஊரவர்கள் யார்; உறவினர்கள் யார் என்று பார்த்தும் வாக்களித்துள்ளார்கள்.

கிழக்கில் முஸ்லிம் காங்கிரசின் கதை முடிந்துவிட்டது.

மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றபோது இருந்த சூழல் வேறு, தற்போதுள்ள சூழல் வேறு என்றெல்லாம் பேசப்பட்டது.

ஆனாலும், முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர்களது பலத்தோடு பிரச்சாரப் போர் நடத்திய ஆளும் கட்சியை வெற்றி கொண்டுள்ளது என்றே கூறவேண்டும்.

முஸ்லிம் காங்கிரசின் நடவடிக்கைகளால் தான் வடக்கில் இருந்து முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றினார்கள் என்று அமைச்சர் அஸ்வர் வவுனியா பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

அரசியல் வேறுபாட்டின் காரணமாக மிகத் தவறான முடிவுக்கு, அல்லது தவறான கருத்தை மக்களுக்கு சொல்லுகின்ற நிலைக்கு அமைச்சர் அஸ்வர் சென்றமை துரதிஷ்டமானது.

புலிகள் கூட அப்படியொரு காரணத்தை இதுவரை சொல்லவில்லை. அமைச்சர் அஸ்வரின் கருத்துப்படி பார்த்தால் முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றியதில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்று அர்த்தமாகிவிடும்.

முஸ்லிம்களை புலிகள் வெளியேற்றியதை கண்டிக்காமல், முஸ்லிம் காங்கிரசை குற்றம் சாட்டியமையும் கவனிக்கத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு எதிராகவும் தமிழ்- முஸ்லிம் மக்களின் ஒற்றுமை பற்றியும் பிரசாரக் கூட்டங்களில் பேசியிருந்தார்.

ஆளும் கட்சியில் உள்ள முஸ்லிம் அமைச்சர்கள் தமிழ்- முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தினார்கள். ஆயினும் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு ஆதரவாகவே பேசினார்கள்.

எனினும் கிழக்கில் ஆளும் கட்சிக்கு கிடைத்த வாக்குகளில் கணிசமானவை அமைச்சர்கள் மஜீட், மன்சூர் ஆகியோரின் தனிப்பட்ட செல்வாக்குகள் காரணமாக கிடைத்தவையாகவே இருக்கின்றன. ஜனாதிபதியின் உரைகள் முஸ்லிம் மக்களையும் அதிருப்தியடையவே வைத்துள்ளன.

கிழக்கே ஆனைக்கு அடி சறுக்கியது என்றால் சமீபகால பெரும்பான்மை சிறுபான்மை பேச்சுக்களும் அதற்கு ஒரு முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு முஸ்லிம்களின் வாக்குகள் குறிப்பிட்டு கூறக்கூடிய அளவுக்கு கிடைத்துவிடவில்லை.

செல்வாக்குள்ள முஸ்லிம் பிரமுகர்கள் எவரும் தமிழ் அரசியல் கட்சிகளில் இல்லாமல் போனதும் அதற்கு ஒரு முக்கிய காரணம்.

எனினும், ஒரு விடயம் கவனிக்கத் தக்கது. கிழக்கில் முக்கிய சபைகளை கைப்பற்றி அதிகாரபீடத்தில் யானையால் ஏறமுடியாத போதும் ஒரு இலட்சத்து எழுபதினாயிரம் வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளது.

அதன் மூலம் கிழக்கில் பலம்வாய்ந்த தனி ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியே விளங்குகிறது.

சுயேச்சைக் குழுக்கள் அனைத்தும் கிழக்கில் பெற்ற வாக்குகளை கூட்டிக் கணக்குப் பார்த்தால்கூட அவை பெற்ற மொத்த வாக்குகள் ஒரு இலட்சத்து ஐம்பத்தி ஏழாயிரத்தில்தான் நிற்கின்றன. சுயேச்சைகளோடு முஸ்லிம் காங்கிரஸ் பெற்ற வாக்குகளையும் கூட்டினால் தான் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை தாண்ட முடிகிறது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி அறுபத்தி மூவாயிரம் வாக்குகளை கிழக்கில் பெற்றுள்ளது.

ஆளும் கட்சியோடு ஒப்பிடும் போது அது பெற்ற வாக்குகள் மிகச் சொற்பமே. அதுமட்டுமல்லாமல் தமிழ் வாக்காளர்கள் ஆளும் கட்சியைவிட, முன்னர் ஆட்சி செய்த சுதந்திரக் கட்சி மீதுதான் அதிக வெறுப்புக் காட்டியிருக்கிறார்கள்.

ஆனாலும், தேர்தலில் போட்டியிட்ட எந்தவொரு தமிழ் கட்சியும் சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையைக்கூட தனித்துப் பெற முடியவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் 87 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஆனால் எந்தவொரு தமிழ் கட்சியும் தனித்து நின்று கணிசமான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஒன்றுபட்ட அரசியல் தலைமைத்துவம், சகல தமிழ் மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் சக்தி தமிழர்கள் மத்தியில் வெற்றிடமாகி விட்டதையே முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.

ஒன்றுபட்டு ஒரே சின்னத்தில் கேட்க முடியாமல் தனித்து பிரிந்து போட்டியிட்டார்கள். இப்போது பிரிந்து போன வாக்குகளை ஒன்று கூட்டிக் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இறந்து போனவர்கள் எழுந்து வந்து வாக்களிக்கும் அதிசயங்களும் தேர்தல்களில் நடப்பது வழக்கம்.

இறந்தவர்களும், இடம் பெயர்ந்தவர்களும் கல்லறையிலும், கண்காணாத் தூரத்தில் இருந்தும் வாக்களித்த அதிசயங்கள் இம் முறையும் நடந்துள்ளதாக அரசியல் கட்சிப் பிரமுகர்கள் சிலர் கூறியிருக்கிறார்கள்.

மக்களின் பிரதிநிதிகளாக விருப்பம் கொண்டு தேர்தலில் நின்ற சிலர், மக்களது வாக்களிக்கும் உரிமையையும் தாமே பிரயோகித்து விட்டதாகவும் அதனால் வாக்களிக்க வந்தவர்கள் வாக்களிக்கும் சிரமமே இல்லாமல் திரும்பிச் செல்ல வேண்டி இருந்ததாகவும் கூறப்படுகிறது.

எனினும், ஆளும் கட்சி மீது மட்டுமே புகார்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், வேறு பல சுயேச்சைக் குழுக்களும் வித்தை காட்டியதாகவே தெரிகிறது. வீதத்தில் வேண்டுமானால் குறைவாக இருக்கலாம்.

திருகோணமலையில் நகர சபையில் ஆளும் கட்சி தலைமை வேட்பாளர் மீள முடியாத அடி வாங்கியிருக்கிறார். அவருக்கு விழுந்த விருப்பு வாக்குகளை கணக்குப் பார்த்தால் நூறைக் கூட தாண்டவில்லை. அதிலும் ஒருவருக்கு விருப்பு வாக்கு மூன்று என்ற அடிப்படையில் பார்க்கும் போது அவருக்கு அவரது உறவினர்கள்கூட வாக்கால் அடித்துவிட்டார்களோ என்று கவலைப்பட வேண்டியிருக்கிறது.

குடியேற்றத்திட்டங்கள், மற்றும் பாதிப்புக்கள் யாவற்றுக்கும் வாக்கு- ஆயுதத்தால் பதிலடி கொடுத்திருக்கிறார்கள்.

"பொலிஸ் பிடித்தால் என்னிடம்தான் ஓடிவர வேண்டும்" என்று கிட்டத்தட்ட மிரட்டல் அர்த்தத்தில் பேசப்பட்ட பேச்சுக்கள் வாக்காளர்களை ஆத்திரப்படுத்திவிட்டன.

வவுனியாவில் புளொட் தனது சொந்தப் பலத்தில் வெற்றியீட்டியிருக்கிறது.

தனது முக்கிய உறுப்பினர்களை, அதுவும் அப்பகுதியில் நீண்டகாலம் இருந்து மக்களுக்கு பரிச்சயமானவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியது மூலம் புளொட் அமைப்பு அரசியல் பலத்தை அங்கு வெளிப்படுத்த முடிந்தது.

மேலும் புளொட் வவுனியாவில் செய்த பிரசாரங்களில் தாம் புலிகளுக்கு ஆதரவாளர்கள் என்பதுபோல் காட்டும் சில்லறைத் தனங்கள் இருக்கவில்லை.

ஆனால் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் புலிகள் தம்மை ஆதரிக்கிறார்கள் என்பது போல் சில சுயேச்சைக் குழுக்கள் காட்டிக்கொண்டன.

திருமலை நகர சபைப் பகுதியில் தேர்தல் தினத்தன்று காலை ஒரு சுவரொட்டி தோன்றியது.

'மண்ணைக் காப்பாற்றக் கூடிய தமிழர்களுக்கு வாக்களியுங்கள்' என்ற வாசகங்களோடு புலிகள் அமைப்பினரால் வெளியிடப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மட்டக்களப்பில் தம்மை ஈரோஸ் என்று கூறிக்கொள்ளும் குழுவைச் சேர்ந்த ஒரு வேட்பாளர் வெளியிட்ட பிரசுரம் வேடிக்கையானது.

அவரது பெயர் பிரபாகரன். அடைப்புக் குறிப்புக்குள் பிரபா என்றும் சுருக்கமாகப் போட்டுக்கொண்டார். 'தமிழினத்தின் தனித்துவத்தைப் பேண பிரபாகரன்' என்று பிரசுரத்தில் தலைப்பிடப்பட்டிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்துகொண்டு அவர் வெளியிட்ட பிரசுரம் இராணுவத்தினரின் கண்களில் படாமல் இல்லை. அவர்களுக்கு தெரியும்; மக்களின் கண்களில் மண் தூவத்தான் அப்படியொரு பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார் என்று. இல்லாவிட்டால் அந்தப் பெயரோடு அவர் இதுவரை வெளியே இருப்பதே சந்தேகம்தான். மக்களை ஏமாற்றி வெட்கம் கெட்ட தனமாக பிரசாரம் செய்து பிரதிநிதியாவது வெட்கம் கெட்ட பிழைப்பு. ஆனால் என்ன செய்வது? சொல்லிக்கொள்ள சொந்தமாக ஒரு தகுதியும் இல்லையல்லவா?

எப்படியோ தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. அரசாங்கத்திற்கு நிம்மதி.

தமிழ் பேசும் வாக்காளர்கள் தமது எதிர்ப்புணர்வை வாக்கை ஆயுதமாக்கி வெளிப் படுத்தியுள்ளார்கள். வாக்குகளை பெற்றுக் கொண்டவர்கள் இனி என்ன செய்யப்போகிறார்கள் என்பதே கேள்வி. பார்க்கலாம்! பொறுத்திருந்து பார்க்கலாம்!

"தமிழினத்தின் தனித்துவத்தைப்பேண"
பிரபாகரன்
மட்டக்களப்பு மாநகரசபைத் தேர்தலில்
ஈரோஸ் சுயேச்சைக்குழு - 03



இரா. பிரபாகரன் (பிரபா)
இல. 14X | X | X

**மட்டக்களப்பில்
தானும் ஒரு பிரபாகரன் என்று தேர்தலில் நின்ற வேட்பாளர்.
திருமலையில்
புலிகள் என்று போஸ்டர் ஒட்டி ஆதரவு தேடிய வேடிக்கையான வேட்பாளர்கள்**

---

# அதிரடி அய்யாத்துரை



புள்ளடி போடும் இடம் ஒன்றுக்கு ஒரு கட்சிப் பிரதிநிதி போயிருக்கிறார். உள்ளே பார்த்தவருக்கு அதிர்ச்சி. ஏன் தெரியுமோ? ஏற்கனவே உள்ளே இருந்த வேறு ஒரு கட்சிப் பிரமுகர் அள்ளி அள்ளி வஞ்சமில்லாமல் போட்டுக் கொண்டிருந்திருக்கிறார். "இதென்ன வேலை?" என்று இவர் கேட்க, அவர் அலட்டிக் கொள்ளாமல், 'கண்டுட்டானே பாவி' என்று பதறாமல் இயல்பாய் சொன்னாராம். "நீரும் வந்து உமக்கும் கொஞ்சம் அள்ளிப் போடும் தம்பி!" பார்த்தியளோ எள்ளானாலும் எட்டாய் பிரிஎண்ட மாதிரியான தாராளகுணம் எங்கையெல்லாம் வேலை செய்யிது.

இருக்கிறவர்களுக்கு மட்டுமில்லைப் பாருங்கோ. இறந்தவர்களுக்கும் பிரதிநிதியா இருக்கிறம் எண்டு துணிஞ்சு சொல்லக்கூடிய தகுதி-திறமை சிலருக்கு மட்டும்தான் வாய்க்கும். பணம் எண்டால் பிணமும் வாய் திறக்கும் எண்ட முதுமொழியோடை இதையும் சேர்க்க வேணும் பாருங்கோ. எலக்சன் வந்தா இறந்தவனும்..... (கீறிட்ட இடத்தை நீங்களே நிரப்புங்கோ)

சாதாரண காலத்திலை வயோதிபர்கள் வழுக்கி விழுந்தால்கூட பார்த்தும் பார்க்காத மாதிரிப் போற ஆட்களை பழிவாங்க வேண்டும் எண்டால் ஒரு வேலை செய்ய வேணும். அவையைப் பிடிச்சு வேட்பாளராய் போடவேணும். ச்...சா என்ன பக்குவமா தாங்களே வாகனம் கொண்டுவந்து "நடக்கிறது உங்கள் காலுக்கு ஆகாது." எண்டு சொல்லி வாக்களிப்பு நிலையங்களுக்கு பக்குவமாய்க் கொண்டுபோய் இறக்கினவை தெரியுமோ. கைச் செலவுக்கும் சிலர் நீட்டியதாயும் கேள்வி.

கிழக்கிலை ஒரு தேர்தல் பிரச்சாரக் கூட்டம். வேட்பாளர் ஒருத்தர் ஆவேசமாய் விளாசிக் கொண்டிருந்தார். திடீரென்று பாருங்கோ கூட்டத்தில் இருந்து ஒரு அம்மா எழும்பி, "அதெல்லாம் இருக்கட்டும் தம்பி. இத்தனை நாளும் நீர் எங்கை போய் இருந்தனீர்?" எண்டு கேட்டா. பாருங்கோ ஒரு கேள்வி. எண்டாலும் மேடையை விட்டு இறங்கி ஓடாமல் இருந்தது அந்த வேட்பாளரின் துணிச்சலை காட்டிப் போட்டுது.

கொழும்பிலை ஒரு தியேட்டர். யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த குடும்பம் படம் பார்த்துக்கொண்டிருந்தது. திடீரென்று அந்தக் குடும்பத்து சின்னப் பையன் எழும்பி, "அம்மா இவளவு பெரிய ரி.வியை அங்கை ஏன் காட்டேல்லை. டெக் எங்கையம்மா கிடக்குது?" எண்டு கேள்விமேல் கேள்வி. "பேசாமல் இரடா" என்று அம்மா அடக்கிப் போட்டா. யாழ்ப்பாண பிள்ளைகளுக்கு வெளியிலை வந்தா பல விசயங்கள் புதினமாய்த்தான் படும். அந்தளவுக்கு பின்னுக்கு போய்க் கொண்டிருக்குது பாருங்கோ யாழ்ப்பாணம்.

முரசு ஊழியர் ஒருவர் கொழும்பிலை வழிப்பறி கோஷ்டி வசம் மாட்டியிருக்கிறார். எங்கே வேலை செய்யிறனீர்? எவ்விடம் சொந்த இடம்? எண்டெல்லாம் விசாரிச்சினமாம். போலியள் எண்டு விளங்கிக்கொண்டு அவர் சேட்டுக் கையை மடிச்சுவிட்டு மல்லுக்கட்ட ரெடியாகியிருக்கிறார். உசாராகிறார் எண்டு தெரிஞ்சவுடனை கோஷ்டி மெல்ல நழுவிப் போட்டுது. மடியிலை கனமில்லாமல்கூட மனதிலை எங்கடை ஆக்கள் சிலர் பயப்படுறதுதான் சுருட்டிகளுக்கு வசதியாகிறது எண்டதை மறக்கக்கூடாது.

இப்ப பாருங்கோ சோகப்பாட்டுகள் எண்டு சொல்லி எத்தனை பாட்டுகள் வருகுது. எத்தனை வந்தாலும் பாரதியார் சோகத்தை சொன்ன நயம் வருமோ?

"பாலுங் கசந்த தடி!-சகியே!
படுக்கை நொந்த தடி!
கணமும் உள்ளத்திலே-சுகமே
காணக் கிடைத்ததில்லை."

படிக்கேக்கையே, விழிகள் குளமாகுதல்லோ. அவர்தான் கவிஞர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# உலக வலம்







யாசிர் அரபாத்

# பேச்சுக்களுக்கு வேட்டுவைத்த மனித வேட்டை!

## பாலஸ்தீன படுகொலைக்கு பாரெங்கும் கண்டனங்கள்!!

இஸ்ரேலை நம்பவேண்டாம். தொடர்ந்து போரிடுவதே உகந்த வழி என்றார்கள் யாசீர் அரபாத்துக்கு எதிரானவர்கள்.

சமாதானத்திற்காக முயன்று பார்ப்பதில் தவறில்லை என்று இஸ்ரேல் பிரதமர் ராபினுடன் கைகுலுக்கினார் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்.

கடந்த ஆண்டின் மிகப் பிரபலமான கைகுலுக்கலாக அது அமைந்தது.

அரபாத் விரோதக் குழுக்கள் சீற்றம் கொண்டன. எதிர்ப்புத் தெரிவித்து பேரணிகள் நடத்தின.

என்றாலும் யாசீர் அரபாத் சளைத்துவிடாமல் சமாதானப் பேச்சுக்களை நடத்தினார்.

பேச்சுக்கள் தொடர்ந்தபோதும் பாலஸ்தீனப் பகுதிகளில் இருந்து தனது இராணுவத்தை விலக்கிக்கொள்ளாமல் இஸ்ரேல் இழுத்தடித்து வருகிறது.

இந்த நிலையில் கடந்த மாதம் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் உள்ள ஜோர்தான் நதியின் மேற்குக் கரைப் பகுதியில் உள்ள ஹெப்ரான் பகுதியில் 50க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த சமயத்தில் வேட்டையாடப்பட்டனர்.

மசூதி இரத்த வெள்ளமானது. 170க்கும் மேலானவர்கள் படுகாயமடைந்தனர்.

முஸ்லிம்கள் மீது கொலை வெறி வேட்டை நடத்தியவன் அமெரிக்காவில் இருந்து வந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் பகுதியில் குடியேறியவன் என்று கூறப்படுகிறது.

ஆனால், கொலை பாதக நடவடிக்கைக்கு பின்னால் இஸ்ரேலிய இராணுவம் இருந்திருக்கிறது என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் குற்றம் சாட்டியிருக்கிறது.

கொலை வெறித் தாக்குதல் நடவடிக்கையில் இஸ்ரேலிய இராணுவத்தின் பங்கும் உண்டு என்று யாசீர் அரபாத் கூறியிருந்தார்.

பலஸ்தீன மக்களையும், உலகெங்கும் உள்ள முஸ்லிம் மக்களையும் மட்டுமல்லாமல் சமாதான எண்ணமும், மனித நேயமும் கொண்ட சகலரையும் கோபப்பட வைத்துள்ள கொலை வெறி வேட்டை சமாதானப் பேச்சுக்களுக்கு தடையாக எழுந்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் படுகொலை நடவடிக்கையை கண்டித்துள்ளார். எனினும் சமாதானப் பேச்சுக்கள் தடைப்படாமல் தொடர வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்.

பாலஸ்தீன மக்கள் கோபத்திலும், சோகத்திலும் ஆழ்ந்துள்ள இந்த நேரத்தில் பேச்சுக்களை தொடர்வது சாத்தியமாக இருக்காது. சரியாகவும் இருக்காது என்று யாசீர் அரபாத் உணர்ந்துள்ளார்.

அமைதிப் பேச்சுக்களைத் தொடரும் படியான அமெரிக்காவின் கோரிக்கையை பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுக் கொண்டால் பாலஸ்தீன மக்களின் அதிருப்தியை சம்பாதிக்க வேண்டியே ஏற்படும். இஸ்ரேலுடன் அமைதிப் பேச்சு இனி இல்லை என்று பாலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) செய்துள்ள முடிவு உடனடியாக மாற்றப்படக்கூடியதல்ல.

இஸ்ரேல் இராணுவத்தின் பங்கு படுகொலையில் உண்டு என்று யாசீர் அரபாத் கூறியிருப்பதால், மீண்டும் சமாதானப் பேச்சை உடனடியாகத் தொடரும் எண்ணம் அவருக்கும் இல்லை என்றே தெரிகிறது.

ஹெப்ரான் மனித வேட்டை "இஸ்ரேலை நம்பமுடியாது." என்று கூறிவந்த பாலஸ்தீன தீவிரவாதக் குழுக்களுக்கு பலம் சேர்த்துள்ளது. கடந்த வருடம் பெரிதாகப் பேசப்பட்ட மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளுக்கு இரத்த ஆற்றின் மூலம் குறுக்கே தடை போடப்பட்டுள்ளது.

ஹெப்ரான் படுகொலைகளுக்கு பழி வாங்கும் நடவடிக்கைகளில் பாலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் ஈடுபடக்கூடும். அப்படி நேர்ந்தால் சமாதானப் பேச்சு வார்த்தைகள் பற்றிய பேச்சுக்களைக்கூட எழுப்பமுடியாமல் போகும்.



ஹெப்ரான் படுகொலையைக் கண்டித்து புதுடில்லியிலுள்ள இஸ்ரேலியத் தூதரகம் முன்பாக அகில இந்திய முஸ்லிம் அமைப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியபோது...

## வரி விதிப்பால் குழப்பம்!

தைவான் அரசு ஒரு முடிவு செய்திருக்கிறது. சகல தொழில்களுக்கும் வரி அறவிடும்போது ஒரு தொழிலை மட்டும் கவனிக்காமல் இருந்து விட்டோமே என்று நினைத்து புதிய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இனிமேல் தைவானில் உள்ள விபச்சாரிகள் தங்கள் வருமானத்திற்கு ஏற்ப அரசுக்கு வரிகட்ட வேண்டும்.

முடிவு செய்யப்பட்டுவிட்டாலும் கூட அதனை நடைமுறைப்படுத்துவதில் ஒரு சிக்கல். அதனால் வருமான வரி அதிகாரிகள் குழம்பிப் போய் இருக்கின்றனர்.

முதல் பிரச்சனை, விபச்சாரிகள் யார் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? என்பது.

இரண்டாவது பிரச்சனை, விபச்சாரிகளின் உண்மையான வருமானத்தை எப்படி அறிவது? என்பது ஒரே குழப்பம்தான்!

## காவலர் கடத்திய விமானம்

இதுவரை விமானக் கடத்தல் சம்பவங்கள் பல நடந்துள்ளன. பயங்கரவாதிகள் அல்லது தீவிரவாதிகள்தான் இதுவரை விமானங்களை கடத்தியிருக்கின்றனர்.

ஆனால் காவலுக்கு நின்ற பொலிசார் விமானத்தை கடத்திய சம்பவம் ஒன்று அல்ஜீரியா நாட்டில் நடந்துள்ளது.

வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு அல்ஜீரியா. அங்கு விமானம் ஒன்றை மூன்று பொலிசார் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட விமானத்தில் 120 பயணிகள் இருந்தனர்.

கடத்தப்பட்ட விமானம் ஸ்பெயின் நாட்டில் உள்ள தென்கிழக்கு நகரான அலிகண்டேயில் தரை இறங்கியது. பயணிகள் அனைவரையும் விடுவித்த பொலிசார் தாமும் சரணடைந்தனர்.

அவர்கள் மூவரும் முஸ்லிம் பழமைவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## குறைந்த வயதில் திரு மணம்! இணைந்து வாழத் தடை!

சீனாவில் மிகவும் இளம் வயதில் குழந்தை பெற்றுக் கொள்ளுவதை தடுக்க சீன அரசு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

சீனாவில் பெண்ணுக்கு திருமண வயது 20,22 ஆனாலும் சீனாவின் கிராமப் புறங்களில் அந்த வயதெல்லையை எட்டுவதற்கு முன்னரே திருமணங்கள் நடந்துவிடுகின்றன. ஆண்டு ஒன்றுக்கு 16 இலட்சம் திருமணங்கள் அவ்வாறு நடக்கின்றன.

தற்போது சீன அரசு விதித்துள்ள கட்டுப்பாட்டின்படி குறைந்த வயதில் திருமணம் செய்யும் தம்பதிகள் திருமண வயது அடையும்வரை இணைந்து வாழ அனுமதிக்கப்பட மாட்டார்கள். கிராமங்களில் குறைந்த வயதில் நடக்கும் திருமணங்களைக் கண்டுபிடித்து தம்பதிகளை பிரித்துவைக்கும் அதிகாரத்தை உள்ளூர் அதிகாரிகளுக்கு வழங்கும் புதிய சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

## செயற்கை மார்பகத்தில் கோளாறு! பல கோடி ரூபாய்கள் நஷ்டஈடு!!

தமது மார்பகங்கள் அழகாகவும், எடுப்பாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பும் அமெரிக்கப் பெண்கள் செயற்கை மார்பகங்களை பொருத்திக்கொள்ள ஆரம்பித்துள்ளனர். சிலிக்கன் மார்பகம் என்று அதற்குப் பெயர்.

அவ்வாறு செயற்கை மார்பகம் பொருத்திக்கொண்ட மூன்று பெண்களுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டது. மார்பகத்தினுள் வைக்கப்பட்ட சிலிக்கன் தரம் இல்லாமையால் தமது உடல் நலம் பாதிக்கப்பட்டதாக அறிந்த மூன்று பெண்களும் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி அந்தப் பெண்களுக்கு செயற்கை மார்பகம் பொருத்திய நிறுவனங்கள் தவறு செய்துவிட்டதாக கண்டறிந்தார். அதனால் மூன்று பெண்களுக்கும் 12 கோடியே 90 இலட்சம் டொலர் நஷ்ட ஈடாக செலுத்தப்படவேண்டும் என்று அந்த நிறுவனங்களுக்கு கட்டளையிட்டார்.




### எச்சரிக்கை

காஷ்மீர் பிரச்சனையில் பாகிஸ்தான் தலையிடுவதை எதிர்த்து இந்தியாவில் பரவலான கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன. தமிழக தினமணி பத்திரிகை வெளியிட்டுள்ள கார்டூன் சித்திரமே அருகில் உள்ளது.

## அயல் நாட்டில் அதிசய குழந்தை கை நாலு–கால் நாலு–காது நாலு



தமிழ் நாட்டில் உள்ள இளையான்குடி மகப்பேறு மருத்துவ மனையில் இளம் பெண் ஒருவருக்கு அதிசய குழந்தை பிறந்துள்ளது. இளையான்குடியில் உள்ள கரும்புக் கூட்டம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சேகர்-திருமலைச் செல்வி தம்பதியினர்.

இளையான்குடியில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட திருமலைச் செல்வி (வயது 26) கடந்த பெப்ரவரி 26ம் திகதி அன்று அதிசயக் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார்.

அந்தக் குழந்தைக்கு 4 கைகள், 4 கால்கள், 4 காதுகள் என்பன இருந்தன. பிறந்த சில நிமிடங்களில் குழந்தை இறந்துவிட்டது. செய்தியறிந்த பெருந்தொகையான மக்கள் கூட்டம் கூட்டமாக மருத்துவ மனைக்கு வந்து குழந்தையை பார்வையிட்டனர். சேகர்-திருமலைச் செல்வி தம்பதியினருக்கு ஏற்கனவே ஆறு வயதில் ஒரு பெண் குழந்தையும், இரண்டு வயதில் ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர்.

## சிந்தியா பதில்கள்

அந்தக் காலப் பெண்கள் மண் பார்த்து நடந்தார்கள். இந்த காலப் பெண்கள்?

**எம்.மகேந்திரன்**

இப்போதெல்லாம் விபத்துக்கள் அதிகமாகும் காலம். மண்ணை மட்டும் பார்த்தபடி நடந்தால் என்னாவது? வீதி ஒழுங்கின்படி நிலத்தையும் பார்க்கவேண்டும். நேரிலும் பார்க்க வேண்டும்- பெண்களோடு ஆண்களும்.

•

மண், பெண், பொன் இந்த மூன்றில் எது சிறந்தது? காரணம்?

**எச்.எம்.மஸ்னவி-புத்தளம்.**

பெண்! காரணம்- உயிரும் உணர்வும் இருப்பதால்.

•

கமலின் 'மகாநதி' எப்படி?

**எ.என்.எம்.ஜவாத்-புத்தளம்.**

வித்தியாசமான கலைஞர் கமல். விருதுகள் மீண்டும் நதியால் வரும்.

•

பெண்கள் நடனம் ஆடுவதற்கும், ஆண்கள் நடனம் ஆடுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

**சகுந்தலா கந்தசாமி-இரத்தினபுரி.**

நளினத்தில்தான் சகுந்தலா.

•

கட்சிக்கு கட்சி தாவும் அரசியல் வாதிகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**எம்.ஐ.எம்.நவாஸ்-கந்தளாய்.**

'எங்கிருந்து தோன்றினோம்' என்பதை மறவாதிருக்கிறார்கள்.

•

உண்மையான நட்புக்கு உதாரணம் கூற முடியுமா?

**பெயர் இல்லை.**

முடியும். கர்ணன்! தன் நண்பனின் தவறு தெரிந்த போதும், ஆபத்தான நேரத்தில் அவனைவிட்டுப் பிரியாமல் தன் உயிர் கொடுத்தவன்.

•

நட்புக்கு நஞ்சு எது?

**எம்.ஏ.ரிசானா-கந்தளாய்.**

வீண் சந்தேகம்.

•

டியர் சிந்தியா! காதலில் இறங்கலாம் என்று நினைக்கிறேன். உமது அட்வைஸ்?

**செல்வி.ஜெயா செல்லத்தம்பி-கிண்ணியா-01.**

கவனம் ஜெயா! அது ஒரு கடல். ஆழம் தெரியாமல் காலை விட்டு காணாமல் போனவர்களும் இருக்கிறார்கள்.

•

ஏ.ஆர்.ரகுமானின் இசை சிறப்படைவதற்கு வைரமுத்துவின் வரிகளும் ஒரு காரணமா?

**எம்.டி.எம்.சாபிகான்-அகுறணை.**

காரணம்தான்! உதாரணம், 'சின்ன சின்ன ஆசை...'

•

முடிவடைந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழர்கள் ஏமாந்தார்களா? ஏமாற்றப்பட்டார்களா?

**சசி-ரகு-மட்டுநகர்.**

இந்தவார எக்ஸ்ரே ரிப்போர்டைப் பாருங்கள். தெரியும்.

•

டியர் சிந்தியா! தெய்வத்தில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?

**சந்திராணி தங்கத்துரை-சவளக்கடை.**

உண்டு. மனிதரும் தெய்வமாகலாம் என்பது சரியானால்.

•

கண்டதும் காதல் என்பவர்களைப் பற்றி?

**எம்.ஏ. ரிஸானா-கந்தளாய்-1.**

அந்தக் காலத்தில் கம்பன் சொன்னது- 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்' கம்பன் பற்றி அபிப்பிராயம் சொல்லும் அளவுக்கு நான் இல்லையம்மா.

•

பலஸ்தீன படுகொலைகள் நடந்த பின்னும் பேச்சுவார்த்தைகளை தொடர்வார்களா?

**என்.நிஜாம்-கொழும்பு-11.**

பிணங்களின் மத்தியில் நின்று யாசீர்-அரபாத் புன்னகை சிந்தினால் அதனை பாலஸ்தீனர்கள் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள்.

•

நல்ல மனிதர்களை காண்பது எப்படி?

**செல்வி.எஸ். உமாப்பிரியா ஹெந்தளை, வத்தளை.**

பேச்சில் இருந்தல்ல- செயலில் இருந்து.

•

உங்களுக்கு பாடல் என்றால் பிடிக்குமா? ஆடல் என்றால் பிடிக்குமா?

**செல்வி. ஜெகப்பிரியா.**

இரண்டும் இணைந்திருந்தால் அமோகமாகப் பிடிக்கும்.

•

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## அலசுவது - இராஜதந்திரி

# புலிகள் விழிப்புடன் இருப்பதை வெளிக்காட்டும் வெலிஓயாத் தாக்குதல்

இந்த ஆண்டில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் நடவடிக்கை மணலாறுப் (வெலிஓயா) பகுதியில் இடம் பெற்றிருந்தது.

கடந்த வாரங்களில் இடம்பெற்ற இத்தாக்குதலில் மணலாறுப் பகுதியிலுள்ள பராக்கிரமபுர என்ற இடத்தில் படையினர் சிலர் கொல்லப்பட்டனர். அத்துடன் அவர்களது கவச வாகனமொன்றும் புலிகளினால் சேதமாக்கப்பட்டிருந்தது.

வவுனியாவிலும், கிழக்கிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான முஸ்தீபுகள் இடம் பெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே மணலாறுப் பகுதியில் புலிகளின் தாக்குதலும் இடம் பெற்றிருந்தது.

வடக்கே இராணுவ ரீதியாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் வெலிஓயாப் பகுதியும் ஒன்றாகும்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் வெலிஓயாப் பகுதியில் அமைந்துள்ள ஜனகபுர இராணுவ முகாம் மீது புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அத்தாக்குதலுக்குப் புலிகள் 'ஒப்பரேஷன் இதயபூமி' என்று பெயரிட்டிருந்தனர். சுமார் 50 பேர் வரையிலான படைவீரர்கள் புலிகளின் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

அத்துடன் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்கள், மற்றும் நவீன இராணுவ சாதனங்கள் பலவற்றையும் புலிகள் தம்வசமாக்கியிருந்தனர்.

புலிகளின் வெலிஓயா தாக்குதலையடுத்து அரச படையினர் ஆனையிறவுப் பகுதியிலிருந்தும் 'ஒப்பரேஷன் யாழ்தேவி' என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பூநகரியில் 'ஒப்பரேஷன் தவளைப் பாய்ச்சல்' என்ற பெயரில் புலிகள் மேலுமொரு தாக்குதலைப் படையினர் மீது நடத்தியிருந்தனர்.

எனவே கடந்த ஆண்டு ஜுலை மாதம் வெலிஓயாவின் ஜனகபுர முகாம் மீதும், பின்னர் நவம்பர் மாதம் பூநகரி முகாம் மீதும் புலிகள் நடத்திய தாக்குதல்கள் பாரியளவிலான உயிர், மற்றும் தளபாட இழப்புகளை படையினர் தரப்பில் உண்டு பண்ணியிருந்தன.

ஆனால், இப்புதிய ஆண்டில் கடந்த வாரங்களில் வெலிஓயாவில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்கள், இராணுவத்தினர் தரப்பில் பெரிய அளவில் இழப்புக்களை ஏற்படுத்தவில்லை.

இருந்தபோதிலும் புலிகள் அவர்கள் நடமாடித்திரியும் பகுதிகளில் விழிப்புடனேயே இருந்துவருவதையும், தமக்கு வாய்ப்பான தருணங்களில் படையினரின் முகாம்களையோ அல்லது நடமாட்டங்களையோ விட்டு வைக்கமாட்டார்கள் என்பதனையுமே வெலிஓயாத் தாக்குதல்கள் புலப்படுத்துகின்றன.

புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளரான கரிகாலன் வடக்கே அண்மையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசியபோது புலிகளின் பலம் குறித்து விபரித்துள்ளார்.

சிறிய ஆயுதங்களுடன் தமது போராட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்த புலிகள், இன்று பெரும் யுத்த பீரங்கிகளையே தம் வசப்படுத்துமளவுக்கு இராணுவ ரீதியாக வளர்ச்சி கண்டுள்ளனர் என்று தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தமது உரையில் மேலும், சமாதானத்துக்கான முயற்சிகளை அரசாங்கமே முன்னெடுக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

அரசாங்கத்தின் நிலை' பாடுகுறித்து அவர் கருத்து வெளியிடுகையில் வவுனியாவிலும், கிழக்கிலும் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையடுத்து இராணுவ நடவடிக்கைகளை அரசு முடுக்கி விடலாம் எனவும் கூறியிருந்தார்.

கடந்த மாதம் தென்னிலங்கையிலிருந்து வடக்கிற்கு மதத் தலைவர்கள் மற்றும் சர்வோதயத் தலைவர் கலாநிதி ஏ.ரி. ஆரியரத்ன ஆகியோரின் விஜயங்கள் இடம்பெற்றிருந்தன.

தென்னிலங்கையின் நல்லெண்ணத் தூதுக்குழுக்களின் விஜயங்களையடுத்து புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்டன் பாலசிங்கம் பத்திரிகையாளர் மகாநாடொன்றையும் வடக்கில் நடத்தியிருந்தார்.



# சமரசப் பேச்சுகள் குறித்து அக்கறை வெளியிட்டிருக்கும் அன்டன் பாலசிங்கம்!

அம் மகாநாட்டில் திரு. அன்டன் பாலசிங்கம் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக தெளிவான விளக்கத்தை வழங்கியிருந்தார். "புலிகள் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் இராணுவ-பொருளாதார அழுத்தங்கள் மத்தியில் பேச்சுவார்த்தை பற்றி சிந்திக்க முடியாது. யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பப் பேச்சுக்கள் நடக்கவேண்டும். அரசாங்கத்துக்கும், புலிகளுக்குமிடையிலேயே நேரடிப் பேச்சுக்கள் இடம்பெறவேண்டும். தூதுக்குழுக்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாது." என்று திரு. பாலசிங்கம் புலிகளின் நிலைப்பாடு குறித்து தெளிவான விளக்கத்தை வழங்கியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டும்; புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடவேண்டும்." என்று அண்மைக் காலங்களில் கூறிவருவதற்குப் பதிலளிப்பது போலவே திரு. அன்டன் பாலசிங்கத்தின் அறிவிப்பு விளங்கியிருந்தது.

வடக்கிற்கு நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டவர்கள் அரசியல் ரீதியாக முக்கியமற்றவர்களாக இருக்கலாம். ஆனால் அரசியல் சார்பற்ற நடுநிலையான போக்கைக்கொண்ட முக்கிய மதத் தலைவர்களாகவே வடக்கே சென்று திரும்பிய கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆயர்மார்கள் காணப்படுகின்றனர்.

இத்தலைவர்கள் வடக்கே ஆதிக்கஞ் செலுத்திவரும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்களுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக வெளியிட்ட கருத்தில், "புலிகள் பேச்சுக்களை நடத்துவதில் ஆர்வங் காட்டுகின்றனர். வடபகுதி மக்கள் அமைதியையும், சமாதானத்தையுமே பெரிதும் விரும்புகின்றனர். புலிகள்கூட அமைதியை ஏற்படுத்துவதில் தமக்குள்ள விருப்பத்தை வெளியிட்டிருந்தனர்" என்று ஆயர்மார்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் வடக்கே சென்று திரும்பிய ஆயர்மார்கள் வெளியிட்ட சமரசப் பேச்சுக்கள் குறித்த கருத்துக்களுக்கு எவ்வளவு தூரம் அரச தரப்பினரால் மதிப்பளிக்கப்பட்டது என்பது தெளிவற்றிருக்கின்றது.

ஆளுங் கட்சியின் பிரதம மந்திரி உட்பட பல்வேறு சிரேஷ்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்துள்ளனர்.

ஆனால் நாட்டின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி அண்மைக் காலங்களில் வெளியிட்டு வரும் வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்த கருத்துக்கள், அப்பிரச்னைக்கான தீர்வு குறித்து சிந்திப்பவர்களிடையே ஒருவித குழப்பமான நிலையை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன.

பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் குறித்து காரசாரமான கருத்துக்களை ஜனாதிபதி வெளியிட்டிருந்த தருணத்திலேயே, இலங்கையின் பிரதான சிறுபான்மையினங்கள் வாழும் கிழக்கு மாகாணத்திலும், வடக்கே வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் இடம் பெற்றிருந்தன.

இலங்கையின் ஏனைய மாகாணங்களிலிருந்தும் வேறுபட்டதாகவே வடக்கு-கிழக்கு மாகாணங்கள் விளங்குகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பெரும்பான்மையின சிங்கள மக்களுடன் தமிழ் பேசும் சிறுபான்மையினத்தவர்கள் கலந்திருக்கக் காணப்படுகின்றனர்.

ஆனால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலங்கையின் தமிழ்பேசும் சிறுபான்மையினத்தவர்களே பெரும்பான்மையினராக இருக்கக் காணப்படுகின்றனர்.

வவுனியாவிலும், கிழக்கிலும் இடம்பெற்ற தேர்தல் பிரசாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டிருந்தார். ஆனால் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க வவுனியாவிலும் கிழக்கிலும் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரங்கள் எதிலும் கலந்து கொண்டிருக்கவில்லை.

மாறாக தென்னிலங்கையில் இடம்பெற்ற பொது வைபவங்கள், மற்றும் அரசியல் கூட்டங்களில் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையிலான வேறுபாடுகள் குறித்துப் பேசுவதிலேயே ஜனாதிபதி தமது கவனத்தைச் செலுத்தியிருந்தார்.

இக்கட்டத்திலேயே மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா சிறுபான்மையின மக்கள் குறித்து கொண்டிருந்த நிலைப்பாடு எத்தகையது என்பது தெளிவாகப் புலனாகியிருக்கிறது.

வடக்கு-கிழக்கின் அரசியல் விவகாரம் மிகவும் சிக்கலாக இருந்தபோதிலும் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா இனங்களிடையே ஒற்றுமையைக் கட்டிக் காப்பதில் தீவிர அக்கறை கொண்டிருந்தார்.

# ஒற்றுமையின் அவசியத்தை வெளிப்படுத்தும் 'பஞ்சரத பவனி'



அவர் எந்தவொரு கட்டத்திலும் இனத்துவேசமான கருத்துக்களை முன்வைத்திருக்கவில்லை.

வடக்கு-கிழக்கில் நெருக்கடியான சூழ்நிலைகள் காணப்பட்டபோதிலும், தம்மால் பயணஞ் செய்யக்கூடிய பகுதிகளுக்கு அவர் துணிவுடன் சென்று வந்திருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் நடமாடும் ஜனாதிபதி அலுவலக சேவையை மேற்கொண்டு நேரடியாகவே பொதுமக்கள் பலரின் பிரச்னைகளை மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா கேட்டறிந்திருந்தார்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி தமது கட்சிக்காரர்களுக்காகவெனினும் வவுனியா, மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்திருந்ததோடு மட்டுமல்லாமல் கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மையினத்தவர் குறித்தும் விசனத்துக்குரிய கருத்துக்களை வெளியிடுபவராகக் காணப்பட்டார்.

இலங்கையின் சிறுபான்மையினத்தவரை பெருமளவில் கொண்ட வவுனியாவிலும், கிழக்கிலும் தேர்தல் நடவடிக்கைகள் சூடுபிடித்திருந்த வேளையிலேயே, மலையகத்தில் மாத்தளை மாநகர் கடந்த பௌர்ணமி தினத்திலன்று விழாக்கோலம் பூண்டிருந்தது.

மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் இலங்கையில் ஒரு பிரசித்தி பெற்ற வழிபாட்டுத்தலமாக இருக்கின்றது.

கடந்த பௌர்ணமி தினத்திலன்று இத்திருத்தலத்தின் இரதோற்சவம் கோலாகலமாக இடம்பெற்றிருந்தது.

அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய ஐந்து இரதங்கள் மாத்தளை நகர வீதி வழியாகச் சென்று ஒரு ரம்மியமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தன.

மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் சகல இனத்தவர்களும், மதத்தினரும் வாழ்கின்ற ஒரு சூழ்நிலையிலேயே அமைந்திருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் ஒன்றாகவே மாத்தளை நகர் விளங்குகின்றது.

கடந்த பௌர்ணமி தினத்திலன்று மாத்தளையில் இடம்பெற்ற பஞ்சரத பவனியை அங்கு வாழும் அனைத்து இனத்தவர்களும் கண்டுகளித்திருந்தனர்.

ஆனால் 1983ம் ஆண்டு இடம்பெற்ற ஆடிக் கலவரத்தின்போது மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலின் ஐந்து இரதங்களும் காடையர் கூட்டத்தினால் தீவைத்து எரிக்கப்பட்டிருந்தன.

இக் காடைத்தனத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் இன, மதரீதியாக தமது அடாவடித்தனத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால் இத்தீவைப்பினால் மனம் புண்பட்டிருந்தவர்கள் வெறுமனே கைகட்டி இருக்கவில்லை.

1983ம் ஆண்டு தீக்கிரையான பஞ்ச இரதங்களுக்குப் பதிலாக புதிய சித்திரத் தேர்கள் உருவாக்கப்பட்டதுடன், சுமார் ஒன்பது வருடங்களுக்குப்பின்னர் கடந்த ஆண்டிலேயே (1993) மாசி மகத்திலன்று மாத்தளையின் பஞ்சரத பவனி முதல்தடவையாக இடம்பெற்றிருந்தது.

கடந்த ஆண்டில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த்திருப் பணிகள் குறித்து அக்கறை காட்டியதுடன், புதிய தேர்கள் உருவாகிக் கொண்டிருந்த கொட்டகைக்குள் சென்றும், சிற்பாசாரியார்களுடன் உரையாடி தேரின் வேலைப்பாடுகளைப் பார்வையிட்டிருந்தார். கூடவே நன்கொடையாகவும் நிதி வழங்கியிருந்தார்.

மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தின், பல இலட்ச ரூபாய்கள் பெறுமதிமிக்க பஞ்சரதங்களின் கம்பீரமான பவனி, இந்நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களின் உணர்வுகளை ஒருபோதும் மழுங்கடித்துவிட முடியாது என்பதனையே புலப்படுத்துவதாக இருந்தது.

மாத்தளையில் பஞ்சரதங்களின் வடங்களையும் பிடித்து, அந்த இரதங்களை மாத்தளை நகரின் ஊடாக அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் இழுத்து வந்திருந்தனர்.

'ஊர் கூடித் தேர் இழுத்தால் கோடி புண்ணியம்' என்பது ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு முதுமொழியாகும்.

தேர் ஒன்றை அனைவரும் ஒன்று சேர்ந்து பிடித்திழுப்பதன் மூலம் வேற்றுமைகளை மறந்து, குலுங்கி அசைந்து, வரும் தேரின் அழகை இரசிப்பதனையே 'ஊர் கூடித் தேர் இழுத்தல்' என்ற முதுமொழி விளக்குகின்றது.

கனமான - அழகிய தேர் ஒன்றை இழுப்பதற்கு ஒன்று திரண்ட மனோதிடம், பாகுபாடற்ற ஒற்றுமை என்பன தேவைப்படுவதையே தேர் உற்சவம் விளக்கி நிற்கின்றது.

இலங்கையிலும் இன்று சமாதானம், அமைதி என்பன தோன்றுவது மிகவும் அவசியமாகின்றது.

அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு முயற்சிக்கும் பட்சத்திலேயே இந்த அமைதி, சமாதானம் என்பனவற்றை உருவாக்க முடியும். இதற்கு அனைவரதும் மனோதிடம், பாகுபாடற்ற ஒற்றுமை என்பன தேவைப்படுவதனையே மாத்தளை மாநகரின் பஞ்சரத பவனி உணர்த்தி நிற்கின்றது.

# ஹலோ!—உங்களுக்கு எந்த உணவு பிடிக்கும்?

## அது உங்கள் குணத்தைக் குறிக்கும்



ஒருவர் விரும்பி உண்ணும் உணவைக் கொண்டு அவருடைய குணம் எத்தகையது

என்று கண்டு கொள்ளும் முறை பழமை யானது. ஆனால் ஒருவர் வெறுத்தொதுக்கும் உணவினை வைத்தே அன்னாருடைய குணத்தைக் கண்டு பிடிப்பதற்கான ஆய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 8000 பேர் இந்த ஆய்வில் கலந்து கொண்டனர். இந்த ஆய்வில் பெறப்பட்ட தரவுகள் வருமாறு:

- *பசளி முதலான கீரை வகைகளை உண்பதீ பலருக்குப் பிடிப்பதில்லை.*
  இவர்கள் பெரும்பாலும் சுய சிந்தனை யாளர்களாகவே இருப்பர். எவருக்கும் கட்டுப்பட்டு அடி பணிந்து நடப்பது இவர்களுக்குப் பிடிக்காது. எவருடைய வழிகாட்டலையும் ஏற்காமல் தாங்க ளாகவே எதனையும் சாதித்து விடுவார்கள்.
- *சிலருக்கு கோழி இறைச்சி மீது வெறுப்பு இருக்கும்.*
  இவர்கள் புத்திசாதுரியமுள்ளவர்கள். இவர்கள் கூறும் கருத்துகள் பலராலும் மதிப்புடன் ஏற்றுக் கொள்ளப்படும். சிறந்த நகைச்சுவை இரசிகர்களாக இவர்கள் இருப்பார்கள். கடுமையான உழைப் புக்கும் காலநேரம் ஒதுக்குவார்கள்.
- *சிற்றுணவு வகைகளை மளமளவென்று விழுங்குவதில் சிலருக்கு நாட்டம் இருப்பதில்லை.*
  கடந்து போன நல்ல நாட்களையிட்டு எண்ணிக் கவலைப்படுபவர்களாக இவர்கள் இருப்பார்கள். பழமை விரும்பிகள். நல்ல உரையாடல்களில் கலந்து சிறந்த கருத்துக்களை உதிர்ப்பார்.
- *மீன் உணவை வெறுப்போரும் உண்டு.*
  தன் வீட்டிலேயே அடை பட்டுக் கிடப்பதையே இத்தகையோர் விரும்பு வார்கள். புதிய அனுபவங்களைப் பெறவோ எதிர்பாராத அதிசயங்களைக் கண்டு வியக்கவோ இவர்கள் நாட்டங் கொள்ள மாட்டார்கள்.
- *பழங்களை விரும்பி உண்ணாதவர்களும் இருக்கிறார்கள்.*
  எத்தகைய அனாவசியப் பிரச்சனை களிலும் இவர்கள் தலையிட மாட்டார்கள். எத்தகைய சந்தர்ப்பத்தையும் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வார்கள்.
- *மாட்டிறைச்சி மீது வெறுப்புக் காட்டுவோரும் உண்டு.*
  எதிலும் அதிக வேகமாக ஈடுபடும் இவர்கள் ஒரே சமயத்தில் பல அலுவல்களில் தொடர்பு வைத்திருப் பார்கள். திடீர் திடீரென இவர்கள் தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொள்வார்கள்.
- *சொக்கலேட் போன்ற இனிப்பு வகைகளில் சிலருக்கு ஆசை இருப்பதில்லை.*
  வாழ்க்கையில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ள இவர்கள் தயங்க மாட்டார்கள்.



## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### தேங்காய் பால் டொஃபி

**தேவையானவை-**
தேங்காய்ப் பால்- ஒரு கோப்பை
கெட்டியான பால்- இரண்டு கோப்பை
சீனி- இரண்டு கோப்பை
கொக்கோ- 2 தேக்கரண்டி
வெண்ணெய் அல்லது மாஜரின்- 50 கிராம்

**செய்முறை:**

1. எல்லாப் பொருட்களையும் அடி கனமான பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைக்கவும். தொடர்ந்து கிளறவும்.
2. சில துளிகளை தண்ணீரில் விட்டுப் பார்த்தால் கெட்டியாக உருண்டையாக வரும். இந்தப் பதத்திற்கு வரும் போது அடுப்பில் இருந்து இறக்கிக் கிளறவும். பாத்திரத்தில் உள்ள டொஃபி கலவை நேரம் ஆக, ஆக கெட்டியாகிவிடும்.
3. டொஃபி கலவை பாத்திரத்தில் ஒட்டாமல் வரும்போது நெய் அல்லது மாஜரின் தடவிய தட்டில் போட்டு சமப்படுத்தவும். பிறகு' சதுரங்களாக வெட்டவும்.

### மார்வாடி மிர்சி

**தேவையானவை-**
பச்சை மிளகாய்- 1/4 கிலோ
மஞ்சள் பொடி- 1 மே.கரண்டி
எலுமிச்சம் பழச்சாறு- 1 கோப்பை
எண்ணெய்- 100 கிராம்
உப்பு- தேவையான அளவு

**செய்முறை:**

1. பச்சை மிளகாயைக் கீறி உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து ஒருநாள் ஊற வைக்கவும்.
2. மறுநாள் பச்சை மிளகாயில் கடுகுப் பொடியைப் போடவும். எண்ணெயைச் சூடாக்கி ஆறியவுடன் பச்சை மிளகாயில் ஊற்றவும்.
3. நல்லெண்ணெய் உபயோகித்தால் நல்லது.



### விளாம்பழச் சட்னி

**தேவையானவை:**
விளாம்பழம்-2
நல்ல வெல்லம்- 1 பெரிய கட்டி.

**செய்முறை:**

விளாம்பழம் பழுத்ததாக இருக்க வேண்டும். விளாம்பழத்தை உடைத்து உள்ளிருக்கும் சதைப் பகுதியை எடுக்கவும். நன்கு மசிய வைத்துக் கொள்ளவும். தேவையான அளவு வெல்லத்தை தூள் செய்து விளாம்பழத்துடன் கலந்துகொள்ளவும். மிகவும் சுவையாக இருக்கும்.

## முயற்சி திருவினையாகும்—பயிற்சி சிறப்பினையாக்கும்!

### பவள முகம் பெற சில பயிற்சிகள்!



முகத்தில் பொலிவுண்டாக்குவதற்கு சில எளிமையான பயிற்சிகள் உள்ளன. எதுவித பணச் செலவுமின்றி வீட்டி லிருந்த வண்ணம் தினசரி நீங்களாகவே செய்யலாம்.

முகத்திலுள்ள தசைகளுக்கு அழுத்தம் கொடுப்பதனால் வயதேறும்போது முகத்தில் தோன்றும் சுருக்கங்களையும் தேவையற்ற சதைத் தொய்வுகளையும் அகற்றி என்றும் புதுப் பொலிவுடன் திகழலாம்.

ஹோலிவூட் நடிகையான பிறிற் ஏக்லண்ட் போன்ற பலர் இம்முறைகளை பின்பற்றுகின்றனர். "எனது முகச் சருமத்தின் வண்ணம் குன்றாமல் இருப்பதற்கு எனது விரல்களைப் பயன்படுத்தியே முறையான அழுத்தத்தைக் கொடுத்து வருகிறேன்." என்கிறார் பிறிற் ஏக்லண்ட்.

கலிபோர்னியா மாநில-பேவர்லி ஹில்ஸ் நகரைச் சேர்ந்த டாக்டர் ஜெறி ஸ்கெனிடர் முகத்துக்குரிய சில பயிற்சிகளைத் தந்திருக் கிறார். "முகத்திலுள்ள தசை நார்களை இழுத்தும் அழுத்தியும் தேய்ப்பதனால், ஆங்காங்கே காணப்படும் சுரப்பிகள் இயற்கை எண்ணைகளைச் சுரக்கின்றன. அத்துடன் இரத்த ஓட்டமும் 'சீராகிறது." என்கிறார் டாக்டர் ஸ்கெனிட்டர்.

- நாடிப்புறத்தில் ஏற்படும் சுருக்கங் களையும் சதைத் தளர்வதையும் அகற்றுவதற்கு ஆள்காட்டி விரலாலும் நடு விரலாலும் நாடியில் லேசாகத் தட்ட வேண்டும். அத்துடன் மேல் நோக்கி அழுத்தம் கொடுக்க வேண்டும்.
- கன்னக் கதுப்பில் சுருக்கங்கள், சதைத் தொய்வுகள் ஏற்பட்டால் நாடிக்குச் செய்ததைப் போன்றே இரு கை நடுவிரல்களால் தட்டுவதுடன் மேல் நோக்கி அழுத்தமும் கொடுக்க வேண்டும்.
- நெற்றியில் விழும் சுருக்கங்களை நீக்கு வதற்கு -குளித்து முடிந்தபின்னர், ஒரு சிறு துவாயை இளஞ் சூடான நீரில் தோய்த்துப் பிழிந்ததன் பின்னர், நெற்றியின் மையத்திலிருந்து வலது புறமான சுழற்சி அழுத்தத்தை கன்னப் பகுதி வரைக்கும் கொடுக்க வேண்டும். முதலில் இடதுபுறமும் பின்னர் வலது புறமும் அழுத்தம் கொடுக்கலாம். இதற்கு தினசரி ஒரு நிமிடம் கொடுத்தால் போதும்.
- சிரிக்கும் போது சிலருக்கு வாயைச் சுற்றி சுருக்கங்கள் தோன்றும். இதனை நீக்குவதற்கு வாயுள் காற்றினை இழுத்து, கன்னத்தை உப்ப வைத்து பின்னர் காற்றினை வேகமாக வெளியே ஊதி விடவும். தினசரி மூன்று வேளை, ஒவ்வொரு தடவையும் 20 முறை செய்தால் போதும்.
- நாடி, தாடை, கழுத்து போன்றவற் றுக்கும் பயிற்சி கொடுப்பதால் பொலிவு ஏற்படும். இவற்றின் தசை-சதைகளை விரல்களால் இழுத்து இழுத்து விட வேண்டும். அப்போது இவற்றின் உட்புறம் உள்ள தசை நார்கள் இழுபடவும் பின்னர் சுருங்கவும் செய்யும். இழுக்கும் போது சில நொடிகள் இழுபட்ட நிலையிலிருக்க விட்டுப் பின்னர் சுருங்க விட வேண்டும்.

கழுத்துப் போன்ற பகுதிகளிலும் மேல் நோக்கி அழுத்தங்களை தினசரி கொடுத்து வந்தால் சிறந்த பலன் கிடைக்கும். இதனை தினசரி 5 முதல் 10 நிமிடங்கள் வரை செய்யலாம்.



## தலைமுடி இரகசியங்கள்

ஒவ்வொருவருடைய தலையிலும் 1 இலட்சம் முதல் 1 1/2 இலட்சம் வரை தலைமுடிகள் இருக்கின்றன. தினமும் 5இலிருந்து 15 சதவீத முடிகள் கழிகின்றன. இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் ஒவ்வொரு மாதமும் 2.5 செ.மீ நீளம் முடி வளரும்.

நோய்வாய்ப் பட்டிருக்கும் போதும், பெண்கள் குழந்தை உண்டாகியிருக்கும் போதும் முடியின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இப்போதுள்ள சுற்றுப்புற சூழல் (காற்றில் உள்ள அழுத்தம்) நம்மை அறியாமலேயே தலை முடியின் வளர்ச்சியை, அடர்த்தியை மட்டுப் படுத்துகிறது.

தினமும் சிறிது ரேம் தலை முடியை சூரிய ஒளியில் படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இதனால் முடி அதிகமாக கொட்டுவது தவிர்க்கப்படும்.

தலைமுடியில் அதிக அழுக்குகள் சேர்ந்தால் உடல் நலக்குறைவு ஏற்படும்.

தினமும் உடற்பயிற்சி செய்பவர் களுக்கு எளிதில் முடி கொட்டாது.

ஆதிகாலத்து பாட்டியின் முடியை விட இப்போதைய நகரத்து பேத்தியின் முடி பலம் குறைந்தது.

அதிகமாக உணர்ச்சி வசப்படுப வர்களுக்கு முடி அதிகமாக உதிரும்.

முடியை அடிக்கடி வெட்டு வதாலோ, ஷேவ் செய்வதாலோ எந்தவித மாற்றமும் ஏற்படாது.

தலை வாரும் பொழுது சீப்பின் நுனி தோலை தொடும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். இதனால் தலையில் இரத்த ஓட்டம் ஒரே சீராக பரவ வாய்ப்புண்டு.

பச்சை காய்கறிகளும், மீனும் உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் தலைமுடி அடர்த்தியாக இருக்கும்.

சைவ உணவுக்காரர்கள் தலை முடியை பாதுகாக்க விட்டமின் பி சத்து குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அதிகார பூர்வமாக தயாரிக்கப் படாத இரசாயன ஷாம்போ உபயோ கிக்கக் கூடாது.

## முடி அழகியின் முத்தான யோசனைகள்!



மெஹெர் பாஷின் என்பவர் பம்பாயில் 'ஃபெமினா'-1993ஆம் ஆண்டில் நடத்திய அழகுராணிப் போட்டியில் பங்கேற்று, சிகை அலங்கார அழகு ராணியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டவர்.

அலையலையாகச் சுருண்டு தொங்கும் கூந்தல் அழகின் இரகசியத்தை இங்கே பகிர்ந்து கொள்ளுகிறார்.

- வாரத்துக்கொரு தடவை முடிக்கு எண்ணை தடவி அழுத்தம் கொடுப்ப தனால் முடி சிறப்பாக வளரும் என்று தவறாக எண்ணிவிடாதீர்கள். வாரத்துக்கு இரு தடவையாவது எண்ணை தடவி அடுத்த நாளே எண்ணைப் பசை நீங்க முடியைக் கழுவிவிட வேண்டும்.
- சிகை மீது அழுத்த விசை (Spray) மூலம் எண்ணையோ வேறு எதையோ பீச்சுவதைக் கூடுமான அளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் மயிர் பிளவுபடுவதைத் தவிர்க்க முடியும். நாள் தொடங்கும் போது தலை சீவுவதைப் போல் நாள் முடிவின் போதும் சீவுவதனால் தேவையற்ற சிக்குப் பிடிக்காமல் பாதுகாக்க முடியும்.
- படுக்கைக்குச் செல்லுமுன்னர் முடியைச் சீவி விடுவதனால் மயிர் வளர்ச்சிக்கு உதவும். அத்துடன் தலையில் இரத்த ஓட்டத்தையும் துரிதப் படுத்தும்.
- ஷம்பூவை ஒரு கோப்பையில் ஊற்றி அத்துடன் முட்டையின் மஞ்சட் கருவைக் கலந்து முடியில் தேய்க்கவும். இதனால் முடி மென்மையாவதுடன் மண்டை ஓட்டுக்கும் உறுதியினை அளிக்கும்.
- முடி வளர்ச்சியினைத் துரிதப்படுத்து வதற்கும் உதிராமல் பாதுகாப்பதற்கும் விட்டமின் B (கூட்டு), விட்டமின் A மற்றும் D செறிந்த உணவுகளை உண்ண வேண்டும். இல்லாவிட்டால் இம் மூன்றும் இணைந்த வில்லை (மாத்திரை)களை உட்கொள்ள வேண்டும்.
- முடி முனையில் பிழவு-வெடிப்பு ஏற்படுவது சாதாரணமாக எல்லோருக்கும் உள்ள பிரச்சனை. இதனால் முடி வளர்ச்சி தடைப்படுகிறது. இதனைத் தவிர்க்க 15 நாட்களுக்கு ஒரு தடவை முடியின் நுனியில் சிறிதளவு கத்தரிப்பது நல்லது.
- அடர்த்தியான கேசமுடையவர்கள் கேசத்தை மென்மை அடையச் செய்ய தினசரி வாரி விடுவது நல்லது. வாரிவிட்ட பின்னர் இறுக்கம் இல்லாமல் தளர்வான கொண்டை போட்டுக் கொள்ளலாம்.

## நீங்களும் தைக்கலாம்

### தைக்கும் முறைகள்

**கழுத்து** (The neck) இதை ஒழுங்காகவும் பொருத்தமாகவும் அமைக்க வேண்டும். கழுத்துப் பெரியதாய் இருந்தால் தொங்கும். பிடித்தமாய் இருப்பின், பின் புறம் இழுக்கும்; சட்டையின் பின் புறம் சுருங்கும்.

கழுத்து முன் புறம் சற்று அதிகமாய் இருப்பின் தோள்பட்டைத் தையல் பக்கம் தள்ளிச் சிறு பாய்ச்சல்கள் அமைத்து, ஒழுங்குபடுத்தலாம். மிகச் சிறு பாய்ச்சல்களைக் கழுத்துத் தையலிலிருந்து கழுத்துப் பின் புறம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வது, அதிகப்படியாய் இருப்பதைச் சரிபார்க்க உதவுகிறது.

**கொலர்கள்** (Collars): கொலர்கள் வெட்டும் பொழுது சட்டைக்கு எந்தத் துணி உபயோகப்படுகிறதோ, அதே துணியை ஒழுங்கு பெற வெட்டவேண்டும். கழுத்தில் அமைக்கும் பொழுது பலமுறை வைத்துப் பார்த்துப் பதிய வைப்பது சிறந்தது. பின்பு கழுத்துடன் படிந்தாற் போல அமையச் செய்வது அழகுபெற அமையும். கொலர் உயரமாய் இருப்பின், சட்டை மடிப் பேற்படும். கொலர் உயரம் குறைவாய் இருப்பின், கழுத்துடன் படிந்தாற்போல இராமல், தொங்கும். கொலர்ப் பட்டை அமைத்துத் தைக்கும் பொழுது அமைக்க வேண்டிய கோட்டில் அமைத்துத் தைக்கவும்.

பரிசுத் திட்ட கூப்பன் இல-4

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ்
இணைந்து வழங்கும்
தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அதிசய உருவம்-அழகிய நடனம்!



## விலக முடியாத போதும் வியக்க வைக்க முடியும்!!

அமெரிக்காவின் வர்த்தக நகரம் நியூயோர்க். அங்கு இரவு விடுதிக் கேளிக்கைகளுக்கு குறைச்சல் இல்லை.

இரவு விடுதிகள் என்றால் நடனங்களும் இருக்கத்தான் செய்யும்.

நடனங்கள் மட்டுமல்ல நடனப் போட்டிகளும் நடக்கவே செய்யும் - நடக்கின்றன.

அந்த நடனப் போட்டிகளில் எப்போதுமே இரண்டு பேர் முதலிடத்தை தட்டிக்கொள்கிறார்கள்.

அதெப்படி இரண்டு பேர் முதலிடத்தை தட்டிக் கொள்ள முடியும்? என்று நீங்கள் நினைக்கக்கூடும்.

அந்த இருவரும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள்.

ஒருவர் பெயர் பொபி கிறல்லர். அடுத்தவர் பெயர் எட் கிறல்லர்.

பிறக்கும் போதும் ஒட்டியே பிறந்தார்கள். நடனம் ஆடும் போதும் ஒன்றாகவே ஆடுகிறார்கள்.

அவர்களோடு இணைந்து ஆட நியூயோர்க்கின் அழகு மங்கையர் அடிபட்டுக் கொள்ளாத குறையாக போட்டி போடுகின்றனர்.

இரட்டையர்களின் முதுகுப் புறத்தின் கீழ் பகுதிகள் இரண்டும் ஒட்டிக்கொண்டுள்ளன. முள்ளம் தண்டின் அடிப்பாகமும், வேறு சில உள்ளுறுப்புக்களும் ஒன்றாக இணைந்திருப்பதால் இவர்களைப் பிரிக்க முடியவில்லை.

இவர்கள் ஒரு பூக்கடை வைத்துள்ளனர். நல்ல வருமானம் கிடைக்கிறது. இவர்கள் நடக்கும்போது நண்டு போன்றுதான் நடக்க வேண்டியிருக்கிறது. ஒருவர் முன்னே நடந்து செல்ல மற்றவர் பின்புறமாக இழுபட்டுச் செல்லவேண்டும். ஆரம்ப காலத்தில் இவர்களுடைய நடமாட்டத்தை அதிசயமாகப் பார்த்தவர்கள் இப்போது இவர்களுடன் நெருக்கமாகப் பழக ஆரம்பித்துவிட்டனர். அன்றாட வாழ்க்கையில் பல சிரமங்களும் அசௌகரியங்களும் இருந்த போதும் இருவரும் ஒத்த மனப்பான்மையுடன் இருப்பதால் சமாளித்துக் கொள்ளுகின்றனர்.

பெண்களை அணைத்து ஆடும் நடனங்களில் இவர்கள் சிறப்புப் பெற்றுள்ளனர். ஒருவர் எவ்வாறு அடுத்த காலை எடுத்து வைப்பார் என்பதை மற்றவர் உணர்ந்து அதற்கேற்றவாறு தனது காலையும் வைத்து விடுவதனால் நடனம் மிகச் சிறப்பாக அமைந்துவிடுகிறது.

ஆரம்பத்தில் நடன அரங்கை இவர்கள் அடைந்ததும் முதன் முதலில் பார்ப்பவர்கள் அதிசயப் பார்வையினை வீசுவார்கள். ஆடத் தொடங்கிவிட்டார்கள் என்றால் அதிசயித்தவர்கள் வியப்பில் மூழ்கிவிடுவர்.

# தகவல் பெட்டி

## வசதியுள்ள குரங்கு!

குரங்கில் இருந்து மனிதன் தோன்றினான் என்பார்கள். தன்னில் இருந்து தோன்றிய மனிதன் இன்று எப்படியெல்லாம் வாழ்கிறான். அப்படியெல்லாம் நாமும் வாழ்ந்தால் என்ன? என்று நினைத்து விட்டதோ இந்த ஒரங்குட்டான் இன குரங்கு.

இது தினமும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரசித்துப் பார்க்கிறது. செய்திகளையும் மிக உன்னிப்பாகக் கவனிக்கிறது.

தொலைக்காட்சியில் ஏன் அத்தனை பிரியம் தெரியுமோ?

மிஸ்டர் குரங்காரும் ஒரு தொலைக்காட்சி நடிகர். சுளையாகச் சம்பாதிக்கும் வசூல் மன்னர். அமெரிக்க தொலைக்காட்சி இரசிகர்கள் மத்தியில் இவருக்கு அமோக வரவேற்பு. வசூலை அள்ளிக் கொடுப்பதால் இவரை வளர்ப்பவர்களும் வசதிகளை செய்து கொடுத்து குசியாக வைத்திருக்கிறார்கள்.



தொலைக்காட்சியில் தான் நடித்த நாடகங்கள் ஒளிபரப்பாகும் போது மிஸ்டர் குரங்கார் குசி மூடில் இருப்பாராம். தொலைக்காட்சி பெட்டியை கரங்களால் அணைத்தபடி காட்சிகளை இரசிப்பாராம். கலாரசனையுள்ள குரங்கு.

## படைத்தாரே—அவர் சாதனை படைத்தாரே!



பெரிய-பெரிய ஆசை. சாதனை படைத்து அதனை உலகறியச் செய்துவிட ஆசை.

உலக சாதனைப் புத்தகம்தான் கின்னஸ். அந்தக் கின்னஸ் புத்தகத்தை புரட்டிப் புரட்டிப்பார்த்து புதியதாக என்ன சாதனை படைக்கலாம் என்று மூளையைப் போட்டுக் கசக்கிக் கொண்டிருப்பார்.

அவர்தான்-ஜிம் மவுத்.

அவர் இதுவரை செய்துள்ள சாதனைகளின் பட்டியல்:

1. ஒரே தடவையில் 30 ஜோடி ஜீன்ஸ் அதற்கு தோதாக 60 சட்டைகள் அணிந்து கொண்டது.
2. 40 சுங்கான்கள் ஒன்றாக வாயில் வைத்து, பற்றவைத்து புகைத்துத் தள்ளுவது.
3. பெரிய-பெரிய 12 றோல் பணிசை ஒன்றாகச் சேர்த்து வாயில் திணிப்பது.

இப்போது புதிதாக ஒரு சாதனை படைத்துள்ளார்.

153 சிகரெட்டுக்களை ஒரே நேரத்தில் புகைப்பது உலக சாதனையாக 1991ல் செய்யப்பட்டது. ஜிம் மவுத் அந்த சாதனையை உடைத்துவிட்டார்.

ஒரே நேரத்தில் 155 சிகரெட்டுக்களை தன் வாயில் திணித்து பற்ற வைத்து தன் பெயரை கின்னஸ் புத்தகத்தில் பொறித்துவிட்டார்.

புகைப்பது உடல் நலத்திற்கு கேடாகலாம். ஆனால் உலக சாதனைக்கு உபயோகமாகலாமோ? ஆகலாம் என்று நிரூபித்துவிட்டாரோ மவுத்!

## பரிவான அணைப்பு



சிம்பான்சி மனிதக் குரங்கின் பரிவான அணைப்பில் பயமின்றிச் சிரிக்கும் மழலை. அவுஸ்ரேலிய மிருகக் காட்சி சாலை ஒன்றில் அதன் பராமரிப்பாளரின் குழந்தை மனிதக் குரங்கோடு பயமேதுமின்றி பழகி வருகிறது. சிம்பான்சியின் கரச்சிறைக்குள் சிக்கியபடி சிறுமலர் சிரித்துக் கொண்டிருக்க, அதை கமரா கிளிக் செய்துவிட்டது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



ஹேமா மாலினி

## ஹேமா முயலுகிறார்

தமிழில் இருந்து இந்திக்கு போய் கனவுக் கன்னியாக இருந்தவர் ஹேமாமாலினி பின்னர் வயதாகிவிட கனவுக் கன்னி என்ற புகழோடு மெல்ல கழன்றுகொண்டு இயக்குநராக மாறினார். மறைந்த திவ்யபாரதியை வைத்து இந்தியில் ஒரு படம் இயக்கினார். இப்போது மீண்டும் ஒரு படத்தை இயக்கப் போகிறார். அது நிச்சயம் வெற்றிப் படமாக அமையும் என்கிறார் இன்னும் குலையாத இளமையோடு உள்ள ஹேமா.

புதிய படவாய்ப்புக்கள் சில தேடிவந்தபோதும் ஹேமா மறுத்துவிட்டார். தொலைக்காட்சி தொடர் ஒன்றில் நடித்துவருகிறார்.

# சினிபிட்



சத்யராஜ்

* விசித்திர நடிகைக்கு நடு இரவுகளில் தொலைபேசி தொல்லை தாங்க முடியவில்லையாம். அதனால் அவர் தொலைபேசி அழைப்புக்களை கண்டுகொள்வதில்லை. இரவு நேரத்தில் போன் அலறியபடியே இருக்குமாம்.
* ரஞ்சித நடிகைக்கு ஆண் நண்பர்களின் தொல்லைகள் அதிகமாகிவருகிறதாம். வஞ்சகமில்லாமல் பழகும்போது தப்பான கோணத்தில் பார்க்கிறார்கள் என்று கவலைப்படுகிறார். அதனால் இப்போது ஆண் நண்பர்களே வேண்டாம் என்று முடிவு செய்துவிட்டாராம்.
* "எல்லோருக்கும் விருது கொடுக்கிறார்கள். எனக்கு மட்டும் ஏன் தருகிறார்கள் இல்லை?" என்று கேட்டு வருத்தப்படுகிறார் துளசிப் பெயரில் பாதி உள்ள கவர்ச்சி நடிகை.
* 'சுப்பிரமணிய சுவாமி' படத்தின் பாடல் கசட் வெளியீட்டு விழாவில் ஆல் நடிகைக்கு தடபுடலான மரியாதை. அதனால் வெறுப்பாகி இருக்கிறாராம் பிரிய நடிகை. இறுதிவரை அவரை மேடைக்கு அழைக்கவே இல்லையாம்.
* 'கஸ்தூரி' நடிகையின் வீட்டில 'பா' இயக்குநர் அனுப்பிய வாழ்த்து மடலை பிரேம் பண்ணி மாட்டி வைத்திருக்கிறார்.
* தனது தங்கையை சிரிப்பு நடிகரின் ஜோடியாக

## காதோடு சொல்லுகிறோம்

போட்டதால் இசைக்குநர் பாருக்கு ராஜா மீது கோபத்தில இருக்கிறார் 'சரித' நடிகை.
* தன்னை வளர்த்துவிட்ட இயக்குநரிடமே வாதியம் அதிகமாகக் கேட்டாராம் மணியான நகைச்சுவை நடிகர். இப்போது அந்த இயக்குநரே நகைச்சுவை நடிகராகிவிட்டார்.
* புரொடியூசர் தருவதாகச் சொல்லி அழைத்து விட்டு அந்த நடிகையை ஏமாற்றிவிட்டாராம் தயாரிப்பாளர். கன்னையாக நடித்தவருக்கு அக்காவாக நடிக்க வாய்ப்பு கொடுத்தேனே அது புரொடியூசன் இல்லையா? என்பது தயாரிப்பாளரது வாதம்.

சத்யராஜ்- மணிவண்ணன் இணைப்பில் வளர்ந்துவரும் படம் 'தோழர் பாண்டியன்'.

'சின்னத்தம்பி' வெற்றிப் படத்தை தயாரித்த கே.பாலு தயாரிக்கும் படம்.

படத்தில் ஒன்றுக்கு மூன்று வில்லன்கள்.

ரகுவரன், ஆனந்தராஜ், நெப்போலியன் என்று வில்லன்கள் பட்டாளம். சத்யராஜின் ஜோடியாக ரஞ்சிதா நடிக்கிறார். சுஜாதா, வடிவேலு, ஆகியோரோடு, மணிவண்ணன், ஆர்.சுந்தர்ராஜன், மணிவாசகம் ஆகிய மூன்று இயக்குநர்களும் நடிக்கின்றனர்.

'அமைதிப்படை'க்கு அடுத்ததாக 'வண்டிச்சோலை சின்ராசு' திரைக்கு வரும். அதனை அடுத்து 'தோழர் பாண்டியன்' திரைக்கு வர ஏற்பாடாகியுள்ளது.

தோழர் பாண்டியனில் ஒரு பாட்டு

தமிழ் மகனே! தமிழ் மகனே! ஏன் பிறந்தாய் தமிழ் மகனே.
ஏச்சுப் பிழைப்பவனும் தமிழ்மகனே.
ஏமாந்து போறவனும் தமிழ் மகனே...
தமிழன் வீட்டிலே ரீவி காட்சியில்
தானும் நீயும் பேசும் மொழி
இல்லையே இல்லையே!

என்று தொடர்கிறது பாடல்.

# தோழர் பாண்டியன்

## முகப்பில் இதழ் மலர்த்துவது ரோஜா



சிரஞ்சீவி
மீனாட்சி சேஷாத்திரி

## மாறுபட்ட பாத்திரம்

நாசர் முற்றிலும் மாறுபட்ட பாத்திரம் ஒன்றில் நடிக்கப் போகிறார். கதையைக் கேட்டதும் ஓ.கே சொல்லிவிட்டார். படத்திற்கு 'வண்ணக் குயில்' என்று பெயரிட்டுள்ளார்கள். நாசரோடு விஜூச்சக்கரவர்த்தி, சின்னி ஜெயந்த், குமரிமுத்து, சாரதா ப்ரீதா, ஷர்மிலி ஆகியோரும் உண்டு.

## மாமனாரா? மருமகனா?

'ராஜாதி ராஜ கிருஷ்ண காமராஜன்', ராவணன் படங்களை தயாரித்த ராக கென்னடி பட நிறுவனம் தனது அடுத்த படத்திலும் மன்சூர் அலிகானையே கதாநாயகனாக்கியுள்ளனர். நாயகி- பிரகதி 'வீட்ல விசேஷங்க' படத்தில் நடித்தவர். சில்க் சுமிதா, ஆர்.சுந்தர்ராஜன், சித்ரா, கோவை சரளா, பாண்டு ஆகியோரும் நடிக்கிறார்கள். 'மாமனாரா? மருமகனா?' என்பதுதான் படத்தின் பெயர். பாலு ஆனந்த் கதை-வசனம் எழுதி இயக்குகிறார்.

## சளைக்காமல் மீண்டும் சிரஞ்சீவி!

இந்தியில் சிரஞ்சீவி, மீனாட்சி சேஷாத்திரி நடித்த 'ஆஜ்கா குண்டாராஜ்' பெரிய வெற்றியைப் பெறவில்லை.

மீண்டும் சிரஞ்சீவி இந்தியில் நுழைகிறார். ஜென்டில்மேன் படம் இந்தியில் தயாராகிறது. அர்ஜுன் வேடத்தில் சிரஞ்சீவியும், மதுபாலா வேடத்தில் ஜூஹி சாவ்லாவும் நடிக்கின்றனர்.

சென்னையில் உள்ள முக்கிய இடங்களில் இதன் படப்பிடிப்பு நடைபெறுகிறது. இப்படத்தை இந்தியில் பிரபல இயக்குநராக இருக்கும் மகேஷ் பட் இயக்குகிறார்.



மாதுரி டிக்ஷித்

## -சரத் ஜோடியாக இருவர்-

சரத்குமார் ஜோடியாக சுகன்யா, கஸ்தூரி இருவரும் நடித்து வருகிறார்கள். 'இதயம்', 'அந்தமான் காதலி', போன்ற வெற்றிப் படங்களை வழங்கிய முக்தா சீனிவாசன் தயாரித்து வழங்கும் புதிய படம் 'ராஜபாண்டி'. கதை-திரைக்கதை வசனம் எழுதி இயக்கி வருவது வினோத்குமார்.

சரத்குமாரின் இரண்டாவது படங்களில் ஒன்றாக ராஜபாண்டியும் பேசப்படும்.

இசை-தேவா, பாடல்கள்-வைரமுத்து

## பிரபு நடிக்கும் சின்ன மருது

'கட்டபொம்மன்' வெற்றிப் படத்தை இயக்கிய மணிவாசகம் அடுத்து வழங்கவுள்ள படம் 'சின்ன மருது'.

கதாநாயகன் பிரபு. 'சின்னதம்பி', 'பாண்டித்துரை', 'உத்தம ராசா' ஆகிய படங்களைத் தயாரித்த கே.பி.பிலிம்ஸ் 'சின்ன மருது'வையும் தயாரிக்கிறது.

இசை-இளையராஜா.

## 'பொண்டாட்டி ஜெயிச்சிட்டா'

'வாங்க பார்ட்னர் வாங்க' படத்தை அடுத்து ராம நாராயணன் வித்தியாசமான கதையமைப்போடு வழங்கப்போகும் படம் 'பொண்டாட்டி ஜெயிச்சிட்டா' இதில் நாசர், ரேகா ஜோடி சேர்கின்றனர். செந்தில், வி.கே.ராமசாமி, விவேக் ஆகியோரும் உண்டு.

ரஜனிக்...

சித்திரை ... 'வீரா' ... வரவ... மீனா ரோஜ... ரஜனி ... வெளுத்து ... கிராமப் ... என்று ... அப்பில் ... பெருமபா... எடுத்து ... 'வீரா' பட... சிவாஜி ... சார்பில் ... பிரமாண... ஒன்றில ... போ... இதுவரை ... பெருந்தொ... ரஜனி ... மகிழ்வித்து ... திட்டமிட்டு... இரண்டு ... அதில் ... தெரிவு ... ரஜனிக்கு ... புதுமுகம் ... வைப்பது ... வருக...

இரு மொழிகளி... ஒரு பட...

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் சரவணன் நடிக்கப் போகும் பட... 'மச்சினன்'. கதாநாயகி தேர்வு நடைபெற்று வருகிறது. கதை-திரைக்கதை வசனம் எழுதி இயக்கப் போகிறார் வி.சிகுகநாதன்.

ராஜகுமா... முதலிட...

பாடல் ... மீரு ... ராஜகுமாரன் ... முன்னணியில் ... அதன் பின்னர் ... படங்களில் ... கார்டுக்கள் ... போதும் ... ராஜகுமாரனே ... கிறிறது ... ராஜகுமாரன் ... பாடகராக ...

www.padippakam.com
நன்றி -- நூலகத்திட்டம்

...கக பிரபு


ரஜனி, விசித்ரா
படம்-வீரா

# வீரா



## மினி சினி

★ ஹிந்தியில் வெற்றி பெற்ற கதையைப் படத்தை தமிழில் தயாரிக்கும் உரிமையைப் பெற்ற தயாரிப்பாளர், சஞ்சய் தத் வேடத்தில் பிரபுவையும், ஜாக்கி ஷெராப் வேடத்தில் சரத்குமாரையும் நடிப்பதற்கு அணுகினார். இருவரும் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

★ வெள்ளித் திரையில் நடிப்பவர்கள், சொந்தக் குரலில் பாடும் விஷயம் தீண்டு கொண்டிருக்கும் இந்நேரத்தில் திரைக்குப் பின்னால் இருந்தபடியே பல இலட்சக் கணக்கான ரசிகர்களை தன் இனிய குரலால் கவர்ந்துள்ள சின்னக் குயில் சித்ரா தமிழ்ப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

★ தற்போது தமிழ், மலையாளம், இந்தியில் சில படங்களில் நடித்து வரும் கௌதமி, விரைவில் சொந்தப் படமொன்றைத் தயாரிக்க இருக்கிறார். கதாநாயகனாக அரவிந்த சாமி நடிப்பார் எனத் தெரிகிறது.

★ தமிழில் நான்கு படங்களில் நடித்து வரும் ஹீரா, இந்தியில் சஞ்சய் தத் ஜோடியாக 'அமானத்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தை மிகுந்த எதிர்பார்ப்புடன் பார்த்திருக்கிறார் ஹீரா.

★ 'அஞ்சலி', 'சிங்காரவேலன்' போன்ற படங்களில் பாடிய இளையராஜாவின் மகள் பவதாரிணி, பள்ளியில் படித்து வருகிறார். இவர் பொங்கலன்று வெளிவந்த 'சேதுபதி ஐ.பி.எஸ்.' படத்தில் இடம் பெற்ற 'அம்மாதான் என்று எம்மை...' என்ற பாடலைப் பாடியுள்ளார்.

★ வெளிப்புறப் படப்பிடிப்பிற்காக வெளியூர் செல்லும் நேரமில்லை. படப்பிடிப்பு இல்லாத ஓய்வு நேரங்களில் இயற்கைக் காட்சிகளைப் படம் பிடிப்பதற்குக் காமராவுடன் புறப்பட்டு விடுவார்.

★ 'அமைதிப்படை' படத்தில் முதன் முதலாகச் சொந்தக் குரலில் பாடல் பேசிய ரஞ்சிதா, அடுத்து வந்த 'வீட்டைப் பாரு நாட்டைப் பாரு' படத்தில் சொந்தக் குரலில் பேசவில்லை.

★ விஜயகாந்த் தற்போது நடித்து வரும் 'ஆனஸ்ட் ராஜ்', 'பதவிப்பிரமாணம்' ஆகிய படங்களை அடுத்து ஆர்.கே. செல்வமணி இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தை விஜயகாந்தே தயாரிக்கிறார்.

★ பாரதிராஜாவுக்குத் தன் அம்மா மீது பிரியம் அதிகம். அடுத்து அவர் இயக்கும் புதிய படத்திற்குத் தனது தாயாரின் பெயரையே சூட்டிவிட்டார். 'கருத்தம்மா' என்று. 'கருத்தம்மா' வேடத்தில் நடிப்பவர் ராஜ்ஸ்ரீ.

## "அணைக்கச் சொல்ல வந்தது வெட்கம்"

இந்தியில் சத்தமில்லாமல் முன்னுக்கு வந்து கொண்டிருப்பவர் ஆயிஷா ஜில்கா. 'குர்பான்' படத்தில் சல்மான்கானுடன் நடிக்க போது அவரை இறுக்கமாக அணைக்கும்படி இயக்குநர் சொல்ல, வெட்கமாகிவிட்டதாம். பின் சல்மான்கான் நேரக் சொல்லி சிரிக்க வைத்து தயக்கம் போக்க, பிறகென்ன சல்மான்கானே மூச்சுத் திணறிப் போனாராம்.


கமல்

## இயக்குநராகும் கமல்! இந்தியில் மகாநதி

'மகாநதி' இந்திக்கு போகப் போகிறது. இந்தியில் 'மகாநதி'யை இயக்கப் போகிறார் கமல்ஹாசன். இதுவரை கதை-வசனம் மட்டுமே எழுதிய கமல் இப்போது இயக்குநராகவும் தன் திறமையை வெளிப்படுத்த எண்ணியுள்ளார்.

இந்தி 'மகாநதி'யில் கமலும் நடிக்கிறார். சுகன்யா கிடையாது. இந்தி நடிகை ரேகாவை சுகன்யாவின் பாத்திரத்தில் நடிக்க வைக்கும் எண்ணம் இருக்கிறதாம்.

தமிழில் 'மகாநதி' வசூலில் அதிக முன்னணியில் இல்லையென்றாலும், மிகத் தரமான படமாகப் பாராட்டப்படுகிறது. 'மகாநதி' மூலம் கமல் மீண்டும் தன் அற்புதமான முத்திரையை வெளிப்படுத்தி விட்டார்.

**மின்னலாய்**
**வந்து,**
**வில்லாய்**
**வளைந்து**
**விசிய**
**கணைகளால்**
**உன்னிடம்**
**வீழ்ந்தது**
**இதயக்**
**கோட்டை.**

## இணைந்து நடிப்பு

மலையாள நடிகர் மோகன்லாலும், கார்த்திக்கும் இணைந்து தமிழ் படம் ஒன்றில் நடிக்கப் போவதாக திட்டம் ஒன்று உண்டு. இயக்கப் போகிறார் சி.பி.மலை.


ராஜகுமாரி

42 மார்ச் 13-19, 1994
வாரமலர்
தினமுரசு

மாரன் ...த்தில்

## இனிச் சைவம்

மலையாள நடிகர் மம்முட்டி சுத்த சைவமாகி விட்டார். ஆடு, மாடு, கோழி என்று எதையுமே தொடுவதில்லை என்று சபதம் எடுத்து விட்டாராம். ஆயுர்வேத மருத்துவர் ஒருவரின் ஆலோசனைப் படிதான் முடிவு எடுத்திருக்கிறார்.

## கோடிகளை தள்ளியவர்

ஜேம்ஸ் பாண்ட் நடிப்பு

ஜேம்ஸ்பாண்ட் 007 பாத்திரத்திற்கு பொருத்தமானவர் என்று ரசிகர்களின் அமோக வரவேற்பு பெற்றவர் ஷான்கோனரி.

63 வயதான ஷான்கோனரியை மீண்டும் 007 பாத்திரத்தில் நடிக்க கூப்பிட்டார்கள். இருபது கோடி ரூபாய் ஊதியம் தர முன்வந்தும் கூட அவர் நோ சொல்லிவிட்டார்.


ஷான் கோனரி

## வதைமுகாம் அனுபவங்கள் படமாகிறது

கடந்த வருடம் வெளிவந்து உலகின் பல பாகங்களிலும் வெற்றிகரமாக ஓடி வசூலில் சாதனை படைத்த படம் 'ஜுராஸிக் பார்க்' 6 1/2 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் வாழ்ந்த டைனோசர்களைப் பற்றிய படம் அது. படத்தை இயக்கியவர் உலகப் புகழ் பெற்ற இயக்குநர் ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்.

இவர் தற்போது இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் வதை முகாமில் நடைபெற்ற உண்மைச் சம்பவங்களை படமாக்குகிறார். பெரும் வரவேற்பை பெறும் படமாக ஹாலிவுட்டில் பேசப்படும் என்கிறார்கள்.


ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## பாப்பா முரசு சிறுகதை




முட்டாள்களுக்குள் மிகப் பெரிய முட்டாள் யாரென்று கேட்டால் அந்தப் பெயர் ராஜனுக்கே மிகப் பொருந்தும். அவ்வளவு பெரிய முட்டாள் அவன்.

பள்ளிக்கூடத்தில் கொஞ்சக்காலம் படித்தவன்தான் அவன்.

'முட்டை எப்படி உண்டாகிறது?' என்று யாராவது கேட்டால் 'இப்படி உண்டாகிறது' என ஒரு வட்டம் போட்டுக் காட்டுவான்.

'நீ ஆணா பெண்ணா' என்று கேட்டால் 'இருங்கள் அம்மாவைக் கேட்டுச் சொல்கிறேன்' என்பான்.

'இரண்டு ரூபாவிற்கு மூக்குப்பொடி வாங்கி வா' என்று தாத்தா அவனிடம் காசு கொடுத்து அனுப்பினால், "யாருடைய மூக்கைப்பொடி பண்ணணும் தாத்தா?" என்று திருப்பிக் கேட்பான் அவன்.

ஒரு சமயம் தன் மாமாவின் ஊருக்குப் புறப்பட்டான். அப்போது அவனுடைய அப்பா, "உனக்குத் தேவையானதை இங்கேயிருந்து எடுத்துப்போ. அங்கே ஒரு மண்ணும் கிடைக்காது" என்றார்.

உடனே அவன் ஒரு மண் மூட்டையைத் தூக்கிக் கொண்டு போய் மாமாவிடம் கொடுத்துவிட்டான்.

"என்னடா இது?" என்றார் மாமா.

"அப்பா இங்கே ஒரு மண்ணும் கிடைக்காது என்றார். அதனால தான் ஒரு மூட்டை மண்ணைக் கொண்டு வந்தேன்" என்றான்.

மாமாவிற்கு சிரிப்பு வந்தது. ஊருக்குப் போகும் போது மாமா,"நீ யாரைக் கண்டும் எதைக் கண்டும் பயப்படக் கூடாது. உனக்குத் தோன்றியபடி நட. யார் சொல்லையும் கேட்காதே!", என்று புத்தி சொல்லி அனுப்பினார்.

போகும் வழியில் ஒரு பாம்பு படம் எடுத்து ஆடியது. உடனே மாமா சொல்லியது நினைவுக்கு வந்தது. "நீ எதைக் கண்டும் பயப்படக்கூடாது" என்று சொன்னதால் பயப்படாமல் பாம்பைப் பிடிக்கப் போனான். அந்த வழியாகப் போன ஒருவன், "வேண்டாம் பாம்பிற்குக் கிட்டப் போகாதே, அது கடித்து விடும்," என்றான். "என் மாமா, 'நீ யார் சொல்லையும் கேட்கக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார்.நான் அப்படித்தான் பிடிப்பேன்," என்று போய்ப் பிடிக்க பாம்பு அவனைக் கொத்தியது.

விஷம் ஏறிய ஆபத்தான நிலையில் அவனைக் கொண்டுவந்து அவன் வீட்டில் சேர்த்தனர். வைத்தியர் வந்து வைத்தியம் செய்து அவனைப்பிழைக்க வைத்தார்.

வைத்தியர் போகும் போது ராஜனிடம் "ஓய்வு எடுத்துக் கொள்" என்றார்.

"அது எங்கே கிடைக்கும்?" என்று வைத்தியரைப்பார்த்து திருப்பிக் கேட்டான். அவருக்குச் சிரிப்பு வந்தது.

மற்றொரு சமயம் அப்பா, "உழுந்து வாங்கிக் கொண்டு வா" என ஐம்பது ரூபா கொடுத்தார்.

போனவன் ரொம்ப நேரம் கழித்து திரும்பி வந்து கேட்டான், "வெள்ளை உழுந்தா, கறுப்பு உழுந்தா?"

"ஏதோ ஒன்று," என்றார் அப்பா.

மறுபடியும் கடைக்குப்போய்த் திரும்பியவன் "ஏதோ ஒன்று கொடு என்றேன். கன்னத்தில் அறைந்து விட்டான்," என்று அழுதபடியே வந்தான். ஒரு நாள் பச்சைக் கடலையைக் கொண்டு வந்து தின்னக் கொடுத்தாள் அம்மா.

அப்பா, "கடலையைப் பச்சையாகக் கொடுக்காதே, வறுத்துக் கொடு" என்றார்.

வறுத்த பிறகு கடலை ருசி அதிகமாக இருந்ததை அறிந்த அவன் அம்மாவிடம் கேட்டான்,

"இவ்வளவு ருசியாக இருக்கும் வேர்க் கடலையைப் பச்சையாக விதைத்து அறுவடை செய்து பிறகு வறுத்து, சாப்பிடுவதை விட, கடலையை வறுத்தே விதைத்தால் விளைச்சலும் வறுத்த கடலையாகவே வருமே. வறுக்கும் வேலை மிச்சமாகுமே!" என்றான்.

அம்மாவுக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

குழந்தைகளே! முட்டாள் என்பவன் முட்டாளாகவே பிறப்பதில்லை. தன்னைத் திருத்திக் கொண்டு நடந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம்.

## அப்படியானால் சரி



புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் பைரன். இவர் கேம்பிரிட்ஜ் கல்கலைக்கழகத்தில் படித்தபோது விடுதி அறையில் நாயை வளர்த்தார். விடுதியில் நாய்கள் வளர்க்கத் தடை உள்ளது என்று விடுதிப் பொறுப்பாளர் கூறினார்.

அப்படியா? என்று கேட்டுக்கொண்ட பைரன் உடனே ஒரு கரடிக்குட்டியை வளர்க்க ஆரம்பித்தார்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.03.1994.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 32**
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 29**

**பரிசுக்குரியவர்**
வி.கௌரிதாசன்
புனித சூசையப்பர் கல்லூரி
திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்**
றிஸ்வானா பரீட்
கொழும்பு-12.

செல்வி.தர்சினி இராமசாமி
டயகம ஈஸ்ட் த.ம.வி-டயகம.

க.சி.பிரேம் ஆனந்
இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
திருகோணமலை.

ந.துஷ்யந்தினி
நற்பிட்டிமுனை த.வி.
கல்முனை.

பிரகீத் நிமலேந்திரன்
கார்மல் பாத்திமா கல்லூரி- கல்முனை.

செல்வி. இ.புஸ்பா
தம்பிலுவில் ம.மகாவித்தியாலயம்- தம்பிலுவில்.

செல்வி.தர்சினி.ஜெயசோதி
களு/பேர்த் அரசினர் தமிழ் பாடசாலை
ஹொரணை.

# பாப்பா முரசு

### செய்து பாருங்கள்

## காகித பேர்ஸ்



சற்று கனமான காகித கவர்கள் இரண்டை எடுத்துக் கொள்ளவும். ஒரு கவரின் மூடியை வெட்டி எடுத்து விடவும். மற்றொரு கவரின் மூடியின் வெளிப்புறம் பசை தடவி அதை மூடிவெட்டப்பட்ட கவரின் உள்ளே நுழைத்து நன்கு ஒட்டவும். இந்த இரண்டு கவர்களையும் ஒன்றன்மீது ஒன்றாக மூடவும். சிறு சிறு நாணயங்கள், ஸ்டாம்புகள் போட பேர்ஸ் தயார். பேர்சின் மேல்புறம் அழகிய ஓவியமும் தீட்டினால் நன்று!

வீட்டில் ஓய்வாக இருக்கும்போது பொழுதை ஒரு முயற்சியோடு கழிக்கலாம் அல்லவா? முயலுங்கள்.

## கண்டு பிடித்தவர்கள்

* டைனமைடை கண்டு பிடித்தவர் டாக்டர் அல்பிரட் நோபல். இவர்தான் நோபல் பரிசை ஏற்படுத்தியவர். இவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவர்.
* மோனாலிசா ஓவியத்தை வரைந்தவர் பிரபல ஓவியரான லியனார்டோ டாவின்ஸி. இவர் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானியுமாவார். இவர் இத்தாலியைச்சேர்ந்தவர்.

## யானை நீந்துமா?



யானையின் உடலைப் பார்த்தால் அதனால் நீந்தமுடியும் என்று யாரும் நம்ப மாட்டார்கள். 1850ல் ஒரு யானை கடலில் நீந்தி இந்தக் கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

கப்பல் ஒன்றில் வந்துகொண்டிருந்த யானை கடலில் தவறி விழுந்துவிட்டது.

அது விழுந்த இடத்தில் இருந்து அமெரிக்காவின் தெற்கு கரோலினா கடற்கரை 48 கி.மீற்றர் தூரத்தில் இருந்தது.

யானை மெதுவாக நீந்தி கரையை அடைந்தது. மற்றப் பிராணிகளைவிட யானை மிக மெதுவாக நீந்தக்கூடியது.

யானைகளின் நீச்சல் திறமையை பல விஞ்ஞானிகள் ஆராய்ந்து உறுதி செய்துள்ளனர்.

### முக்கிய வாசஸ்தலங்கள்

1. பிரித்தானியா மகாராணியின் வாசஸ்தலம் – பங்கிங்காம் அரண்மனை
2. பிரித்தானிய பிரதமரின் வாசஸ்தலம் – டவுனிங் வீதி இல.10
3. இலங்கை ஜனாதிபதியின் வாசஸ்தலம் – ஜனாதிபதி மாளிகை
4. இலங்கை பிரதமரின் வாசஸ்தலம் – அலரி மாளிகை
5. இந்திய ஜனாதிபதயின் வாசஸ்தலம் – ராஷ்ட்ரபதி பவான்
6. இந்திய பிரதமரின் வாசஸ்தலம் – ஜன்பத்
7. ரஷ்ய ஜனாதிபதியின் வாசஸ்தலம் – கிரெம்ளின்
8. அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலம் – வெள்ளை மாளிகை

சுகந்தினி முத்துக்குமார்
இந்துக்கல்லூரி
மூத்துவராம்.

## அறிவோம் மனதில் பதிவோம்



பதினாறாம் நூற்றாண்டில் ஹாலந்து நாட்டில் வாழ்ந்த இவா பிலீகன் என்ற பெண் பூக்களின் மணத்தை நுகர்ந்து சக்தியைப் பெற்றதாகவும், பல ஆண்டுகளாக அவள் எதுவுமே சாப்பிட்டதில்லை என்றும் கூறப்படுகிறது.

இரண்டு வான்கோழிகள் சண்டையிடும்போது, தோற்றுப் போகும் நிலையில் உள்ள வான் கோழி தரையில் விழுந்து தலையைத் தாழ்த்தும், உடனே எதிரி வான் கோழி அதைத் தாக்குவதை விட்டு விடும். மயிலும், வான்கோழியும் சண்டையிடும்போது, வான்கோழி தோற்கும் நிலையில் இருந்தால் அது தன் இன வழக்கப்படி தரையில் விழுந்து தலையைத் தாழ்த்தும். வான்கோழியின் இந்தச் செய்கையின் விவரம் மயிலுக்குப் புரியாது. அது ஆவேசமாகத் தொடர்ந்து வான்கோழியைத் தாக்கிக் கொன்று விடும். அல்லது யாரேனும் தடுக்கும் வரை வான் கோழியைக் கொத்திக் கொண்டே இருக்கும்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்

இந்தியாவைச் சேர்ந்த ஒரு வேகப்பந்து வீச்சாளர் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச விக்கட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைப்பார் என்று பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் யாராவது ஒருவர் கூறியிருந்தால், இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய நகைச் சுவையாக அது கருதப்பட்டிருக்கும். வேகப் பந்து வீச்சே துளிர் விடாத மண்ணில் விளைச்சல் கிடைக்கும் என்று சொன்னால் யாருக்குத்தான் நகைச்சுவையாக இருக்காது!

ஆனால் உலக அரங்கில் இயற்கை விதிகளையும், பழைய நியதிகளையும் பொய்யாக்கி இன்று டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்து சரித்திரமாகியுள்ளவர் உலகின் தலை சிறந்த சகலதுறை ஆட்டக் காரரான கபில்தேவ் நிகன்ஜ்.

அகமதாபாத்தில் உலக சாதனை படைத்த போதும் சரி கபில்தேவ் தனதுசாதனை நீண்ட காலம் நிற்கும் என்றோ, தனது சாதனையை முறியடிக்கவே முடியாது என்றோ கூற வில்லை. இந்தியாவாலும் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களை உருவாக்க முடியும் என்பதே தனது சாதனையின் மூலம் தாம் உலகுக்குக் கூற விரும்பும் கருத்து என்று கூறினார் கபில்தேவ்.

இந்த மகா சாதனைப் படிக்கு கபில்தேவ் சுமார் 16 ஆண்டுகள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. 1978ல் பைசாலாபாத்தில் தனது முதல் டெஸ்டில் பாகிஸ்தானுக்கு எதிராக தனது வலக்கையைச் சுழற்றத் தொடங்கியது முதல் உலக சாதனை படைத்த 130வது டெஸ்ட் வரை உடல் நலக்குறைவு, பாரமின்மை போன்ற காரணங்களுக்காக ஒரு டெஸ்ட்டைக்கூட விளையாடாமல் விட்டதில்லை.

கிரிக்கெட்டில் அதிக பட்ச விக்கட் சாதனைகள் நிகழ்த்தப்பட்ட போது, உடனே எழுப்பப்பட்ட கேள்வி- இந்தச் சாதனை யாரால் முறியடிக்கப்படும் என்பதுதான். அந்த வகையில் கபில்தேவின் சாதனைக்குப் பின்னும் ஒரு கேள்விக்குறி எழுப்பப்படாமல் இல்லை. அப்படி எழுப்பப்பட்ட கேள்விக்குறிக்கு யூக விடைகளாகக் கிடைத்திருப்பவர்கள் மூவர். முதலாமவர் பாகிஸ்தானின் வக்கார் யூனுஸ். யூனுஸின் தற்போதைய ஸ்ட்ரைக் ரேட் ஒரு டெஸ்ட்டுக்கு 5.69 விக்கட்டுக்களாகும். இதன்படி பார்த்தால் 53 டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும். இவர் ஒரு ஆண்டில் சராசரியாக 4.33 டெஸ்ட்டுக்கள் விளையாட வேண்டும். இந்த வகையில் பார்த்தால் இன்னும் 12 ஆண்டுகள் வக்கார் யூனுஸ் பாகிஸ்தான் அணியில் விளையாட வேண்டும்.

அடுத்து இருப்பவர் அவுஸ்திரேலியாவின் லெக்-ஸ்பின்னர் ஷேன் வோன். கடந்த மூன்று ஆண்டுகளில் இவரது ஸ்ட்ரைக் ரேட் ஒரு டெஸ்ட்டுக்கு 4.30 விக்கட்டுக்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் இன்னும் 11 ஆண்டுகள் அவுஸ்திரேலிய அணிக்காகப் பந்து வீச வேண்டும்.

# ஹாட்லி படைத்ததை கபில் உடைத்தார்!

## கபில் படைத்ததை உடைப்பது யார்?

## பட்டியலில் இருப்பவர் மூவர்

இப்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் 432 விக்கட்டுக்கள்- அதுவும் அதில் பெரும்பாலான விக்கட்டுக்கள் இந்திய மண்ணில் வீழ்த்தப்பட்டு உலக சாதனையாகியுள்ளது என்றால் உலகின் உயர்ந்த அதிசயங்களில் ஒன்று என்பதில் இருவேறு கருத்திருக்க முடியாது.

1964ம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் பிரட் ட்ரூமன் 300 டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்திய முதல் பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் படைத்தார். ட்ரூமனிடம், அவரது சாதனையை யாராவது சமன் செய்வார்களா? என்றுகேட்டபோது, "அப்படி யாராவது செய்கிறார் என்றால் அவர் மிகவும் களைத்து விடுவார்." என்று கூறினார். ஆனால் மேற்கிந்தியத் தீவுகளின் ஒவ்ஸ்பின்னர் லோன்ஸ் கிர்பீஸ், ட்ரூமனின் 306 விக்கட்டுக்கள் என்ற உலக சாதனையை முறியடித்தார். தனது சாதனை முறியடிக்கப்பட மாட்டாது என்று கிர்பீஸ்சும் நம்பினார்.

ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச விக்கட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்த அவுஸ்திரேலியாவின் டென்னிஸ் லில்லி, மற்றும் இங்கிலாந்தின் இயன் பொத்தம் இருவரும் தங்களது சாதனை நீண்ட நாள் நிலைக்காது என்று நம்பினார்கள். அதே போல் 431 டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்தி மகத்தான உலக சாதனை படைத்த நியூசிலாந்தின் ரிச்சட் ஹாட்லியும் தனது சாதனைக்கு நீண்ட ஆயுள் இல்லை என்று நம்பினார். இதற்குக் காரணம், இந்த மூன்று வீரர்களையும் துரத்திக் கொண்டு கபில்தேவ் என்ற மாமனிதர் வந்து கொண்டு இருந்தது தான்.

இவ்வருடம் பெங்களூரில் இலங்கைக்கு எதிராக இரண்டாவது டெஸ்டில் ஹாட்லியின் 431 டெஸ்ட் விக்கட்டுக்களைச் சமன் செய்த கபில்தேவ் இதே தொடரில் அகமதாபாத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்டில் 432வது விக்கட்டை வீழ்த்தி, உலக சாதனையைப் படைத்து சரித்திரமாகியுள்ளார்.

பெங்களூர் டெஸ்டில் ஹாட்லியின் சாதனையைச் சமன் செய்தபோதும் சரி, தொடர்ந்து விளையாடிக்கொண்டிருக்கிறார். இந்த 16ஆண்டுகளில் ஒரே ஒரு டெஸ்டில் மட்டும் கபில்தேவ் இந்திய அணியில் இடம் பெறவில்லை. அதற்குக் காரணம் ஒழுக்க நடவடிக்கை என்று தேர்வுக்குழு செய்த நடவடிக்கையே. இந்த வகையில் பார்த்தாலும் தொடர்ச்சியாக 130 டெஸ்ட்டுக்களை விளையாடியவர் என்ற உலக சாதனையையும்



கபில்தேவ் படைத்துள்ளார். 1984-85ல் இந்திய அணியில் இடம் பெறாத அந்த கல்கத்தா டெஸ்ட்டை கணக்கில் எடுத்துக் கொண்டால் தொடர்ச்சியாக 67 டெஸ்ட் போட்டிகள் என்பது ஒரு வேகப்பந்து என்ற முறையில் உலக சாதனையாகவும் கருதப்படுகிறது. இவைகளுடன் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகப் பந்துகளை வீசியவர் என்ற சாதனையையும் கபில்தேவே படைத்துள்ளார்.

ட்ரூமன் முதல் ஹாட்லி வரை டெஸ்ட்

மூன்றாவதாக இருப்பவர் மற்றொரு இந்திய வீரரான லெக் ஸ்பின்னர் அனில் கும்பிளே. கும்பிளே 1990ல் விளையாடிய ஒரு டெஸ்ட்டை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் ஒரு வருடத்திற்குச் சராசரியாக 7 டெஸ்ட்டுக்களில் விளையாடி யுள்ளார். இவரின் சராசரி ஸ்ட்ரைக்ரேட் 5.53 விக்கட்டுக்கள். அதாவது ஓராண்டுக்கு சுமார் 39 விக்கட்டுக்களை சராசரியாகப் பெற்றிருக்கிறார் அனில் கும்பிளே. தற்போது 83 டெஸ்ட் விக்கட்டுக்களைக் கைப்பற்றியுள்ள அனில் கும்பிளே, கபில் தேவின் சாதனையை எட்டிப்பிடிக்க வேண்டுமானால் இன்னும் சுமார் 10 வருடங்கள் இந்திய அணியில் இடம் பெற்றாக வேண்டும். முந்தைய இருவரைக் காட்டிலும் அனில் கும்பிளேக்கு உள்ள சிறப்பம்சம், இந்தியா அதிக பட்சம் சுழற் பந்திற்குச் சாதகமான இந்திய மண்ணில்தான் அதிக டெஸ்ட்டுக்களை விளையாடும் என்பதுடன் மற்றவர்களை விட கும்பிளே வயதிலும் இளையவர் என்பதும் ஆகும்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச டெஸ்ட் விக்கட்டுக்கள் என்ற ட்ரூமனின் உலக சாதனை சுமார் 12 ஆண்டுகள் முறியடிக்கப்படாமல் இருந்தது. ஹாட்லியின் சாதனை மூன்றரை வருடங்கள் முறியடிக்கப் படாமல் இருந்தது. கபில்தேவின் இந்த உலக சாதனை கண்டிப்பாக எந்த வகையில் பார்த்தாலும் 12 ஆண்டுகளுக்குள் யாராலும் நெருங்க முடியாது என்பது உறுதி. இதனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக பட்ச டெஸ்ட் விக்கட்டுக்கள் என்ற உலக சாதனைச் சிம்மாசனத்தில் மன்னனாக அல்ல, மன்னாதி மன்னனாக நீண்ட ஆண்டுகள் அமர்ந்திருக்கப் போகிறார் கபில்தேவ்.

### உள்ளம் உருகுதடி தோழி!

தோழி!...
நேற்று வரை
மௌனமாகி,...
இன்று-தன்,
வசமிழந்து,
துறவறம் தொலைத்து,
வெளியேறும்...,
இந்த,
வார்த்தைகள்!....

இது -வெறும்
வார்த்தைகள் அல்ல,
என்- இதயத்தின்,
ஓசைகள்..!

நினைத்திருந்த,
நெஞ்சங்கள்..
நிலைக்காமல் போனதால்,
சூனியமாய்ப் போன,...
என்னை...
சுகப்படுத்தியவள்,...
நீ....!

மலர்களைக் கொடுத்த,
எனக்கு...
முட்களைத் தந்தவர்,
மத்தியில்;
தென்றலாய் நுழைந்து,
தழுவியவள்,...
நீ...!

இதய ரணங்களை,....
இதமாக்கி,....
முகாரி அழித்து.....,
பூபாளம் பாடியவள்
நீ...!

என்-
கொள்கை
வரம்புகளையும்,
மீறி-எனை,
வெளிக் கொணர்ந்தவள்.....,
நீ...!

போலிகளின்,
முகமூடி கிழித்து...
இலை மறைகாயான,
நிதர்சனங்களை.....
நிர்வாணப்படுத்தி.....,
உணர்த்தியவள்
நீ.....!

நீ....
புதுமைப் பெண்ணல்ல
என்னை-
புரிந்தவள்...,
புதியவனாக்கியவள்....!
இப்படி...,
இன்னும்..,
இப்படி...?
எத்தனையோ
உடைந்த-என்னை
செப்பனிட்ட,
நிகழ்வுகள்....,
எத்தனையோ!

இது-

காதல் அல்ல!...
"உணர்வுகளின்.....
ஸ்பரிசம்......"
"உறவுகளின்.....,
புனிதம்...,"

-யாழுமீர் மர்வான்
கல்கிசை.



### வடுக்...

தேவி...நீ
நீயாக இல்லாமல்
தீயாக.....ஏன்..?
எப்படி
மாறிப்போனாய்?

•

காலங்காலமாக
அவதானித்து
அலங்கரித்துக் கட்டிய-என்
காதல் கோட்டையை
தகர்த்தெறிந்தவளே...
அந்த
பாபர் மசூதியை
இடித்தவர்களைப் போல
உன்னையும் என்னால்
மனிக்கவே முடியவில்லை

•

என்
இதயத்தோடு-உன்
இதயத்தை வைத்து
தைத்த...தையலே
ஏனோ....நீ
கவனமாக அதை
கழற்றிக் கொண்டுபோனாய்....
இதோ...பார்
கிழிந்து கிடப்பது...எனது
இதயம் மட்டுமல்ல
வாழ்க்கையும்தான்.

•

ஆசைகளையும்
என்னில்
விதைத்துவிட்டு-அதன்
அறுவடைக்காகவா
தந்தாய்-உன்
திருமண அழைப்பிதழ்
என்னும்
அரிவாளை...?

•

பூந்தென்றலாக
நுழைந்து-ஒரு
பூகம்பத்தையே
என்மீது
வீசிவிட்டுச் சென்ற
பூவையே...உன்
பூவும் பொட்டும்
நிலைக்கட்டும்
என்றென்றும்.

•

அக்கரைப்பற்று
ஏ.ஜீ.சேகர்.

## தேன் கிண்ணம்

### மனமே நீ...

என்னை அடித்துப் போட்டுவிட்டு
என்னோடு அழும்
விசித்திரம் அது!

வேதனைகளைச் சேர்த்து
வைக்கும் பின் மாலை கோர்க்கும்.
சந்தோஷ குமிழிகளை மட்டும்
உடனே உடைக்கும்!

நான் நினைக்க விரும்புவதை
அழித்துப் போடும்
மறக்க நினைப்பதை மட்டும்
சிலையாய்ச் செதுக்கி
வைக்கும்.

முரண்டு பிடித்தாலும்
முத்தமும் தரும்- சந்தோஷமாய்ச்

சிரிக்கையிலேயே
முள்ளாலும் கீறும்.

மனமொரு நாட்டியமேடை...
என் நினைவுப் பாதங்கள்தான்
தொலைத்து விட்டனவே
சந்தோஷச் சலங்கையை!

-ஷர்மிளா இஸ்மாயில்
கண்டி-



### இதயத்தில் உன் பெயர்

உன் கண்ணீருக்கு
அர்த்தம் புரியவில்லை,
உன்-
வார்த்தைகள் ஏன்
விஷப்பாம்பின்
பற்களாயின?

•

மெல்லிய புன்னகையால்
என் காதலை
ஸ்பரிசித்தவளே..!
கோபச் சூறாவளியை
நீ வீசிச் சென்றதால்
கம்புச் சுள்ளிகளைப் போல
மனது உடைந்து கிடக்கிறது!

•

நீ வந்து-
"உஸ்....உஸ்..." என்ற போது
நான் நினைத்தேன்,
வழமையான என்
வசந்தம் வந்து விட்டதாக.
நீ-
கதைத்த போதுதான்
கண்டு கொண்டேன்
நெருப்புக் கட்டிகளை
சுமந்து வந்திருந்ததை!

•

நினைத்து நினைத்து
நான்-

மகிழ்ந்து கொள்ளுகிற
மஞ்சள் நிலவே..!
நீ-
ஒருதடவை என்
வாசலுக்கு வந்து பார்!
உடைந்து கிடக்கின்ற
என் உள்ளத்தின் துண்டுகள்
உனது பெயரையே
உச்சரித்துக் கொண்டும்
எழுதிக் கொண்டும் இருப்பதை!

-காத்தான்குடி அனு-

## இந்த வாரம் உங்கள் பலன்

### (13.03.94 முதல் 19.03.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன் சனி, செவ்வாய் |
| மீனம் | - வெள்ளி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |

சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| திங்கள்- | செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, அற்ப சுகம். | பி.ப 2 மணி |
| புதன்- | வீண் தொல்லை, மனக் கவலை. | காலை 8 மணி |
| வியாழன்- | செலவு மிகுதி, பணத் தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, உயர்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பொருள் நஷ்டம், கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | நற்சுகம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | உயர்ந்தோர் நட்பு, பணவரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, பிரயாணம். | காலை 7 மணி |
| புதன்- | வீண் பிரச்சனை, மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவம். | காலை 10 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பி.ப 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் பயம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், உறவினர் உதவி. | பி.ப 2 மணி |
| திங்கள்- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | பி.ப 3 மணி |
| செவ்வாய்- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | தூர இடப் பயணம், நிலைப்பிரிவு. | பகல் 10 மணி |
| வெள்ளி- | சுகபோகம், தெய்வானுகூலம். | பகல் 11 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், மனக் குழப்பம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி,அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, கடின உழைப்பு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | கௌரவம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| வியாழன்- | புதிய தொழில் முயற்சி, வீண் சந்தேகம். | காலை 10 மணி |
| வெள்ளி- | கடன் தொல்லை, பிரயாணம். | காலை 9 மணி |
| சனி- | உயர்ந்தோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் சகாயம், மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, செய்தொழில் மேன்மை. | காலை 6 மணி |
| வியாழன்- | பணவரவுத் தடை, காரிய சித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| சனி- | தன லாபம், ஊதாரித்தனம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், உயர்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள- | கௌரவம், தொழில் சித்தி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் மேன்மை, பணவரவு. | பகல் 10 மணி |
| புதன்- | பிரயாணம், உறவினர் தொல்லை. | காலை 9 மணி |
| வியாழன்- | செய்தொழில் பிணக்கு, மனக்கலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், பணத் தட்டுப்பாடு. | பி.ப. 2 மணி |
| சனி- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | தன லாபம், செய்தொழில் விருத்தி. | காலை 8 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை நீங்கும், பொருள் வரவு. | காலை 9 மணி |
| புதன்- | செய்தொழில் நஷ்டம், பெரியோர் உதவி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | கருமங்களில் வெற்றி, உயர்ந்த எண்ணம். | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் சந்தேகம், மனக் கலக்கம். | பி.ப 1 மணி |
| சனி- | தன லாபம், செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், கவலை. | காலை 9 மணி |
| திங்கள்- | உறவினர் பகை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், குடும்பக் கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, மறைமுக எதிர்ப்பு. | பகல் 1 மணி |
| வியாழன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பணக் கஷ்டம், வெளியிடப் பிரயாணம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் சகாயம், கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை 9 மணி |
| புதன்- | வெளியிடப் பிரயாணம், பணத் தட்டுப்பாடு. | பகல் 11 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அதிகாரப் பேறு. | பி.ப 2 மணி |
| சனி- | அரச விரோதம், பணச் செலவு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, கௌரவ நிலை. | காலை 9 மணி |
| திங்கள்- | மன மகிழ்ச்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் மேன்மை, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, முயற்சி மேன்மை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக உயர்ச்சி | காலை 7 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், திடீர் பிரயாணம். | காலை 9 மணி |
| சனி- | செலவுக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பண வரவு,காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய தொழில் சேர்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | காரியத் தடை, மனக் கலக்கம். | காலை 9 மணி |
| வியாழன்- | ஊதாரித் தனம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| சனி- | செய்தொழில் விருத்தி, கீர்த்தி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பணச் செலவு. | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு,. பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கௌரவம், தேகசுகம் பாதிப்பு. | காலை 10 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, தொழில் மேன்மை. | காலை 8 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | காலை 9 மணி |
| சனி- | அதிகார விருத்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன்,அதிஷ்ட இலக்கம்- 7

# மருத்துவ ✝ விந்தைகள்

## மறக்கமுடியவில்லை அன்று பருத்த உடலை!

## நம்பமுடியவில்லை இன்று மெலிந்துபோன உடலை!!

ரெறி ஹெயின்றிச் இண்டியானா மாநிலத்திலுள்ள சண்மானில் ஒரு பிரபல ஹோட்டல் உணவுப் பிரிவின் தலைமை சமயற்காரர். வயது 43. உயரம் 5 அடி 11 அங்குலம். ஆனால் எடையோ 413 இறாத்தல்.

எப்போதும் சமையலறையிலேயே காலம் கழிவதால், விவாகரத்துப் பண்ணிய 3 குழந்தைகளின் தகப்பனாரான ரெறிக்கு எப்போதும் உணவுப் பண்டங்களை வாயில் போட்டு மெல்லுவதுதான் பெரும் பொழுது போக்கு.

தான் தயாரிக்கும் உணவு வகைகளை 'உருசி பார்ப்பது' என்ற பெயரில் உள்ளே தள்ளி விடுவார். எஞ்சியிருக்கும் உணவினையும் ஒரு கை பார்ப்பார். இதனால் ரெறியின் உடல் அபரிமிதமாகப் பெருக்க ஆரம்பித்து விட்டது. வெண்ணை சேராத எந்த உணவையும் உண்ணமாட்டார். இறைச்சிப் பொரியல், உருளைக் கிழங்கு 'சிப்ஸ்', ஹம்பேர்க் ஆகியவற்றை எப்போதும் மென்று கொண்டேயிருப்பார். தினசரி இரண்டு பைந்த் ஐஸ்கிறீம் ரெறியின் வழக்கமான பதார்த்தம்.

வயிற்றுக்கும் வாய்க்கும் வஞ்சகம் செய்து பழகாத ரெறிக்கு அடிக்கடி மூச்சுத்திணறலும், களைப்பும் தோன்றும். வேலையில் பழைய ஈடுபாடும் இல்லாமற் போகவே ஹோட்டல் நிர்வாகம் ஒரு மருத்துவரிடம் இவரைப் பலாத்காரமாய் கொண்டு போய் நிறுத்தியது.

> **இப்பொழுதெல்லாம் இவர் பணிபுரியும் ஹோட்டல் உணவு விடுதிக்கு வருவோருக்கெல்லாம் 'ரெறியின் உணவு முறை' என்ற சிறப்பு உணவு அம்சமும் பரிமாறப்படுகிறது. தங்கள் உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள், இத்துறையில் நேரடி அனுபவம் பெற்ற ரெறியின் தயாரிப்புக்களை நாடி வருகின்றனராம்.**

"தற்செயலாக உனக்கு ஏதாவது அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டால் நிச்சயமாக அதுவே உன்னை மரண வாயிலில் கொண்டு போய் விட்டுவிடும்" என்று எச்சரித்த மருத்துவர், உடனடியாக உணவுக் கட்டுப் பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறினார்.

60 அங்குல அளவு (வயிறு) கொண்ட கொட்டான் கால் சட்டையும் ரிசேட்டும் அணிந்து உடல் பருமன் குறைக்கும் நிலையம் சென்று வரலானார். அவருடைய உருவத்தையும் தோற்றத்தையும் பார்த்த பலர் கிண்டலும் கேலியும் செய்தனர். தயங்காமல் பயிற்சியை மேற்கொண்டார்.

கொழுப்பைச் சேர்க்கும் இறைச்சி வகை, எண்ணை, இனிப்புப் பதார்த்தங்கள், அதிக விருப்பத்தினை ஊட்டும் உருளைக் கிழங்கு ஆகியவற்றைத் துறந்தார். 4 மாதங்களில் நல்ல பலன் கண்டார். பயிற்சியும் உணவுக்கட்டுப்பாடும் தொடங்கி எட்டாவது மாதத்தில் எடையில் 200 இறாத்தல் பறந்துபோய் இன்று 213 இறாத்தல் எடையுடன் சுகதேகியாகக் காணப்படுகிறார்.






## என்னதான் இரகசியமோ என்றும் இளமையாய் இருப்பதற்கு?

ஹோலிவூடின் தலைசிறந்த கதாநாயக நடிகராகத் திகழ்ந்த போல் நியூமான் தனது 70 வயதிலும் இளமைத் தோற்றதுடன் திகழ்ந்திருக்கிறார். இள மங்கையரே இவருடைய தோற்றத்தில் மயங்கும் அளவு படு கவர்ச்சியாகக் காணப்படுகிறார்.

இதற்கான இரகசியம் என்ன என்பதனை நியூமானின் நண்பர் ஒருவர் அண்மையில் வெளியிட்டார். "கொழுப்பும் உப்பும் கொண்ட எந்த உணவையும் நியூமான் விரும்புவதில்லை. ரியூனா வகை மீனை அதிகம் உண்பார். இதனையும் வெறுமனே நீரில் வேகவைத்தே உண்பாரே தவிர எண்ணையில் பொரித்து உண்ணுவதில்லை.

"நியூமான் அதிகம் பழங்களையும் காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ளுகிறார். அடிக்கடி கோழியும் உணவில் சேர்க்கப்படும்" இவ்வாறு அவர் கூறுகிறார்.

தனது வயிற்றில் தொந்தி விழாமலிருக்க தினசரி 100 தோப்புக்கரணங்களை நியூமான் போடுவாராம். இருதயக் கோளாறுகள் வராமலிருக்க சைக்கிள் சவாரியையும் தினசரிப் பழக்கமாக்கிக் கொண்டுள்ளார்.

முகத்தில் இரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்த ஐஸ் கட்டிகளை ஒரு அகன்ற பாத்திரத்தில் பரப்பிவைத்து சில நிமிட நேரம் தனது முகத்தை அந்த ஐசில் புகுத்திக் கொள்கிறார். இதனால் அவருடைய முகத்தில் பொலிவும் இளமையும் தோன்றுகிறது என்கிறார் நியூமானின் நண்பர்.

## உணவுக்கட்டுப்பாட்டில் கவனிக்க வேண்டியது

### புரதத்தைப் புறக்கணிக்காதீர்கள்!

உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில் உங்கள் உடலின் தேவைக்கு அவசியம் வேண்டப்படும் புரதங்களை இழந்துவிடலாகாது. மீன் மற்றும் மாமிச உணவுகளை ஒதுக்கிவிட்டு வெறும் காய்கறி உணவுகளை மட்டுமே புசிப்பவர்கள் அவசியமான புரதத்தை இழந்துவிட நேரிடும் என்று கென்ற் ஸரேற் பல்கலைக்கழக உணவியலாளரான பீற்றர் லெமன் எச்சரிக்கிறார். "நோய் எதுவும் உடலைப் பற்றிக்கொள்ளாமல் தடுக்கும் திராணியை அளிப்பதுடன் தசைகளை உறுதிப்படுத்துவதிலும் மீன் மற்றும் இறைச்சி உணவுக்கு அதிக பங்குண்டு. இவை இரண்டிலும் புரதச் சத்துப் பொதிந்து கிடக்கிறது" என்கிறார் அந்நிபுணர்.

சார்தாரண பெண்ணுக்கு நாளொன்றுக்கு 45 முதல் 50 கிராம் புரதச் சத்து தேவை.

அதேவேளை வெளியில் வேலைக்குச் செல்லும் பெண்ணானால் இதனைப்போன்று இருமடங்கு புரதச்சத்துத் தேவைப்படும்.

வேண்டிய அளவு புரதச்சத்தை மீனிலிருந்து பெறலாம் என்கிறார் டாக்டர் பீட்டர்.

## திக்குவாயைப் போக்க முடியும்!

திக்குவாய் குறைபாடு உள்ளவர்கள் தாங்களாகவே திக்குவாயைத் திருத்திக் கொள்ள கோவை பாரதியார் பல்கலைக்கழக உளவியல் துறை இணை பேராசிரியரும் விஞ்ஞானியுமான டாக்டர் வேதகிரி கணேசன் சில எளிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து உள்ளார். இந்தப் புதிய வழிமுறைகளில் பலர் குணமடைந்து உள்ளனர். திக்குவாய் உள்ளவர்கள் தாங்களாகவே திருத்திக்கொள்ள உதவும் சில முறைகள்.

THREE SSS (மூன்று 'S'கள்) முறை- (Sound, Show, Silence)

Sound உரக்கப் பேசப் பழகுவது- ஒன்றிலிருந்து பத்தாயிரம் வரை உரக்க எண்ணுவது. 30 அடிக்கு அப்பால் இருப்பவருக்குத் தெளிவாகக் கேட்கும் அளவுக்குத் தினமும் 30 நிமிடம் இப்படிப் பேசிப் பழக வேண்டும்.

Show அவசரமின்றிப் பொறுமையுடன் ஒவ்வொரு வார்த்தையையும் நீட்டி, இழுத்து உச்சரித்தல்- உதாரணமாக ஒன்று என்பதை ஒஒஒஒன்ன்ன்றுறுறுறு என்பதுபோல தினமும் 30 நிமிடம் செய்துவர வேண்டும்.

Silence ஒரு வார்த்தையை உச்சரித்ததும் அடுத்த வார்த்தைக்கு முன்னால் சிறிது "அமைதி"யாக இருத்தல், உதாரணமாக "யோகேஷ் நன்றாகப் படிக்கிறான்" என்பதை "யோகேஷ்" "நன்றாக" "படிக்கிறான்" என்பது போல் கூறவேண்டும். தினமும் 30 நிமிடம் செய்தால் போதும்.

திக்குவாய் பிறவி நோயல்ல. தவறான பழக்கம்தான். ஆகவே திருந்த வாய்ப்பு உள்ளது.

தைரியத்தையும், வீரத்தையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் பயந்த சுபாவம் மாறி திக்கல் குறையும்.



டாக்டர் வேதகிரி கணேசன்

குழந்தைகளைச் சீக்கிரம் பேசச்சொல்லி அவசரப்படுத்தல் கூடாது. உடலை நன்கு தளரவிட்ட நிலையில் (Relaxed State) பேச வேண்டும். கைவிரல்கள், கால்விரல்கள் தளர்வாக இருக்க வேண்டும். மூச்சு சீரான முறையில், மெதுவாக இயங்க வேண்டும். பிராணாயாமப் பயிற்சி உதவும்.

## வாழ நினைத்தால் வாழலாம்

## வாழ்க்கை இனிக்க வழி சொல்லுகிறார்கள்!

**ஐந்து சகோதரர்கள் ஐந்து சகோதரிகளை மணம் முடித்தனர். மணவாழ்க்கையில் அரை நூற்றாண்டையும் கடந்து விட்டனர்.**

**ஆயினும் பிணக்குகளில்லாமல் என்றும் மகிழ்ச்சியாகவே வாழ்கின்றனர்.**

இத்தம்பதிகளின் மகிழ்ச்சிக்கான இரகசியம் என்ன என்று வினவியபோது, ஒவ்வொரு தம்பதியும் ஒவ்வொரு கருத்தைக் கூறியுள்ளனர். உண்மையான மகிழ்ச்சிக்குரிய காரணங்கள் மொத்தத்தில் எல்லோருக்கும் பொருத்தமானவை என்பதால் அவற்றைத் தொகுத்துத் தருகிறோம்; நம் இல்லறச் சிறப்புக்கும் இவை உதவும் என்ற நம்பிக்கையில்,

"வாழ்க்கையில் கருத்துவேற்றுமைகளும் பிணக்குகளும் வரத்தான் செய்யும். அவையே வாழ்வின் முழு முதற் பிரச்சனை என்று யாராவது கருதினால் அத்துடன் மகிழ்ச்சி விடை பெற்று விடும். வாழ்கையே பாழாகி விடும்.

"கருத்து வேற்றுமைகள் ஏற்படும் போது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து மனம் திறந்து பேசினால் எல்லாம் சரியாகி விடும்" என்கிறார் சகோதரிகளில் ஒருவரான நேற்றாலி என்ற 83 வயது பெண்மணி. திருமணமாகி 63 வருடங்களை இன்பமாகக் களித்து விட்டவர் இவர்.

"திருமணம் என்ற இணைப்பு மனித வாழ்க்கையில் இன்றியமையாத அற்புதமான பிணைப்பு" என்கிறார் சகோதரர்களில் 59 ஆண்டு திருமண வாழ்வை நிறைவு செய்த ஹில்மன் சகோதரர்களில் முதியவரான மான்னெஸ் என்பவர். இவருக்கு வயது 85.

வேர்ஜுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹில்மன் சகோதர



சகோதரிகளான மான்னெஸ் ஆண் (85), நேற்றாலி, பெண் (83), லேனா, பெண்(78), ஹாரி, ஆண்(75) மற்றும் டெல்மர், ஆண்(72) ஆகியோர் தங்கள் மனைவிமாருடன் இன்றும் நல்ல தேகாரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

நேற்றாலி தனது 85 வயது கணவர் மக்கொன்னெல்லுடன் 63 வருடங்களைக் கழித்து விட்டார். இவர்கள் தங்கள் வாழ்க்கை என்றும் சிறப்பாக இருக்க வேண்டும் என்ற முழு நோக்கோடு வாழ்பவர்கள்.

கணவன் மனைவி இருவரும் பிரியாமல்- கூடுமானவரை ஒருவரை ஒருவர் பற்றியே வாழ வேண்டும் என்பது இவர்கள் கடைப்பிடிக்கும் ஒரு கொள்கை. இருப்பினும் தங்கள் வாழ்நாளில் 70 சத விகிதமான வேளைதான் இருவரும் ஒன்றாக இணைந்து வாழ முடிந்திருக்கிறது.

ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதில் தனி இன்பம் இருப்பதாகக் கூறுகின்றனர். கடுமையான காலகட்டங்களில் ஒருவர் துன்பத்தை மற்றவரும் பகிர்ந்து கொள்வதில் அதிகம் தங்கியிருக்கிறது என்கின்றனர்.

### அனுபவங்கள் பேசுகின்றன

ஹாரி என்பவருக்கு 75 வயதாகிறது. இவர் மனைவி நெல்லுக்கும் அதே வயது தான். 56 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்து வரும் இருவரும் தங்கள் ஆனந்த வாழ்க்கைக்கு அத்திவாரமாக இருந்தது "துன்பத்தைக் கண்டு தார ஓடிவிடாமல் இருந்தமையே" என்கின்றனர்.

"சோதனை காலங்களில் தம்பதிகளிடம் ஏற்படும் இறுக்கமான பிணைப்பே மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கைக்கு அத்திவாரமாகும். உங்கள் வாழ்க்கைத் துணைக்கு நோய் கண்டால் வீட்டில் அவர் பார்க்கும் கடமைகளை மற்றவர் ஏற்றுக் கொள்ள வேண்டும். இது தான் தருணமென்று நண்பர்களுடன் பொழுதுபோக்கவோ எதிர்பாலருடன் புதுச் சினேகம் பிடிக்கவோ ஓடிவிடலாகாது. உங்கள் துணைவர் அல்லது துணைவி மீது அதிக அக்கறை காட்ட வேண்டும்"இதுதான் ஹாரி தம்பதியினர் தரும் அறிவுரை.

மான்னெஸ் 80 வயதான லெஸ்டரை மணம்முடித்து 59 ஆண்டுகளாகின்றன. வாழ்கையில் வரும் மேடு பள்ளங்களை சிரித்த முகத்துடன் எதிர்கொள்ள வேண்டும் என்கின்றனர்."கணவனோ மனைவியோ கடுகடுப்புடன் எதையும் அணுகலாகாது. எதையும் தமாஷாக ஏற்கப் பழகிக்கொண்டால் எந்தச் சிக்கலும் சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடும்" என்கின்றனர்.

எங்கள் வாழ்க்கையில் என்றுமே நாங்கள் கடுகடுப்பான முகத்துடன் படுக்கைக்குச் சென்றதில்லை. எத்தகைய விவாதங்கள் எழுந்தாலும் மனைவி தான்வென்று விடுவார். தோல்வியினைத் தழுவும் நான் அவளுடைய வெற்றியில் மகிழ்ச்சியைக் காண்பேன்.

எனக்கு வயது 85 அவளுக்கு 80. இன்றும் நாங்கள் சிறுவர்கள் போல் கேலியும் கிண்டலுமாக விளையாடுவோம். நான் தபால் அலுவலகத்தில் பணி புரிந்தமையால் எதனையும் நுணுக்கமாக ஆராய்வதுடன் நினைவாற்றலும் எனக்கு அதிகம்". இவ்வாறு கூறுகிறார் மான்னெஸ்.

லேனாவுக்கு 78 வயதாகிறது. கணவன் ஹரோல்ட் ஜோன்சனுக்கும் அதே வயதுதான். 57 வருட திருமண வாழ்வு சிறப்புறக் காரணம் பயணங்கள் என்கின்றனர்.

பிற இடங்களில் சுற்றித்திரிந்து விட்டு தன்னுடைய சொந்த வீட்டினை அடையும் ஒருவருக்கு அப்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்கின்றனர். தங்கள் வாழ்வு சிறப்புற பயணங்களே உதவின என்கிறார்கள் இருவரும்.

பொருளாதாரமே பெரும்பாலான குடும்பப் பிரச்சனைகளுக்கம் பிரதான காரணம் என்பது டெல்மார் (72) மற்றும் றாச்செல் (68) தம்பதியினரின் கருத்து.

ஒருவர் அதிக செலவாளியாக இருப்பார். அடுத்தவர் சிக்கனமாக இருப்பார். இவ்வாறானால் பிணக்குகளுக்குக் குறைவிராது. "செலவு செய்ய வேண்டுமானால் அதற்கான சரியான காரணத்தை இருவரும் கண்டறிந்து செலவிட வேண்டும். இவ்விடயத்தில் புரிந்துணர்வு மிகவும் அவசியம். தேவைக்கு மட்டுமே செலவு செய்யும் தம்பதியினர் என்றும் மகிழ்ச்சியுடனே வாழ்வார்கள்" இவ்வாறு டெல்மார் கூறுகிறார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ரசிகன் வழங்கும் கொலை விழும் நேரம்



அரை மணி நேரத்திற்குள் எங்கிருந்து தொலைபேசியில் பேசினான் என்ற விபரம் விரல் நுனிக்கு வந்தது.

பொலிஸ் சுறுசுறுப்பாய் வேலை செய்து அரைமணி நேரத்திற்குள் விபரம் அறிந்து சொன்னது டி.ஐ.ஜி. டென்சிலுக்கு மகா ஆச்சரியம்.

நகரில் உள்ள பொதுத் தொலைபேசி இருக்கும் இடங்களை வேகமாய் குறிப்பெடுத்து, நாலு பக்கமும் ஒவ்வொரு கான்ஸ்டபிள் அனுப்பி விசாரித்தபோது நடைபாதை துணி வியாபாரி சொன்ன தகவல் உபயோகமாய் இருந்தது.

பொலிசுக்கு ஒரு நுனி போதும். புத்திசாலித்தனம் மட்டுமே வேண்டும். அந்த நுனியை இறுகப் பிடித்து மெல்ல மெல்ல ஏறிப்போய் தேவையானபோது வேகம் எடுத்து உச்சத்தை எட்டிவிடலாம். கவனம் சிதறாது, வேறு புறம் திருப்ப முயலும் குற்றவாளிகளின் சாதுரியம் புரிந்துகொண்டு நிதானமாய் குறி நோக்கி உயர்ந்து செல்ல வேண்டும்.

துணி வியாபாரியை தன்னிடம் அழைத்து வரச் சொன்னார் டி.ஐ.ஜி.

பரட்டைத்தலையும், மெலிந்த உடலும், துணி வியாபாரம் செய்தபோதும் தோள் மூட்டில் கிழிசல் தெரிந்த சட்டையுடனும் இருந்தான். டி.ஐ.ஜியின் முன்னால் கொண்டு வந்து நிறுத்தப்பட்டதில் விழிகளில் சற்று மிரட்சி தெரிந்தது.

டி.ஐ.ஜி. டென்சில் அவனைப் பார்த்து நட்போடு புன்னகைத்தார். பொலிஸ் மிரட்டல், உருட்டல் விசாரணைகளுக்குப் பயந்தே பலர் ஒத்துழைக்கப் பயப்படுகிறார்கள். எமக்கேன் வம்பு; உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டுவானேன் என்று நினைத்து ஒதுங்கிப் போகிறார்கள். எனவே ஒத்துழைக்க முன்வருபவர்களிடம் பரிவு முக்கியம். உற்சாகப்படுத்தல் முக்கியம்.

"நாள் ஒன்றுக்கு எவ்வளவு சம்பாதிப்பீர்கள்?"

வரட்சியாய் பதில் சொன்னான்,

"நிச்சயமில்லாத தொழில் சேர் இது. சில நேரங்களில் வியாபாரம் நடக்காது. எப்போதாவது நூறு, இருநூறு இலாபம் வரும்."

அவன் சொல்ல, தன் பொக்கற்றில் இருந்து பேர்ஸ் எடுத்துப் பிரித்தார். நூறு ரூபாய் தாள் எடுத்து நீட்டி,

"இந்தா வைத்துக்கொள்."

ஆச்சரியமாய் அவர் முகத்தைப் பார்த்து, இது எதற்கு என்பது போல் முகத்தில் வினாக்குறி காட்டி, தயக்கமான குரலில்,

"என்ன சேர் இது, ஏன் சேர் எனக்கு?"

"பொலிசுக்கு நீ ஒத்துழைக்க வந்தது உன் பொறுப்புணர்வைக் காட்டுகிறது. எனினும் இந்த பொறுப்புணர்வு மட்டும் உன் குடும்பத்திற்கு சோறு போடாது. உனது இன்றைய வருமானம் போனதுக்கு நாமும் ஒரு காரணம். அதனால் இது...இந்தா வைத்துக்கொள்."

உறுதியாய் சொல்லி நீட்ட தயக்கமாய் வாங்கிக்கொண்டான். முகத்தில் தெரிந்த நன்றி உணர்வோடு டி.ஐ.ஜி.யைப் பார்த்தான்.

"காரில் இருந்து இறங்கியவரை நேரில் கண்டால் அடையாளம் காண முடியுமா?"

"முடியும். சேர்."

"எப்படியப்பா இத்தனை உறுதியாய் சொல்கிறாய்?"

"காரில் இருந்து அவர் இறங்கி வர, துணி வாங்கத்தான் வருகிறார் என்று நினைத்தேன் சேர். எங்களுக்கு ஒரு பழக்கம் உண்டு சேர்."

"என்ன பழக்கம்?"

"வருகிறவர்கள் வசதியானவர்களா? வாங்கக் கூடியவர்களா என்று முகத்தைப் பார்த்தே எடை போட்டுவிடுவோம்."

"வசதியானவர்கள் போல் தெரிந்தால் விலையை விருப்பம் போல் உயர்த்திச் சொல்லி பின்னர் பேரத்தில் குறைப்பது போல் கொஞ்சம் இறக்கி கட்டியடித்து விடுவீர்கள்."

அசட்டுத்தனமாய் சிரித்தான்.

"சரி, அன்று காரில் இருந்து இறங்கியவர் எப்படித் தெரிந்தார்."

"நாற்பத்தைஞ்சு அல்லது ஐம்பது வயதுதான் சேர். உயரம்...உங்கள் தோள் அளவுக்கு வருவார்."

சொல்லிக் கொண்டே யோசித்தான்.

திடீரென்று முகத்தில் ஒரு வெளிச்சம் காட்டி,

"சேர், சேர் இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. ஒரு காலை...அநேகமாக வலது காலாக இருக்க வேண்டும்.. நொண்டியபடி நடந்தார் சேர்."

உபயோகப்படக் கூடிய அடையாளம் என்று நினைத்தார் டி.ஐ.ஜி.

"காரின் இலக்கம் கவனித்தீர்களா?"

"வெள்ளைக் கார். ஆனால் இலக்கத்தை நான் பார்க்கவில்லை."

"வியாபாரத்திற்கு வருகிற ஆள்தானே முக்கியம். காரா முக்கியம்? அது சரி அவரது நடவடிக்கைகள் உனக்கு சந்தேகமாக - வித்தியாசமாக தெரிந்தது எப்படி?"

"ஏற்கனவே தொலைபேசியில் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார் சேர். அவரிடம் இருந்து இவர் ரிசீவரைப் பறித்து வைத்தார் சேர். ஏதோ பிரச்சனையாக்கும் என்று கவனிக்க, இருவரும் ஏதோ பேசிக்கொண்டது போல் தெரிந்தது."

டி.ஐ.ஜி. டென்சில் ஆர்வமாய் கேட்டபடி பொக்கற்றில் இருந்து பக்கற் எடுத்து ஒரு சிகிரெட் பற்றவைத்துக் கொண்டார்.

"நீங்கள் நின்ற இடத்தில் இருந்து பொதுத் தொலைபேசி எவளவு தூரத்தில் இருந்தது?"

"ஒரு ஐம்பது மீற்றருக்குள் வரும் சேர். அவரது முதுகுப் புறம்தான் எனக்குத் தெரிந்தது. பின்னர் அவரும், தொலைபேசியில் பேசியவரும் என்னைக் கடந்துதான் காருக்கு போனார்கள்."

"தொலைபேசியில் பேசியவரின் தோற்றம் எப்படி?"

"என்னைப் போலவே மெலிந்த தோற்றம். மீசை கிடையாது. இங்கிலீஸ் படங்களில் வருவது மாதிரி தலையில் ஒரு தொப்பி. முதுகில் ஒரு பை. அநேகமாய் முப்பது வயதுக்குள் இருக்க வேண்டும். அரைக் காற்சட்டை போட்டிருந்தான்."

"காருக்குள் வேறு யாரும் இருந்தது மாதிரி?"

"இருந்திருக்க வேண்டும். இருவரும் அருகில் போக காரின் பின் கதவு திறந்துகொண்டது. அதனால்..."

"ஓ.கே. வேறு ஏதாவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அடையாளங்கள்?"

யோசித்தான். இல்லை என்பதாய் தலையசைத்தான்.

"நல்லது. அந்த இருவரில் யாரைக் கண்டாலும் உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும்."

ஒரு சிறிய தாள் எடுத்து தன் பிரத்தியோக தொலைபேசி இலக்கம் எழுதிக்கொடுத்தார்.

■

"பூவிரி சோலையில் மயிலாடும்
புரிந்தே குயில்கள் இசைபாடும்.
காவிரியருகே நானிருந்தாலும்
கண்ணே என் மனம் உனை நாடும்.
நீயோ நானோ யார் நிலவே–இன்று
நிம்மதி இழந்தது யார் நிலவே!"

-கவியரசு-



"பிரபல வைர வியாபாரி தனுஸ்கோடியின் இளைய மகள்."

"எப்படித் தெரியும்?"

"அவளே சொன்னாள். உபத்திரவம் கொடுத்தால் ரொம்ப மேல் மட்டம் வரை போய்விடுவேன் என்று மறைமுக மிரட்டல் வேறு."

"திமிர். பணத்திமிர். இருக்கட்டும் நான் நேரில் வந்து பார்க்கிறேன்."

"ரைட் சேர்."

ரிசீவரை வைத்துவிட்டு, சப் இன்ஸ்பெக்டரை தனியே அழைத்துப்போய் மெதுவாய் சில உத்தரவுகள் சொல்லிவிட்டு பிரசாத்தை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்து, விடைபெற்று வேகமாய் நடந்து ஜீப்பில் ஏற, எங்கே போகவேண்டும் என்பது போல் சாரதி அவர் முகம் பார்க்க, லீலாவின் வீட்டு முகவரி சொன்னார் டி.ஐ.ஜி.

■

கோடீஸ்வரர், பிரபல வைர வியாபாரி தனுஷ்கோடி. தனது பிரத்தியோக பங்களாவில் இருந்தார். தனுஷ்கோடியின் பலம் பணம். பலவீனம் பெண்.

தனுஷ்கோடியின் கண்கள் இரண்டும் கொவ்வைப் பழங்களாகச் சிவந்திருந்தன. காரணம், உள்ளே போன நிறைவான விலை உயர்ந்த மது. கிளாஸில் இன்னும் கொஞ்சம் மீதியிருந்தது. தனுஷ்கோடி அந்த மீதியை மறந்துபோயிருந்தார். காரணம், அவர் உதடுகளுக்கு வேறு வேலையிருந்தது. தனுஷ்கோடியின் உதடுகள் படுதீவிரமாய் மதுக்கிண்ணத் திற்கு பதிலாக லீலாவின் இதழ்களை சுவை பார்த்துக் கொண்டிருக்க, கரங்கள் லீலாவை முதுகில் அழுத்தி இறுக்கிக் கொண்டிருக்க மூச்சு முட்டுவது போல் இருந்தது லீலாவுக்கு. இறுக்கத்தை தளர்த்தாமல் இதழ்களுக்கு மட்டும் விடுதலை கொடுத்துவிட்டு,

"லீலா நீ எனக்கு தினம் வேண்டும்."

"ஒரு நாள்தான் லீவு. தினமும் எப்படி வருவது?"

"லீலா நீ மீண்டும் இங்கேயே வேலைக்கு வந்துவிடு."

"உங்கள் மகளுக்குத்தான் என்னைப் பிடிக்காதே."

"எனக்குப் பிடிக்கிறது லீலா- எனக்குப் பிடிக்கிறது."

ஆவேசமாய் சொன்னார். குனிந்து மார்புகள் இடையே முகம் அழுத்தினார். நெளிந்தாள்.

"லீலாவைக் கூப்பிட முடியுமா?"

"லீலா வீட்டில் இல்லை ஐயா. வெளியே போய் இருக்கிறாள்."

"எங்கே?"

"சொல்லவில்லை ஐயா."

"பக்கத்தில் சிநேகிதிகள் வீடு இருக்கிறதா?"

"இருக்கிறது. ஆனால் லீலா பக்கத்தில் எங்கும் போகவில்லை. வருவதற்கு கொஞ்சம் நேரமாகும் என்றுவிட்டு... ஏன் ஐயா லீலாவைத் தேடுகிறீர்கள்?"

பதட்டமான குரலில் கேட்டார்.

"பயப்பட எதுவும் இல்லை. ஒரு கொலை நடந்துவிட்டது. கொலையானது யார் என்று லீலாவுக்கு ஒரு வேளை தெரிந்திருக்கலாம். ஏன் என்றால் கொலை நடந்தது லீலா வேலை செய்யும் வீட்டில்."

அதிர்ந்து போனார். மீண்டும் அதிகமான மிரட்சி விழிகளில் வந்து புகுந்தது. மறைவில் இருந்து லீலாவின் அம்மா வெளியில் வந்து,

"கொலையானது யார் ஐயா?"

"அது தெரிந்தால் நான் ஏன் லீலாவைத் தேடி வரப் போகிறேன். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

"இரண்டுபேர். மூத்தவன் ஜெயக்கொடி."

"மகன் எங்கே வேலை பார்க்கிறார்?"

"வேலை தேடுகிறான் ஐயா."

"வருமானம்?"

"பென்சன் வருகிறது. லீலாதான் குடும்பப் பொறுப்பை கவனித்துக் கொள்கிறாள். பொறுப்புள்ள பிள்ளை. ஏன் ஐயா இதெல்லாம் கேட்கிறீர்கள்?"

"போகிற இடத்தில் ஏதாவது கேட்டுத் தொலைக்காவிட்டால் எங்கள் பொலிஸ் மூளைக்கு ஒரு திருப்தி வராது பாருங்கள். அதுதான்."

சொல்லிவிட்டுச் சிரித்தார். பின் எழுந்து,

"ஓ.கே. லீலா வந்தவுடன் இங்கேயே இருக்கச் சொல்லுங்கள்."

"எப்போது வருவீர்கள் ஐயா?"



பிரசாத் வீட்டில் பொலிஸ் தன் கடமைகளை முடித்திருந்தது. பிணம் கொண்டு செல்லப்பட்டது.

கவலையோடு அனைத்தையும் கவனித்துக் கொண்டிருந்த பிரசாத்திடம்,

"வீட்டில் வேலையாட்கள் யாரும் வைத்துக் கொள்ளவில்லையா பிரசாத்?"

"இருக்கிறார்கள். வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை கொடுப்பது வழக்கம்."

"வாரம் தோறும் ஒரு நாள் லீவு கொடுப்பது வழக்கமோ?"

"யெஸ்."

"வேலையாட்கள் இருவரையும் நான் விசாரிக்க வேண்டுமே."

"நாளை காலையில் வந்து விடுவார்கள்."

"டு லேட் மிஸ்டர் பிரசாத். வேலையாட்கள் இருவரும் ஆண்களா? அல்லது?"

"ஒரு பெண். ஒரு ஆண்."

"பெயர்?"

"கோவிந்தன், லீலா."

"கணவன் மனைவியா?"

"இல்லை. கோவிந்தன் வேலையில் சேர்ந்து... வேலையில் சேருவதற்கு முன்னரே லீலா இங்கு வேலை செய்கிறாள்."

"வயது?"

"லீலாவுக்கு 22."

"கோவிந்தனுக்கு?"

"30 வயது."

"இருவரும் எங்கே தங்கியிருக்கிறார்கள் என்று முகவரி தெரியுமா மிஸ்டர் பிரசாத்?"

சொன்னார்.

ஓ.கே .மிஸ்டர் பிரசாத், நிரோசா தூங்கட்டும். டாக்டர் பொற்பதி இங்கேயே இருப்பார். காவலுக்கு நான்கு கொன்ஸ்டபிள்கள், ஒரு சப் இன்ஸ்பெக்டர் போட்டிருக்கிறேன்."

"இனியும் ஆபத்து வருமா டி.ஐ.ஜி?"

"வரலாம். நாம் விழிப்போடு இருப்பது நல்லது. நீங்கள் ஹரிகரனின் அலுவலகம் செல்ல வேண்டுமானால்.."

"பார்க்க வேண்டும் டி.ஐ.ஜி. நான் போக வேண்டும்."

"ரைட். ஜீப்பில் போய்விட்டு வாருங்கள். இடையில் சிறிய வேலை இருக்கிறது. முடித்துவிட்டு அங்கே வருகிறேன். ஹரிகரனின் உடல் தற்போது வைத்தியசாலைக்கு கொண்டு போகப்பட்டு விட்டது. நீங்கள் எங்கு செல்லப் போகிறீர்கள்?"

"முதலில் வைத்தியசாலைக்கு."

"ஓ.கே. ஹரிகரன் கொலை பற்றியும் உங்களிடம் இருந்து தகவல்கள் தேவைப்படும். நான் சொல்லும் வரை பொலிஸ் காவல் என்ற வட்டத்தை விட்டு தனியாக வெளியே போக் வேண்டாம் மிஸ்டர் பிரசாத்."

தொலைபேசி அழைத்தது. பிரசாத் போய் எடுத்து,

"டி.ஐ.ஜி. உங்களுக்குத்தான்."

என்று ரிசீவரை நீட்ட, சென்று வாங்கி, காதில் பொருத்தி,

"ஹலோ."

"சேர் நான் மோகன்."

"என்ன மோகன்?"

"நிருபர்கள் இருவரும் கா[illegible]ர்கள்."

"எங்கே இரு[illegible] பேசுகிறீர்கள் மோ[illegible]."

"இங்[illegible]- உ[illegible] அலுவலக[illegible]ல் இருந்[illegible] சேர். இ[illegible]ரிலும் [illegible]ல்தான் இரு[illegible]."

"ஐ.[illegible]"

"பிரியா யார் [illegible]மா சேர்?"

"யார்?"

லீலா தாராளமான இளமையோடு தெரிந்தாள். மார்புகள் நிமிர்ந்து சிகரங்களாய் மலைக்க வைக்க, தனுஷ்கோடி தன் 55 வயதில் பாதியைத் தொலைத்துவிட்ட உற்சாகம் பெற்று, உற்சாகத்தை செயலில் காட்டத் தொடங்க, லீலா தன் ஆடைகளை இழந்து கொண்டிருந்தாள்.

■

லீலா வீட்டின் முன் ஓய்ந்து நின்ற ஜீப்பில் இருந்து இறங்கி டி.ஐ.ஜி. டென்சில் செல்வதை, கொன்ஸ்டபிள் கதவு தட்ட, திறந்து லீலாவின் தந்தை மிரட்சியோடு பார்த்து விலகி வழிவிட, டி.ஐ.ஜி. டென்சில் உள்ளே போவதை, லீலா வீட்டின் எதிரே தெரிந்த புத்தகக் கடையில் இருந்து கவனித்துக்கொண்டிருந்தான்; சின்னதாய் தாடி வைத்திருந்தான்; உதட்டில் சிகரெட் வைத்திருந்தான்; கறுப்பு ஜெர்க்கின் அணிந்திருந்தான்; ஆங்கிலத் தினசரியால் முகத்தில் பாதியை மறைத்துக்கொண்டு, கூலிங்கிளாஸ் அணிந்த விழிகளால் எல்லாவற்றையும் கவனித்தபடி நின்றான். லீலாவின் வயோதிபத் தந்தை பொலிசைக் கண்ட மிரட்சியில் இருந்து மெல்ல மீண்டுகொள்ள,

"லீலா வீடு இதுதானே?"

"ஆம் ஐயா."

"நீங்கள்,"

"லீலாவின் அப்பா."

வீடு சிறிதாக இருந்தது. என்றாலும் வசதி தெரிந்தது. கலர் தொலைக்காட்சி பெட்டிக்கு மேலே விலை உயர்ந்த ஸ்ரீடியோ ரூ இன் வன் சிவப்பு நிறத்தில் இருந்தது. ஹோலின் குறுக்கே இருந்த பலகையிலான மறைப்பின் பின்னால் இருந்து ஒரு பெண் முகம் எட்டிப் பார்த்தது. [illegible]கத்தில் வயோதிபம் தெரிந்தது.

"அது லீலாவின் அம்மா." என்றார்.

"எப்போதும்."

என்றுவிட்டு மீண்டும் சிரித்து வெளியே வந்து, எதிரே உள்ள கடையைப் பார்க்க அதுவரை அங்கேயே பார்த்துக்கொண்டிருந்த சின்னத்தாடி வேகமாய் திரும்பி,

"ஒரு பக்கெட் சிகிரெட்."

என்று கடைக்காரரிடம் 50 ரூபாய் நோட்டை நீட்டினான்.

ஜீப் புழுதி கிளப்பி புறப்பட்டுச் செல்ல, சின்னத்தாடி நிதானமாய் தெருவைக் கடந்து லீலா வீட்டை நோக்கிப் போய், கதவில் இரு முறை விரலால் தட்டினான்.

■

"ஜீப்பை திருப்பி மீண்டும் லீலா வீட்டுப்பக்கம் போ."

என்றார் டி.ஐ.ஜி. டென்சில். திரும்பி விரைந்தது ஜீப்.

பின்னால் திரும்பி, "லீலா வீட்டுக்கு எதிரேயிருந்த புத்தகக் கடையில் ஜெர்க்கின் அணிந்படி நின்றவனைக் கவனித்தீர்களா?"

என்று கேட்க, கொன்ஸ்டபிள்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு தயங்க,

"பொலிஸ் என்றால் உடம்பெங்கும் கண்கள் இருக்கவேண்டும்." என்றார் சற்றுக் கடுமையான தொனியில் டி.ஐ.ஜி.

பின்னர் ஜீப்பில் இருந்த வயர்லெஸ்ஸில் தொடர்புகொண்டு, "லீலா வீடு கண்காணிக்கப் பட வேண்டும். 24 மணிநேரமும் சாதாரண உடையில் இரண்டுபேர் லீலா வீட்டை தங்கள் பார்வைக்குள் வைத்திருக்க வேண்டும். அடுத்த பதினைந்து நிமிடத்திற்குள் இரண்டு பேரை அனுப்பவேண்டும்."

உத்தரவு பறந்தது. வலை விரிக்கப்பட்டது. ஜீப் லீலா வீட்டை நெருங்கியது.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: வி. ஜீவானந்தராஜா
வயது: 21
முகவரி: பொகவந்தலாவ தோட்டம், பொகவந்தலாவ.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், கவிதை, கட்டுரைகள் எழுதுதல்.



பெயர்: எஸ். ராஜேந்திரா
முகவரி: 295A, ஹெந்தளை ரோட், வத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை பார்த்தல், புகைப்படம் எடுத்தல், ரி.வீ. பார்த்தல், சினிமா பார்த்தல்.



பெயர்: ஏ.எம். நியாஸ்
வயது: 21
முகவரி: 62, துனுவில ரோட், அக்குறணை.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், பத்திரிகை பார்த்தல், சினிமா பார்த்தல், நண்பர்களுடன் அரட்டையடித்தல்.



பெயர்: எம்.ஐ. காஸறா
முகவரி: இல. 58, ஆப் லேன், காத்தான்குடி-06.
பொழுதுபோக்கு: டி.வி. பார்த்தல், பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்.

பெயர்: ஏ திருவானந்த செல்வன்
வயது: 28
முகவரி: 3380, EGLINTON AVENUE, APPARTMENT 4 OR 8, SCARBOROUGH ONTARIO CANADA.
பொழுதுபோக்கு: ரி.வி. பார்த்தல், பத்திரிகை வாசித்தல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். ஏ. ரசூல்
முகவரி: மூன்றாவது டிவிசன், மாஞ்சோலை, கிண்ணியா.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, கிரிக்கெட் விளையாடுதல், வானொலி கேட்டல்.

பெயர்: எவ். ஜுட் மேரி
முகவரி: 220/3, சி புளொக், வேல்ஸ் குமார வீதி, கொழும்பு-11.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், ரி.வி., சினிமா பார்த்தல்.

பெயர்: செல்வி. ஹரிமுன்நிஸா ஹமீட்
வயது: 16
முகவரி: பள்ளி வீதி, மெடிவெல கெதர, ஹெரம்பாவ.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்




வைதீஸ்வரிக்கு டாக்டர் சொன்னதைக் கேட்டதும் இன்னும் கலங்கிப் போனாள்...

'எப்படி... எப்படி தாங்கிக்கொள்ளப் போகிறேன் நான் ஒருத்தி படும் வேதனைகள் போதாதா?' அவளது கண்கள் கலங்கின.

"ஏனம்மா கலங்குறீங்கள்? நான் நல்ல விஷயம் தானே சொன்னன்..." டாக்டர் கேட்டபோது வைதீஸ்வரிக்கு சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. நான் தாயாகப் போகிறேன் என் வயிற்றில் ஒரு குழந்தை வளர்கிறது.... எல்லாப் பெண்களும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம்தான். தாய்மை தான் ஒரு பெண்ணிற்கு மற்றவர்களிடத்து பெருமை சேர்க்கும் என்று அவளுக்குத் தெரிந்தது தான்.

ஆனால் அவளைப் பொறுத்தவரையில்..!

வைதீஸ்வரிக்கு அவளது கணவன் சுந்தரேசனை நினைக்கும் போதே உடம்பு பயத்தால் நடுங்கியது.

எத்தனை ஏச்சுக்கள் பேச்சுக்கள், அடி உதைகள் அவனிடமிருந்து அவள் தினமும் பெற்றுக் கொண்டிருக்கிறாள்....

இத்தனைக்கும் அவள் சுந்தரேசனை விரும்பித்தான் கல்யாணம் செய்து கொண்டாள். அவளது அப்பா எத்தனையோ மாப்பிள்ளைகள் பார்க்க, அவர்கள் அனைவரையும் வேண்டாம் என்று மறுத்துவிட்டு, அவளது அத்தான் சுந்தரேசனைத் தான் திருமணம் செய்வேன் என்று ஒரே பிடிவாதமாய் அப்பாவிடம் வாதாடி அவனது கரங்களால் மாங்கல்யம் சூடிக்கொண்டவள்.

ஆரம்பத்தில் சுந்தரேசனும் வைதீஸ்வரி மீது அன்பாகத் தான் நடந்து கொண்டான். ஆனால் என்று அவன் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகத் தொடங்கினானோ அன்று முதல் அவனது போக்கில் மாறுதல் ஏற்படத் தொடங்கிற்று.

வேலை முடிந்த கையோடு எப்போதும் வீடு வரும் அவன் நெடுநேரம் கழித்தே வீட்டுக்கு வரத் தொடங்கினான். வைதீஸ்வரி அவனுக்காக சாப்பிடாமல் காத்துக்கொண்டிருப்பாள். ஆனால் அவனோ சிறிதும் அவளை மதிப்பதில்லை. அவள் சமைத்து வைத்த உணவில் வேண்டுமென்றே குறை சொல்லி சாப்பாட்டுக் கோப்பையை அவள் மீது வீசி எறிவான். ஆனால் மறுநாள் காலையில் சுந்தரேசன் மனம் திருந்தியவன் போல், இரவு நடந்து கொண்டதற்காக வைதீஸ்வரியிடம் மன்னிப்புக் கேட்பான். இனிமேல் குடித்துவிட்டு வர மாட்டன் என்று அவள் மீது சத்தியம் செய்துவிட்டுப் போவான்.

ஆனால் இரவு மீண்டும் வரும்போது குடிபோதையிலே வருவான். தினமும் இதே தான்.

வைதீஸ்வரி தேற்ற ஒருவருமின்றி தனக்குள்ளேயே புழுவாய்த் துடித்தாள். யாரிடம் சென்று முறையிடுவாள்...? இது அவளாகத் தேடிக்கொண்ட வாழ்க்கையாயிற்றே. இப்போது அவளுடன் சேர்ந்து இன்னுமொரு உயிரும் வேதனைப்படப் போகிறது என்று நினைக்கும் போது வைதீஸ்வரிக்கு மிகவும் கவலையாயிருந்தது.

டாக்டர் எழுதிக்கொடுத்த மருந்துச் சீட்டுடன் அவருக்கு நன்றி கூறிக்கொண்டு வெளியே வந்தாள்.

'தான் அப்பாவாகப் போகிறேன் என்று அறிந்தால் சுந்தரேசன் மனம் மாறுமா.. அதன்பின்பாவது அவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபடுவானா?..' வைதீஸ்வரியின் மனம் கடவுளை வேண்டிக்கொண்டது.

ஆனால் சுந்தரேசனுக்கோ வைதீஸ்வரி கூறியது எதுவுமே காதில் ஏறவில்லை. வழமைபோல்தான் அன்றும் நடந்து கொண்டான். மறுநாள் காலையில் போதை தெளிந்த நிலையில் சுந்தரேசன் தான் அப்பாவாகப் போகிறோம் என்பதை அறிந்ததும் மகிழ்ச்சியால் துள்ளிக்குதித்தான். இனிமேல் குடிக்கப் போவதில்லை என்று வைதீஸ்வரியின் வயிற்றிலடித்துச் சத்தியம் செய்தான். இம்முறை வைதீஸ்வரி அவனை நம்பினாள். தனக்கு விடிவுகாலம் தனது வயிற்றில் வளரும் அவளது குழந்தை மூலமாக பிறந்துவிட்டதென நினைத்தாள். அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

அன்று மாலை சுந்தரேசனின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தாள். ஆனால் வந்த போது....!

வைதீஸ்வரிக்கு புரிந்துவிட்டது. இனிமேலும் அவனது பேச்சை நம்புவதில் அர்த்தமில்லையென்று நினைத்தாள்.

வைதீஸ்வரி மனதைக் கல்லாக்கிக் கொண்டு பிறக்கப்போகும் அவள் குழந்தைக்காக அவனது கொடுமைகளைத் தாங்கிக் கொண்டாள்.

அவளது உலகமே இனிவரப் போகும் குழந்தைதான் என காத்திருந்தாள். இப்படியே நாட்கள் நகர்த்து கொண்டிருந்தன...

சுந்தரேசன் எப்போதும் போல் அன்றும் குடிபோதையில் வந்தவன் வைதீஸ்வரியின் துடிப்பைக் கண்டதும் பயந்து போனான். அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவளை அணைத்துக் கொண்டான். வைதீஸ்வரியின் கூச்சல் இன்னும் அதிகமாகியது. சுந்தரேசனால் அவள்படும் வேதனையைப் பார்க்க முடியவில்லை. அப்போது அவனுக்குப் பக்கத்துத் தெருவிலிருக்கும் மருத்துவிச்சி அம்மாவின் ஞாபகம் வரவே ஓட்டமும் நடையுமாகச் சென்று அவளை அழைத்து வந்தான். ஆரம்பத்தில் அவனைக் கண்டித்துவிட்டு பின் வைதீஸ்வரிக்கு வேண்டிய முதலுதவிகள் செய்து அவளை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனாள்.

**சிறுகதை**

போகும் போது வைதீஸ்வரி வலியால் படும் வேதனையைப் பார்த்த சுந்தரேசனின் கண்கள் கலங்கிப் போயின. அவன் அவளுக்காக இறைவனை வேண்டிக் கொண்டான்.

மறுநாள் சுந்தரேசன் ஒரு பெண் குழந்தைக்கு தந்தையானான். அவனது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இப்போதெல்லாம் சுந்தரேசன் குடிப்பதில்லை. நேரத்திற்கு வீடு வந்துவிடுவான். வைதீஸ்வரிக்கு அவனது போக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. "மது பிறந்தது தான் உங்கள் மனம் மாறியதற்குக் காரணம்" என்று அவள் சுந்தரேசனைக் கேட்டபோது..

"இல்லை வைதீஸ்வரி. மது பிறந்தது மட்டுமில்லை. அன்றைக்கு -மது பிறக்கும் அன்று- நீ துடித்த துடிப்பு இருக்கிறதே அப்பப்பா...

"அதை என் வாழ்நாள் முழுவதும் மறக்கவே முடியாது.

"ஒரு பெண் தன் குடும்ப வாரிசை சுமப்பது மட்டுமில்லாமல், எப்படியெல்லாம் வேதனைகளை தாங்கிக் கொள்ளவேண்டுமென்று அன்று தான் நான் அறிந்து கொண்டேன்.

"நான் மட்டுமில்ல. எந்த ஆம்பிளையும் அதை ஒரு கணம் நினைத்துப் பார்த்தால் மனைவியை ஒரு வார்த்தை கடிந்து பேசக்கூட மனம் வராது வைதீஸ்வரி......." என்று அவன் கூறியபோது வைதீஸ்வரிக்கு அவள் கணவனை நினைக்கப் பெருமையாயிருந்தது. அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. சுந்தரேசன் தன் மனைவியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்க வந்தபோது வைதீஸ்வரி மதுவுடன் சேர்த்து அவனையும் அணைத்துக்கொண்டாள். ஆம் இப்போது அவளுக்கு அவனும் ஒரு குழந்தையைப் போலத்தான்.

(யாவும் கற்பனை)

---

**குட்டிக்கதை**

## வள்ளி

-ரமேஷ் கண்ணன்-

**எனக்கிருக்க சொந்தம், பந்தம் எல்லாமே இந்த வள்ளி மட்டும்தான்.....**

"வாங்க தம்பி.. வாங்க.." அவன் வரவை எதிர்பார்த்து நின்றது போல் அன்பரசு வரவேற்றார்.

"என்ன தம்பி நீங்க மட்டும் தனியா வந்திருக்கீங்க... ஒங்க அம்மா வரல்லையா..?"

"அம்மாவுக்கு கொஞ்சம் ஒடம்புக்கு முடியல்ல. அதனால் நான் தனியாவே வந்திட்டன். இந்த விஷயங்களுக்கு தனியா வாறது தப்பா இருந்தா, நான் வேறொரு நாளைக்கு எங்க அம்மாவோடையே வாறன்."

அவன் அங்கலாய்ப்புக்கு பண்பாக பதில் கொடுத்தான் வசந்த்.

"என்ன தம்பி அப்படிச் சொல்லிட்டீங்க... நீங்க வேற, அம்மா வேறயா..? இந்த ஊருலயே படிச்ச, பண்பான பிள்ள நீங்கதான். அதுலையும் சின்ன வயசில இருந்தே ஒங்கள எனக்கு நல்லாவே தெரியும்.

"பாத்தீங்களா தம்பி..... பேசிக்கிட்டு நிண்டதுல ஒங்கள இருக்கச் சொல்லக்கூட மறந்திட்டன். வந்து இப்படி இருங்க தம்பி. ஏதாவது குடிச்சிட்டு ஆறுதலா பேசுவம்..."

தன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த சால்வைத் துண்டால் திண்ணையை தட்டிவிட்டார் அன்பரசு. சுமார் அறுபது வயதிருக்கும் அவருக்கு.

"இல்லீங்க... ஒண்ணும் இல்லாட்டிலும் பரவாயில்லை... விஷயத்துக்கு... வந்தா.."

வசந்தின் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு அன்பரசு,

"தம்பி எனக்கிருக்க சொந்தம், பந்தம் எல்லாமே இந்த வள்ளி மட்டும்தான். எனக்கும் வள்ளிய விட்டுப்பிரிய கொஞ்சம்கூட இஷ்டமில்ல.. ஆனாலும் எனக்குப் பிறகு வள்ளிய பாத்துக்க ஒரு நல்ல மனுசன் வேணும். அதனால தான் தரகர்கிட்ட நம்ம வள்ளியப்பத்தி சொல்லியிருந்தன்.

"அவர் ஒங்களையும், ஒங்க விருப்பத்தையும் சொன்னதும் எனக்கு ரொம்ப சந்தோசமா இருந்திச்சு. நீங்க வள்ளிய என்னவிட நல்லா வைச்சிருப்பீங்க, வள்ளி கொடுத்து வைச்சவ.. ஆமா தம்பி கொடுத்து வைச்சவ.."

அன்பரசுவின் கன்னங்களை கண்ணீர்த்துளிகள் அலங்கரித்தன. இனம் புரியாத சோகம் அவரை கணப்பொழுதில் நிலைதடுமாறச் செய்தது. தன் சால்வைத் துண்டால் கன்னங்களைத் துடைத்தவர், நீண்ட பெருமூச்சுடன்,

"தம்பி.. வள்ளிய ஒருதரம் நீங்களும் பாத்திடுங்களேன்..."

அன்பரசு கேட்டதும் வசந்த் சற்றுத் தடுமாறிப் போனான். மறுபுறம் கூச்சமாக இருந்தது அவனுக்கு. சிறிய மௌனத்தின் பின்னர்...!



"ஐயா.., வள்ளிய அம்மாவுக்கு ரொம்பவும் புடிச்சிப் போச்சு.. அம்மாவுக்குப் பிடிச்சா எனக்குப் பிடிச்ச மாதிரிதான். அதனால தான், என்னப்போய் எல்லா விஷயங்களையும் பேசிமுடிச்சிட்டு வரச் சொன்னாங்க.. அதனால மத்த.. விஷயங்களையும் சொன்னா.."

அவன் எங்கு வருகிறான், எதை எதிர்பார்க்கின்றான் என்பதை கணப்பொழுதில் புரிந்துகொண்ட அன்பரசு, ஒரு செயற்கைப் புன்னகையோடு,

"தம்பி.. எனக்கும் வயசு அறுபதாச்சு. இண்ணைக்கோ நாளைக்கோ மண்டையப் போட்டுடுவன். ஆனாலும் செய்யற எல்லாத்தையும் முன்கூட்டியே செஞ்சிடணும்னு சொல்லுவாங்க.. தம்பி ஒரு .. ஒரு 5000/= தான்.. அதுக்குமேல என்னால.."

தயக்கத்துடன் கூறிய அன்பரசு கரங்களை, இறுக்கமாக பற்றிக்கொண்ட வசந்த் நிறைந்த மனதுடன்,

"ஒங்க இஷ்டப்படியே செய்யுங்க. வாற வெள்ளிக்கிழம நல்ல நாள். அண்ணைக்கே எல்லா விஷயங்களையும் முடிச்சிடலாம். அப்ப நான் வாறனய்யா."

அன்பரசுவின் பதிலுக்குக்கூட காத்திருக்காமல் துள்ளித் குதித்த வண்ணம் ஓட்டம் பிடித்தான் வசந்த்.

அவன் செல்லும் திசையையே பார்த்துக் கொண்டிருந்த அன்பரசு மெல்ல தன் பார்வையை வள்ளிமேல் செலுத்தினார் ஆவலுடன் வள்ளியை இறுக அணைத்துக் கொண்டவர், உச்சியில் முத்தமிட்டு செல்லமாக முதுகைத் தடவிக்கொடுத்தார்.

"வள்ளி.. நீ..நீ.. எங்க இருந்தாலும் நல்லா இருப்ப... இந்த கிழட்டுக்கையால ஒனக்குத்தார கடசி.. கடசிச்சாப்பாடு இது.. சாப்பிடு.."

கையில் வைத்திருந்த புண்ணாக்கையும், கழனித் தண்ணீரையும் வள்ளிக்கு முன்னால் வைத்தார் அன்பரசு.!!

('வள்ளி' பட இரசிகர்கள் மன்னிக்க வேண்டும்)

(யாவும் கற்பனையே)

---

## என்னென்னமோ ஆகிறேன்......!

-முகில் வண்ணன்-



**அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு எல்லாம் பழக்கமாகி விட்டது. சுபா வந்து ரெலிஃபோன் எடுத்தால் அழுவாள் என்று. அது மட்டுமின்றி அவள் கணவனுடன் கதைக்க வேண்டும் என்பதற்காக ஹோலில் ஒருவரும் இருக்காமல் எழுந்து சென்று விடுவார்கள்......**

**சிறுகதை**

"சுபா அக்கா உங்களுக்கு ரெலிஃபோன்" என்று பக்கத்து வீட்டுப் பிள்ளை ஓடிவந்து சுபாஷினியிடம் கூறிவிட்டு ஓடியது.

சுபா தன் ஆடையைச் சரி பர்த்துக்கொண்டு செருப்பை மாட்டிக் கொண்டு ஓடினாள்.

சுபா கணவனைப் பிரிந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்டன. தொண்ணூறாம் ஆண்டுக் கலவரம் ஏற்பட்ட பின்னர் ஊரில் நடந்த உயிரிழப்புகளுக்குப் பயந்து கொழும்புக்கு ஓடி வந்தவன் ரவீந்திரன். அப்போது அவன் மணம் முடித்து மூன்று மாதம் இருக்கும். மனைவி பிள்ளை உண்டாகி இருந்தாள். எதையும் யோசிக்க அவகாசம் இல்லை. உயிர் தப்பினால் போதும் என்று ஓடி வந்தவன் வந்தவன்தான்.

ஊரில் நிலமை சுமூகமாகவில்லை என்று தொடர்ந்த கடிதங்களும், கொழும்பில் மற்றவர்கள் வெளிநாடு செல்வதற்கு நடைபெறும் கெடுபிடிகளை அவதானித்ததில் தானும் போனால் என்ன? என்ற எண்ணம் உயிர்ப்பு விட்டது. வீட்டில் இருந்தும் சம்மதம் கிடைக்க இருப்பதை விற்றுச் சுட்டு வெளிநாடு சென்றுவிட்டான் ரவி.

இப்போது கனடாவுக்குச் சென்று மூன்று வருடங்களாகிவிட்டன. சுபாவை 'இந்தா எடுக்கிறேன்' 'இதோ எடுக்கிறேன்' என்று சொல்லியே இரண்டு வருடங்களாகி விட்டன. ஆனால் அவள் செல்வதாகக் காணோம். குழந்தை பிறந்து இரண்டு வருடத்திற்கு மேலாகியும் அவள் தகப்பனைக் காணவில்லை. அப்பனும் பிள்ளையை படத்திலே பார்த்ததுதான்.

இப்போது கணவனுடன் ரெலிஃபோன்' பேசவென கொழும்புக்கு வந்தவள் கொழும்பில் சொந்தக்காரர் வீட்டில் தங்கி இருக்கிறாள். உடனே செல்ல வேண்டும் என்பதற்காக குழந்தை சோபாவையும் விட்டுவிட்டுத்தான் வந்திருந்தாள். ஆனால் ஆறு மாதமாகப் போகிறது, இன்னும் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை.

போக்குவரத்து என்ன அவ்வளவு இலேசான காரியமா? எத்தனையோ பாதைகள் மாறி மாறி- 'இலங்கையில் இனப் பிரச்சனை இல்லை' என்பதுபோல் இல்லாத பாதை- தடை செய்யப் பட்ட பாதை வழியாக வந்து சேர்ந்துவிட்டாள். போகும் போது அந்தப் பாதை இருக்குமோ, இல்லை இல்லாமலே போய்விடுமா? என்பதற்கு எவரும் உத்தரவாதம் தர முடியாத நிலை. சென்று சேர்வதும், உயிரைப் பாதுகாப்பதும் அவரவர் சாதகத்தில் இருக்கும் கிரக நிலையைப் பொறுத்தது.

ஆண்டவன் காப்பாற்றுவாராக!

வந்த புதிதில் கிழமைக்கு ஒருதரம் ரவி ஃபோன் எடுப்பான். படிப்படியாக இப்போது இரு கிழமைக்கு ஒருதரம் என்று இருந்தது. அதுவும் இப்போது இல்லாமல் இருந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் இப்போது வந்திருக்கிறது. அந்தச் சந்தோசத்தில் சுபா பேச ஓடியிருப்பாள் என்று நீங்கள் எண்ணி இருந்தால் தவறு. அவள் சென்றதெல்லாம் அழுது புலம்பத்தான்.

அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு எல்லாம் பழக்கமாகிவிட்டது. சுபா வந்து ரெலிஃபோன் எடுத்தால் அழுவாள் என்று. அது மட்டுமின்றி அவள் கணவனுடன் கதைக்க வேண்டும் என்பதற்காக ஹோலில் ஒருவரும் இருக்காமல் எழுந்து சென்று விடுவார்கள்.

இன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டில் பெரியவர்கள் யாரையும் காணோம்.வந்து கூறிய பிள்ளையும் வீதியில் விளையாடும் பிள்ளைகளைப் புதினம் பார்த்துக் கொண்டிருந்தது.

ஓடி வந்தவள் ரெலிஃபோன் எடுத்த வேகத்திலே, கண்ணீரும் ஓடிவந்து இமைகளை முட்டி மோதிக்கொண்டு மடைதிறந்து கொண்டது. அழுதழுது பேசத் தொடங்கினாள்.

"என்ன குஞ்சு இத்தனை நாளாகக் கோல் எடுக்கல்ல. நான் என்னவோ ஏதோ என்று பயந்து விட்டேன்...."

"......."

"ஓ...நான் கேள்விப்பட்டது சரிதான். நீங்க அதிகமாகக் குடிக்கிறதாகவும் அடிக்கடி ஆஸ்பத்திரியில் போய்ப் படுப்பதாகவும் அறிந்தேன். ஏன் உங்களுக்கு இந்த வேலை? இஞ்ச ஒருபெண்டாட்டியும் பிள்ளையும் இருக்கிறதை மறந்திட்டீங்களா? இதுக்குத்தான் என்னை கெதியாக எடுக்கச் சொல்கிறேன்..."

"......."

"ஓம் எனக்குத் தெரியும். நீங்க இல்லாமல் நான் படுற பாடு. அது போல நீங்களும் கஷ்டப்படுவீங்க என்று எனக்குத் தெரியும். கல்யாணம் முடித்து மூன்று மாதம் கூட ஒன்றாக நாம் இருக்கவில்லையே.அந்தத் தவிப்பு இருக்காதா பின்ன? என்னக் கெதியாக எடுங்கடா. நான் ஓடி வந்திடுறன் உங்கட கவலையும் தீரும்....."

"........"

"ஸ்பொன்சர்' ,ஸ்பொன்சர் விசா என்றுதான் இத்தனை நாளாகச் சொல்றீங்க. நானும் வற்றிய குளத்தில வாடின கொக்காக இருக்கிறன். இன்னும் ஒண்டையும் காணல்ல..."

"உங்களுக்குப் பேப்பர் கிடைக்கப் பிந்தினதுக்கு நானா பழி! நான் உங்களைப் பிரிஞ்சுஇருக்கிறதால படுற கஷ்டம் உங்களுக்குத் தெரியுமா? நீங்க குடிச்சித்து கும்மாளம் அடிச்சித்து இருங்க. மனைவி மகளைப் பார்க்கவேணும், எடுக்க வேணும் எண்ட எண்ணம் இருந்தா காசு பணத்தைச் சேர்த்து வங்கியில போடுங்க. வீட்டை வாடகைக்கு எடுங்க. சாமான்களைத் தேடி வையுங்க. அப்பதானே விசா தருவாங்க...!"

"......"

"நீங்க பொய் சொல்ல வேணாம். எனக்கு கொழும்பில இருந்தாலும் எல்லா விஷயமும் இஞ்ச அறியலாம். வீடு எடுத்தனீங்க என்றால் ரெலிஃபோன் வீட்டுக்கு இருக்கும். நீங்க ரெலிஃபோன் நம்பரும் இல்லாமல் இருக்கிறீங்க. நீங்க ரெலிஃபோன் எடுத்தால் கண்டுக்க வேண்டியது தான். உங்களுக்கு நம்பர் இருந்தா நீங்க எடுக்காட்டியும் நான் என்றாலும் எடுப்பேன்!....."

"........."

"உங்களுக்கென்ன? நீங்க சொல்வீங்க. நீங்க இல்லாமல் நான் படுற கஷ்டம் எனக்குத்தானே தெரியும். உங்களுக்கு குடியும் கும்மாளமும்! மற்றவர்கள் சொல்வது உங்களுக்குத் தெரியுமா? சீவி முடிச்சு சிங்காரிச்சா ("அவளுக்கென்ன புருஷன் காசு உழைத்து அனுப்புறான். அவன் அங்க கஷ்டப்பட இவள் இஞ்ச சொகுசா இருக்கிறாள். யாரையும் பிடிச்சுத்தாளோ") என்று சொல்லுவாங்க உங்களைப் பற்றிய கவலையில முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு இருந்தால் வேறு விதமாகப் பேசுறாங்க. (அவன் இவளைத் தள்ளிவிட்டு வேறு யாரையும் அங்க பார்த்து விட்டானாக்கும். பாவம் இனி அதோ கதிதான்) இப்படி எதற்கும் தப்ப முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாக இருக்கிறன் நான்....."

"............."

"என்னடா குஞ்சு சொல்றீங்க.....கல்யாணம் செய்யாமல் இருந்தால் எனது உணர்வுகள் தூண்டப்படாமலே இருந்து இருக்கும். இப்போது தூண்டிய உணர்ச்சிகள் அனுபவிக்க முடியவும் இல்லை. என்னைத் தூங்கவும் விடுவதில்லை. எண்ட குழந்தையும் இல்லாட்டி நான் எப்பவோ பைத்தியமாகி இருப்பன். நீங்களும் குழந்தைகளை ஏமாற்றுவது போல் என்னை ஏமாற்றிக்கொண்டு வருகிறீர்கள். நானும் இன்று நாளை என்று நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்க ஓரிடம் நான் ஓரிடம்; பிள்ளை ஓரிடமாக நமது நிலையை எண்ண தாங்க முடியவில்லை...."

".........."

"அடுத்த கிழமை கோல் எடுங்க. நான் உங்களுடன் கதைத்து விட்டு வீட்டுக்குப் போகப் போறன். போய் பிள்ளையைப் பார்க்க வேண்டும். அவள் ஏங்கிப் போவாள். நீங்க எடுக்கிற நேரம் நான் பைத்தியமாகாமல் இருந்தால் வந்து சேர்வன். இல்லாட்டி பிள்ளையை எண்டாலும் எடுத்திடுங்க..."

"........."

"நீங்க என்ன சொல்லியும் என்ன? எனக்கும் ஆசைதான். ஓடோடி வந்து நம்முடைய குழந்தையை உங்களுடைய கண்களில் ஒற்றினால் போதும். நான் இதுவரை வாழ்ந்ததற்கு அர்த்தம் இருக்கும். என்ன செய்வீங்களோ ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. இன்னும் ஒண்ணு இரண்டு மாதத்தில என்னை எடுக்க வேணும்."

"........."

"உங்களோட பேசும் பொழுது என்னென்னமோ ஆகிறேன் நான். ஆனால் அதற்கு வடிகால் இல்லையே. நீங்கள் இல்லாமல் நான் என்ன செய்ய முடியும்? என்னென்னமோ ஆகிறேன் என்றது தெரியுது என்றால் உடனே எடுத்து எனது விரக தாபத்தைத் தீருங்களன்."

"........"

"நேரம் முடிந்து விட்டது என்று மட்டும் சொல்லுங்க. ஏன் இன்னம் கொஞ்சம் நேரம் சேர்த்து 'புக்' பண்ணியிருந்தால் என்னவாம்? எனது வாழ்க்கையே இந்த ரெலிஃபோன் பேச்சிலேதானே! அறியாமலா இப்படி அவசரப்படுத்துறீங்க.... ஹலோ...ஹலோ...ஒரு சத்தத்தையும் காணல்ல.....' என்றுகூறி முடித்தாள்.

பேசிக்கொண்டிருக்க கண்கள் நீரைப் பொழிந்த வண்ணம் இருந்தன. அழுதழுது அவள் பேசியது அவனது நெஞ்சைத் தொட்டு இருக்கத்தானே வேண்டும்! இல்லாவிட்டால் அவனென்ன மனிதனா? இனியாவது விரைவில் அவளை எடுக்க நடவடிக்கை எடுப்பான் என்று நம்புவோம்.

கண்களைத் துடைத்துவிட்டு வெளியேறினாள் சுபா. (யாவும் கற்பனையே)

# சிதறிய பூக்கள்.....

ஹரீரா அனஸ்



பெருநாள் சிறப்புச் சிறுகதை

நாம் சிதறுண்ட உலகின்கண்தான் வாழ்கிறோம். எங்கு பார்த்தாலும் நீர் முட்டிய கண்கள். தேற்றுவது என்றால் யாரையார் என்ற கேள்வி பூதமாய் வந்து நிற்கும். இழந்து போனவைகள் ஏராளம். சாந்தி, சகோதரத்துவம், புரிந்துணர்வு, அன்புடமை இவற்றுக்காய் மீள்பிரார்த்தனை செய்வோமாக.

எனது அன்புடையவர்களுக்கு

—ஈத் முபாரக்—

"அருந்ததி...!அருந்ததி..!"

"ம்"

"என்னம்மா யோசனை? இவ்வளவு பலமாய்.. ஏதாவது மனக்கலக்கமா?"

"இல்லை ஸ்ரீ. காலம் என்னவாய்த்தான் கரைந்து கொண்டு போகிறது."

"அதென்ன காலத்தின் மீது;

நான்காவது பரிமாணத்தின் மீது அவ்வளவு கரிசனை?"

"இல்லை அத்தான். கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ... இப்ப ஒரு ஐஞ்சு வருஷத்திற்கு முந்தி."

"எதைச் சொல்கிறாய் அருந்ததி?"

"எனத்தான் ஐஞ்சு வருஷத்திற்கு முந்திய நோன்புப் பெருநாளை.." அருந்ததி கண் கலங்கினாள்.

அருந்ததி அந்த நாட்களின் பசுமையை எண்ணி ஆதங்கப்பட்டாள். அவளுக்கு "ஓ"வென்று அழவேண்டும் போல் இருந்தது.

தனது அன்பான கணவனின் மடியில் ஆறுதலுக்காய் முகம் புதைத்தாள்.

"அத்தான்! எங்கடை யாழ்ப்பாணம் எவ்வளவு செழிப்பானது. இந்தப் பூமியிலை வாழ்ந்தவங்க யார் தான் நல்லா வாழெல்லை? ஆனா..ஆனா.. அந்தச் சனத்துக்குத்தான் குடுத்து வைக்கேல்லை.. என்ன செய்யுறது?"

மனம் வெம்பிப் போக தனது பள்ளித் தோழி 'சியானி'யின் குடும்பத்தை எண்ணிய போது அருந்ததியால் வாளாவிருக்க முடியவில்லை.

சியானியும் நளீரும் எவ்வளவு அருமையா வாழ்ந்து வந்த குடும்பம். "எனக்காகத் தான் – சியானியிடை பிரிவை தாங்கிக் கொள்ளேலாம இருக்கு.. ஓ.." அந்த நளீரும் என்னமாதிரி நல்ல குணம்.

காலத்தைப் பின்னால்தான் தள்ளி கவலையுடன் நோக்கினான் ஸ்ரீ.

அருந்ததியின் கேவல் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

x x x

*1989*

அந்த நோன்புப் பெருநாள் வைகறை வேளையில் பக்கத்து முஸ்லிம் வீடுகளில் எல்லாம் பெருநாளைக்காக குளிக்கும் சப்தத்தை மீறி ஆங்காங்கே குதூகலமாய் பட்டாசுகளைச் சுதந்திரமாய் வெடித்து மகிழும் சின்னஞ்சிறுசுகள், "பெரியகடை" வீதிகளிலெல்லாம்.

கிளித்தட்டு விளையாட கோடுகீறி அதிலேயே லயித்துப் போகும் வாலிப வட்டங்கள்.

அது கூட்டுக் குடும்பம் போலவும் ஒன்றிப்போன அடுக்குப்பூக்கள் போலவுமான குடும்ப ஒழுங்குகள். தமிழர்கள்-முஸ்லிம்கள்-கிறிஸ்வதவர்கள் என்று பாகுபாட்டை அறவே அறியாத தூய்மையானவர்களை அந்த ஊரே சுவீகரித்துக் கொண்டதான யாழ்ப்பாணத்தின் பகுதி அது.

நத்தாரில் றோக்நாதர் வீட்டிலும், நோன்புப் பெருநாளில் நளீர் வீட்டிலும், சித்திரை வருடப் பிறப்பில் ஸ்ரீரங்கன் வீட்டிலும் ஒன்றுகூடும் பெண்களின் சிரிப்பொலி இனங்களை மறந்து ஒன்றிப் போனது தமிழ் மொழி மட்டும். ஆனால்.... இன்று..!...

x x x

"ஏய் அருந்ததி.. ஏய் அருந்ததி என்னடியப்பா இன்னுமே நித்திரை கொள்ளுறாய்?" கண்ணைக் கசக்கி சோம்பல் முறித்து அந்தச் சுபஹு வேளையில் கண்விழித்ததும் சியானி இனிப்புப் பொட்டலமும், வட்டிலப்பமும் கையுமாய்..

"என்ன அருந்ததி உனக்குத் தெரியாதா இன்டைக்கு எங்கடை நோன்புப் பெருநாளெண்டு?"

"ஓ.. சொறிடி... என் தங்கக் குட்டி.... அது தெரியாமல் நானென்ன மெய்மறதி யிலையா இருக்கிறன்?"

"அப்ப.. என்ன? இரவு தூங்க வெகு நேரமாயிட்டுதோ" தோழியின் பார்வை சூக்குமம் விசாரிக்க.. அருந்ததி வெட்கப்பட்டு "போடி சும்மா.."

"ஐயோ.. என்ன மறைக்கப் பாக்கிறியா? அதுதானே கன்னத்திலை கடிச்ச அடையாளம்."

ஓடிவந்து சியானியின் வாயைப் பொத்தி- அவள் கைகளில் இருந்த இனிப்புப் பார்சலையும் வட்டிலப்பதையும் வாங்கி மேசைமீது வைத்துவிட்டு ஓடிப்போய் பாத்ரூமில் பல் துலக்கி, முகம் கழுவி, பவுடர் போட்டு அவசரமாய் வந்து சியானியைக் கட்டிப் பிடித்து அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்து....

"ஈத் முபாரக்" சொல்லி..

x x x

அத்தான் காலம் எப்பிடி மாறுது பாத்தீங்களே?"

"ஓம் அருந்ததி. நாங்கள் ஒண்டு நினைக்க விதி ஒண்டு நினைக்குது. யார்தான் இப்பிடி நடக்குமெண்டு எதிர்பார்த்தது?"

தன் தோழியின் பிரிவாற்றாமையால் அருந்ததி தவிப்பதைக் கரணப் பொறுக்காத வனாய் மனச் சங்கடத்துடன், "அருந்ததி இப்ப கொஞ்ச நேரம் அமைதியாய் இரம்மா.." என்று ஆறுதல் படுத்தினான்.

அவளின் உள்ளமெங்கும் "டீ அருந்ததி, டீ அருந்ததி" என்று சியானி அழைப்பதாய் எதிரொலித்தது. கண்ணுக்கெட்டாத தூரத்தில் இருந்தாலும் அவளும் நளீரும் நலமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள் அவள்.

x x x

*1994*

"அல்லாஹு அக்பர்.... அல்லாஹு அக்பர்" மத்திய பள்ளியின் பாங்கோசை எல்லோரையும் சந்தோஷப்படுத்தியது. இன்று பெருநாள். முப்பது நாளும் இறைவனுக்காக உண்ணா நோன்பிருந்து தமது பாவங்களுக்காக மன்னிப்பு இறைஞ்சி இறைவன் ஏற்றுக் கொண்ட அடியானாக அடுத்த வருடத்திற்குள் நுழையும் முஸ்லிமின் சந்தோஷத்திற்குரிய பூரிப்பு.

நளீர் சுபஹுக்கு முன்னமே எழும்பி குளித்து இறை நபியின் முன்மாதிரியான புத்தாடை அணிந்து தஹஜ்ஜுத் தொழுதுவிட்டு துஆக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நளீர்.."

"ம்.. என்னடா சியா?"

"இல்லை எங்கடை நோன்புப் பெருநாள் யாழ்ப்பாணத்திலை எண்டால் எவ்வளவு சந்தோஷம். அவள் அருந்ததி ஓடி ஓடி எவ்வளவு வேலையளைத்தான் செய்து தருவாள்."

"சியானி சில நியதிகள் ஆண்டவனாலை விதிக்கப்படுகிறது தானம்மா!"

"நளீர் எனக்கெண்டா அந்தச் சொந்த பூமியிலை அக்கம் பக்கத்து வீட்டுக்காரரோடை எவ்வளவு அன்னியோன்யமான சூழ்நிலை யிலை வாழ்ந்து கழிச்ச காலம்தான் சுத்தி சுத்தி நினைவுக்கு வருகுது. எப்பிடி யெண்டாலும் பால்யமாய் பழகி.. எங்கடை எண்டு உரிமையோடை அலைஞ்சு விளை யாடின தாய் மண்ணின்ரைவாசம் இன்னும் மனத்திரை அடியிலை எப்பிடி வீசுது. எங்கடை இனம் சனம் எல்லாம் எப்பிடி சிதறுண்டு போய்க்கிடக்கு. ம்..ஹூம்.. யா அல்லாஹ் இந்த நேரத்திலை ஏதோ எங்கடை வயிறு நிறையுது. அங்கை அருந்ததியும்-ஸ்ரீயும், மேரியும்- றோக்நாதரும் என்ன கஷ்டப்படுகினமோ?"

"ஓம் சியானி அந்தக் காலத்திலை பெருநாள் எண்டாலே என்ன அன்னி யோன்யம். முஸ்லிம், சைவம், கிறிஸ்தவம் எண்டு பேதமே இல்லாமை சின்னஞ்சிறுசுகள் எப்பிடி எல்லாம் சந்தோஷிக்கும்."

"நளீர் எனக்கென்னமோ இண்டைக்கு வெறுமையாய்க் கிடக்கு. எங்கடை சனங்கள் எல்லாம் புரிந்துணர்வு, அன்பு, நேசம், சாந்தி இவையெல்லாவற்றையும் தூக்கி வீசிப்போட்டு பிளவுபட்டுப் போய் நிக்கிறதை என்னாலை தாங்கவே ஏலாமக் கிடக்கு. மனம் முழுக்க அந்தரமாய் இருக்கு."

"நீர் சொல்றதும் சரிதான் சியானி. இண்டைக்கு நாங்கள் இரண்டு பேரும் இந்த ரீச்சிங் வேலையாலை சமாளிச்சுக் கொண்டு போறம். சாப்பிடுறது குடிக்கிறதுக்கு கரைச்சல் இல்லாம இருக்கு."

"ஆனா நளீர், எங்கடை சொந்தப் பூமியிலை எத்தினை நெருக்கடியள்– சாப்பாட்டுக் கஷ்டம் உடுப்புக்கஷ்டம்.."

மனம் பிடிவாதமாக்கியும் சுய நினைவுக்கு வராமல் திணறியது.

வேப்பமர முத்தம்,
பனந்தோப்பின் அடியில்..
செபமாலைமாதா ஆலயம்..
உஸ்மானியாப்பள்ளி..
அருந்ததி..
மேரி..
அந்தச் சின்னஞ்சிறுசுகள்..
கடந்த வருடங்களின் நோன்புப் பெருநாள்..

என்று மாறிமாறி சியானியின் மனத்திரையில் முடிவிலியாய் பிம்பங்கள்..

பெருநாள் தொழுகைக்கான அழைப்பு ஒலிபெருக்கியில் விடுக்கப்பட்டதும்.. அவசர அவசரமாக பர்தாவை எடுத்து அணிந்து கொண்டு பெருநாள் தொழுகை தொழுவிக்கும் இடத்திற்குப் போக ஆயத்தமானாள் சியானி.

"நான் பள்ளிக்குப் போயிட்டு வாறன் சியானி." நளீர் முந்திப் போகிறான்.

தாய் மண்ணின் பிரிவு. இனங்கள் அறுந்து போனதால் அன்பானவர்களை இழந்த தவிப்பு... அன்று காலை எதுவுமே விரும்பி உண்ண முடியாத கவலையாய்.. சியானி நடக்கிறாள். மனம் இந்த புண்ணிய தினத்தில் பிரார்த்தித்துக் கொள்கிறது:

**எங்களது இந்தச் சின்னதான தாய்ப் பூமியில் அமைதியும், சாந்தியும், புரிந்துணர்வும், சகோதரத்துவமும் என்றென்றும் வழிவழியாய் பரிணமித்து மகிழ உதவி புரி அல்லாஹ்.**

**அல்லல்பட்டு, அவதிப்பட்டு உண்ண உணவின்றி இல்லிடமின்றி பரிதவிக்கும் இந்த சிதறுபட்டதான பூக்களை ஒன்றாக்கு நாயனே.**

மனம் பிரார்த்தனையின் போது ஒன்றாக, விழிகளில் கசிந்த நீரை தனது வலதுகை சுட்டுவிரலால் துடைத்துவிட்டு பெருநாள் தொழுகைக்காக "தக்பீர்" கட்டிக் கொள்கிறாள் சியானி.

---

முரசிற்கான வித்தியாசமான படைப்பு

"ஸ்நேகம் என்ன
காற்றில் கரைந்துவிடும்
கடல் நுரையா...
ஆன்மாவை அசைய வைக்கும்
மந்திரமே அதுதானடி..."



ஒட்டமாவடி - அறபாத்

# உங்களைப் பார்க்கணும்போல இருக்கு!

சிறுகதை

நேற்றுத்தான் உங்கட கடிதம் பெற்றேன். மனசுக்குள்ள பதுக்கி வச்சி பூஜிக்கணும் போலவும் நானே ஒரு விழா எடுத்து பரிசு தரணும் போலவும் இருக்கு. எவ்வளவு இலக்கியமா, இரசனையா எழுதிருக்கீங்க. உங்கட கடிதங்கள் அத்தனையும் என்னிடத்தில் கலை பொக்கிஷமா இருப்பத நீங்க அறிவீங்களோ...?

"நேசிக்கிறதவிட, நேசிக்கப் பாடுறதில சுகம் உண்டு." அப்படின்னு நீங்கதான் ஒரு கதையில எழுதினீங்க. நான் உங்களால நேசிக்கப்படுவதை விட, பாக்கியம் வேறென்னதான் இருக்கு. மூணு வாரமா நான் உங்களுக்கு கடிதமே எழுதலியே, காரணம் தெரியும் தானே. பிரசவத்திற்கு மாமி வீட்டிற்கு போனேன். பிரசவத்திற்கு முதல் நாள் நீங்க எழுதின "மரணத்திற்கு முன்" கவிதை பேப்பர்ல வந்திச்சி. படிச்சுப் போட்டுத்தான், ஆஸ்பத்திரி போனேன்.

**"ஸ்நேகம் என்ன
காற்றில் கரைந்துவிடும்
கடல் நுரையா...
ஆன்மாவை அசைய வைக்கும்
மந்திரமே அதுதானடி..."**

என்று ஒரு கவிதை எழுதினீங்க. ஞாபகமிருக்கா? என் ஆன்மா துடிக்கிறதும், வாழ்றதும் உங்கட எழுத்துக்களால்தான். என்னவோ தெரியாது உங்கட படைப்புகள் வெளிவரும் போதெல்லாம், அத படிக்கும் போதெல்லாம் அத சேகரிக்க கத்தரிக்கும் போதெல்லாம் ஓடி வந்து உங்கள பார்க்கனும் போல மனசு தவிக்குது.

சென்ற வாரம் எண்ட "ஹஸ்பென்ட்"கூட சொன்னார்; நீங்க நல்லாவே எழுதுறீங்களாம். உங்கட, கவிதையொன்ற வெளிநாட்டு சஞ்சிகை யில படிச்சாராம். அத கிழிச்சிட்டு வந்து எனக்கிட்ட தந்தாரு. உங்கட பழைய காதலிக்கு கலியாணம் முடிஞ்சிருக்கும் இல்லையா? நீங்களும் ஒரு வாழ்க்கைய அமைச்சி சந்தோஷமா இருங்களேன். உங்கட, தனிப்பட்ட விடயத்துல குறுக்கிட்டது தப்புன்னா, மன்னிச்சிடுங்க.

நானும் அவரும் வாற மாசம் நுவரெலியா போறம், போன நோன்பு பெருநாளைக்கு நீங்க அனுப்பின வாழ்த்து மடல் தவறுதலா மேல வச்சிட்டன். எலி கடிச்சிட்டு. அதற்கு நான் அழுத அழுகை.... அவரும் ஏசினாரு. ஆனா, அந்த வாழ்த்து மடல்ல எழுதின கவிதை மட்டும் அழியாம இருந்திச்சி.

**"வாழ்க்கை என்பது
புற்றீசல் அல்ல
பிறந்தவுடன்
இறப்பதற்கு...."**

என்ற வரிகள் 'பிறேம்' போட்டு, மனச் சுவருல மாட்டிவிட்டிருக்கன். உங்க முகம் வெறும் கவிதையாகத்தான் எனக்குள் இருக்கிறது. அடிக்கடி எழுதுவீங்களே "என்ட முகத்தை நிலவா நினைச்சிருப்பதா" இப்பவும் நான் உங்களுக்கு நிலவா தெரிகிறேனா. நம் ஆறு வருஷ நேசத்துடிப்புல ஒரு போட்டோகூட பரிமாறிக் கொள்ளல, நினைக்கும் போது வருத்தமா இருக்கு.

என்ட கடிதங்கள்தான் உங்கள எழுதத் தூண்டுதுன்னு அடிக்கடி எழுதுவிங்களே. அப்படி ஒரு உயிர்ப்பு சக்தி என் எழுத்துக்களுக்கு இருந்தா சாகும்வரை உங்கள எழுத வைப்பன். அதவிட அதிஷ்டம் எனக்கு என்னதான் வேண்டும். என் பிறந்த நாளைக்கு நீங்க கையெழுத்து போட்ட "பேர்த்டே கார்ட்" அனுப்பினிங்க. அதில் ஏழுதிய சின்னக் கவிதைய இப்பவும் படித்தேன். சிரிப்பு வந்தது.

**"விக்கல்
எடுக்கும் போதெல்லாம்
நீ என்னை நினைப்பதாய்
நான் எண்ணி
களிப்புறுவேன்.
உனக்கும் அது வந்தால்
இடை வேளை இருக்காதே....!"**

எனக்கொரு ஆசை, நீண்ட நாள் நப்பாசை அது. உங்கள நேரில பார்த்து, உங்கட முகத்தை என் மனசுக்குள்ள பதிய வைக்கணும். நிறைய பேசணும், வாய்விட்டு சிரிக்கணும். மனசுக்குள்ள மண்டிக் கிடக்குற துயரங்கள கொட்டி அழுது பார்க்கணும். நீங்க எனக்கு அறுதல் சொல்லணும். உங்களுக்கு சிரிப்பு வருது இல்லையா....? எனக்கு பைத்தியம்னு நெனக்கிறீங்களோ தெரியாது.

"ஒரு பதிலுக்காக" கவிதைய அண்மையில படிச்சேன் அது எனக்கு எழுதப்பட்டதுன்னு தெரியும்.

**"தேர்வுக்கு படிப்பதைப் போல்,
திருப்பி திருப்பி படிக்க-
என்னதான் இருக்கிறதோ
உன் கடிதத்தில்,
வேதம் திறப்பதைப் போல்
பக்தியாக விரிப்பதும்,
மனமொன்றி படிப்பதும்
என்-
வேலையாகிவிட்டது...."**

இத எழுதின உங்கட கையத் தொட்டு என் முகத்துல பூசிக்கொள்ள மனம் பரபரக்குது. அவர் வாய்விட்டு படிச்ச உங்கட கவிதையொன்று இப்பவும் எனக்குள் ஈரமாய் இனிக்கிறது. நான் நிறைமாத "கர்ப்பிணி"ன்னு கடிதம் போட்டேன். அதற்கு நீங்க ஒரு 'ஹைக்கூ' மாதிரி எழுதி அனுப்பினீங்க. என்ன டாக்டர்கிட்ட கூட்டிட்டு போகும்போது அவர் அந்த கவிதை சொல்லி எப்படி கிண்டல் பண்ணினார் தெரியுமா...?

**"பூமியே கொஞ்சம்
மென்மையாக இரு
அவள் பிரசவத்திற்காக நடந்து
வரு கிறாள்"**

மனசுக்குள் கிடந்த ரணங்கள்கூட ஆறிப் போச்சி. நீங்க வந்து ஆறுதல் கூறுவதா ஒரு பிரேமை. நான் சாகுறதிற்குள்ள உங்கள பார்க்க னும். புனிதமான நம் நட்புக்கு ஆதாரமா உங்கட குழந்தை ஒன்றையும், என் குழந்தை ஒன்றையும் ஜோடி சேர்க்கணும் அப்படின்னு ஒரு கடிதத்தில எழுதினது எனக்கு இப்பவும் பசுமையா இருக்கு நிச்சயம் உங்கட கனவு பலிக்கும்.

இனிமேலும் நீங்க தனியா இருக்கலாமா? உங்கட எழுத்துக்கள, ஊக்கப்படுத்துற, இரசிக்கிற நல்ல மனைவி நிச்சயம் உங்களுக்கு வருவா- அவட அரவணைப்பில இன்னும் வளருவீங்க. அப்போது இந்த ஏழை இரசிகைய நெனப்பிங்களோ? உங்களுக்கு வரப்போற அந்த அதிஷ்டசாலிய நினச்சா, எனக்கு பொறாமையா இருக்கு.

xxxxx

"விடிஞ்சிட்டா போதும். இதான் வேல, எவள்ற கடிதமோ....? ஒரே கிறுக்குறதுதான் மிச்சம். வயித்துக்கு சோறு போடாத எழுத்தாம் பெரிய்ய எழுத்து" குசினிக்குள் இருந்த அவன் மனைவி வெடித்தாள்.

அவன் இன்னும் அவளின் கடிதத்துடன் இருந்தான். சரேலென அந்தக் கடிதத்தை பறித்து சுக்குநூறாய் கிழித்து எரியும் நெருப்பில் போட்டாள். அவன் எரியும்வரை சிலையாய் நின்றான். பின் பித்துப் பிடித்தவன் போல் ஓடிச் சென்று எரிந்த சாம்பலை அள்ளினான். ஆசையோடு முகத்தில் தடவினான். கலை பொக்கிஷமான அந்த கடிதம் அக்கினிக்குள் அடக்கப்பட்டதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை, அழுதான். வாழ்க்கையில் அவன் அழுத வேதனைக் குரல் அதுதான். அழுது கொண்டே எழுதினான் அவளுக்கு மறு பதில்.

---

# மனித நேயம்

-வாழையூர் ஸ்ரீவரணி-

அருகே வந்த நண்பர்கள் மூவரும் அவசரப்படுத்தினர்.

"கெதியா நட, ராஜன் பஸ் போயிடும்."

ஆனால் என் கண்களோ ஒருவரைத் தேடிக் கொண்டிருந்தன.

"அவன் இப்ப வரமாட்டான், அவனுக்கு அந்தக் குருடன் கரையேத்திற வேலை இருக்கல்லவா? நாம போவம் வாங்கடா!"

இது அவர்களின் வழமையான நடப்புத்தா னென்பதால் இவ்வார்த்தைகள் என்னைப் பாதிக்கவில்லை. நான் அவரையே தேடிக் கொண்டிருந்தேன்.

நானும், என் நண்பர்களும் பஸ்ஸில் போகும் தொலைவிலுள்ள நிறுவனம் ஒன்றில் கடமையில். வேலை கிடைத்துச் சில மாதங்களே ஆகியிருந்தன. வீட்டிற்கும் பஸ் நிலையத்திற்கும் அரை மைல் இடைவெளி இருக்கும். இடையில் வர்த்தக நிலையங்கள், சந்தைக் கட்டிடங்கள், குடியிருப்பு மனைகள்.... இவற்றைக் கடந்தே பஸ் நிலையம் செல்ல முடியும்.

ஒவ்வொரு நாட் காலையும் சந்தைத் தொகுதியைக் கடக்கும் போது எனக்காக ஒருவர் காத்துக் கொண்டிருப்பார். அவருக்கு கண்ணிருந்தும் பார்வையில்லை. விபத்தொன்றில் பார்வையிழந்தவர். பிச்சையெடுத்து வாழ்க்கை வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தார். அவர் கைப்பிடித்து பஸ் நிலையம் வரைக்கும் அவரைக் கொண்டு சேர்ப்பது என் நாளாந்த வழக்கங்களில் ஒன்று.

இன்றும் அப்படியே, அவரைத் தேடினேன் காணவில்லை. நண்பர்கள் தூரத்தே போய்க் கொண்டிருந்தனர். ஒருவன் திரும்பி கெட்ட வார்த்தையால்கூட திட்டிப் போனான். தினமும் ஒரு புண்ணிய காரியம் செய்வதில் இருக்கும் சுகம், வேறெந்த நிகழ்விலும் நான் அனுபவிக்க வில்லை.

அவரை வலைவீசிக் கொண்டிருந்த என் கண்கள் அவரைக் கண்டு கொண்டன. வீதி விளக்குக் கம்பத்தில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தார்.

"என்ன அப்பு, பஸ் ஸ்ராண்டுக்குப் போகலயா? வாங்க கொண்டு போய் விடுறன்."

"நீங்க நல்லா இருக்கணும் தம்பி." சொன்னவர், வெண் தடியை நீட்டினார். பற்றிக்கொண்டேன்.

தூரத்தே நண்பர்கள் போய்க் கொண்டிருக்க, நான் அப்புவை அழைத்துக்கொண்டு நடக்க ஆரம்பிக்கையில் அந்த விபரீதம் நடந்தது. காதை அடைத்த சத்தம், அமுக்கமற்ற சூன்யப் பிரதேசத்தில் நின்ற உணர்வு. திடுக்குற்று, நின்று நிதானித்துப் பார்க்கையில் புரிந்தது. அருகே எங்கோ குண்டொன்று வெடித்திருந்தது. எவ்விடத்தில் வெடித்ததென்று புரியவில்லை. எல்லோரும் உயிரைக் காக்க திசைகெட்டு ஓடிக்கொண்டிருந்தனர். எல்லோரினதும் அலறல்கள், அழுகையொலிகள் வானைப் பிளக்க, நான் அப்புவை ஓர் ஓரமாய் இருக்க



வைத்துவிட்டு நண்பர்களைத் தேடி ஓட எத்தனிக்கையில், அவர்கள் மூவரும் ஓடி வந்துகொண்டிருந்தனர். இருவரைப் பார்க்க முடியாதிருந்தது. உடம்பெல்லாம் காயங்கள், திட்டுத் திட்டாய் இரத்தக் கறைகள், குண்டிலிருந்து சிதறிய துண்டுகள் உடலில் செருகியிருக்க சிலிர்த்தேன் நான். மூவரும் அழுதனர். உடம்பில் காயமென்றாலும் உயிர் தப்பியதற்கான அழுகை அது.

நான் திரும்பி அப்புவைப் பார்த்தேன். முகத்தில் அதிர்ச்சியிருந்தாலும், நிதானம் தெரிந்தது. திரும்பி வந்து அவர் கைப்பிடிக்கையில் சிரித்தார். 'தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும்' என்ற வரிகள் ஏனோ என் மனத்தில் ஓடியது.

(நீங்களும் தர்மம் புரியலாம்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்




# அலட்சியம் போல் ஒரு நடிப்பு!

முடியுடை வேந்தன் மணிபல்லவனின் முன்னால் தலைவணங்கி நிமிர்ந்து கம்பீரமாய் நின்றான் தளபதி கதிரவன்.

ஏறு போன்றதொரு தளபதியை தான் பெற்றுக்கொண்ட பேறு நினைத்து பூரித்தான் மன்னவன் மணிபல்லவன்.

பூரித்தது மன்னவன் மட்டுமல்ல. தளபதியின் ஒளி பொருந்திய முகம் கண்டு, உரம் கொண்ட தோள்களின் தினவு கண்டு, அணிந்திருந்த அங்கி மறைத்தபோதும் அதை மீறித் தெரிந்த தளபதியின் மார்பின் பொலிவும் வலிவும் கண்டு இரசித்தது மன்னவனின் விழிகள் மட்டுமல்ல.

மன்னவன் இருந்தான் மயிலாசனத்திலே. அவன் அருகே இருந்தது வண்ணமயில் ஒன்று.

மன்னவன் மணிபல்லவனின் கண்மணி அவள். இளவரசி சந்திரவதனி. தந்தையின் அருகே அவள் இருந்தபோதும் மனம் எதிரே நின்றிருந்த தளபதியிடமல்லவா சென்றுவிட்டது!

மனம் சென்றுவிட்டபின் விழிகள் விலகி யிருக்குமா என்ன? கவிபாடும் விழியிரண்டும் எதிர் நிற்கும் தளபதியின் மீது குறிவைத்து, செருக்களத்தில் சீறிவரும் எதிரிகளின் வேல் முனைகள் போல் தாக்குதல் அல்லவா நடத்திக் கொண்டிருந்தன.

மன்னவன் முகம் நோக்கிய தளபதியின் விழிகள் மெல்ல விலகி தன்மீது மையல் கொண்டவளின் மையுண்ணும் விழிகளை சந்தித்தன. மையுண்ணும் விழிகள் மட்டுமா அவை? மனதையே அள்ளும் விழிகள் அல்லவா அவை!

சமருக்கு அஞ்சமாட்டான். எதிரிகள் வந்து புயலாய் சாடினும் புறமுதுகு காட்டமாட்டான் என்று போற்றப்பட்ட தளபதி அந்த சந்தன மயிலின் சதிராடும் விழிகள் முன் தோற்றுப் போனான்.

மன்னவர் எங்கே கவனித்து விடுவாரோ என்று நினைத்து மறு நொடியே தன் விழிகளை வேகமாய் விலக்கிக் கொண்டான்.

கதிர் அறுக்கும் அரிவாள் போல் இருந்த மீசையை விரல் ஒன்றால் வருடிக்கொடுத்தபடி மன்னவன் மணிபல்லவன் தன் தளபதியை தாளாத பெருமையோடு நோக்கினான். பின் தனது தடித்த உதடுகள் திறந்து,

"மெச்சுகிறேன் தளபதி. கோலோச்சும் எனக்கும், இங்குள்ள குடி மக்களுக்கும் உன் வாள் வீச்சும், வைரம் பாய்ந்த நெஞ்சுறுதியும் பெரிய பலம்."

மன்னவன் பாராட்டுரை பொழிய தளபதி சங்கடத்தால் அசைந்தான். தன்னவன் பாராட்டப்படுவது கண்டு மன்னவன் அருகே இருந்த மயில் மனதுக்குள் சந்தோச தோகை விரித்து மகிழ்ந்தது.

"தங்கள் பாராட்டுக்கு நன்றி. பாராளும் மன்னவனால் பாராட்டப்படுவது பாக்கியம். எனினும், அதிகப் புகழ்ச்சி என்பது என் அபிப்பிராயம்."

பணிவான தோரணையிலும் கணீரென்று கம்பீரமாய் ஒலித்தது தளபதியின் குரல்.

மன்னவன் உதட்டிலே ஒரு புன்னகை மலர்ந்தது. மீண்டும் உதடு திறந்தது.

"எல்லைதாண்டி எம்மவருக்கு தொல்லை கொடுக்க வந்த அந்நியர் படையை அடித்து விரட்டி சிதறு தேங்காயாக்கி விட்டு வந்திருக்கிறாய். இனி இந்தப் பக்கமே திரும்பியும் பாரோம் என்று பதறிப்போய் ஓடி விட்டார்கள் அவர்கள்! புகழுக்குரியவன் நீ. புகழ் உனக்குப் பிடிக்காதிருக் கலாம் தளபதி. ஆனால் உன்னை புகழாவிட்டால் என் கரத்தில் உள்ள செங்கோல் என் மீது குறைபட்டுக்கொள்ளும். முறையற்ற மன்னவன் என்று பழியும் சொல்லும்."

மன்னவன் பேச்சுக்கு மறுபேச்சு தொடர்வது மரியாதையில்லை என்று மௌனமாய் நின்றான் தளபதி.

தன் அருகே அமர்ந்திருந்த அருமை மகள் பக்கம் திரும்பி,

"என்னம்மா சந்திரா, நான் சொன்னதில் பழுதுண்டோ. நீயே சொல்?"

பூவில் மொய்க்கும் வண்டாக தளபதி மீதே விழிகள் மொய்க்கவிட்டிருந்து, அவன் மேல் சொரியப்பட்ட பாராட்டுக்கள் அனைத்தும் தனக்கே கிடைத்தது போல் உள்ளம் துள்ளும் உவகையோடு இருந்தவளை தந்தையின் வினா தடங்கல் செய்தது. உடனே கொள்ளாத ஆசையும், வெளியே சொல்லாத காதலும் மறைத்துக் கொண்டு, அக்கறையே இல்லாதது போல், தேன் இதழ் மெல்லத் திறந்து,

"ம்....ம்...பெரிய வீரம்தான்."

என்றாள் அலட்சியமாய்.

தளபதி கதிரவன் முகம் இருண்டுபோனது. மன்னவன் புகழுரைகளால் சங்கடப்பட்டவன், மன்னன் மகளின் அலட்சியமான சொற்களால் காயப்பட்டுப் போனான்.

"மன்னவர் மன்னிக்க வேண்டும். இளவரசிக்கு இந்த வெற்றியில் திருப்தி இல்லை போலிருக்கிறது."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லைத் தளபதி. நீ வருவதற்கு முன் உன்னைப் பற்றித்தான் என்னோடு பேசிக்கொண்டிருந்தாள். அவள் உன்னைப் பற்றி பேசியதையெல்லாம் சொன்னால் போதும்; நீ புகழ்ச்சி என்னும் கடலில் வீழ்ந்து காணாமல் போய்விடுவாய். பின்னர் எனக்கொரு சிறந்த தளபதி இல்லாமல் போய்விடுவான்."

சொல்லிவிட்டு உரத்து நகைத்தார்.

மகளால் ஏற்பட்ட காயத்தை ஆற்றுவதற்கு மன்னவர் பொய் சொல்லுகிறாரோ என்று கதிரவன் நினைத்தான். எனினும் உள்ளே பட்ட காயம் மறைத்து விடைபெற்றான்.

■

கொய்யா மரங்கள் குடைபோல் நிழல் தந்துகொண்டிருக்க, கோபம் மறையாத முகத்தோடு இருந்தான் கதிரவன்.

அவன் அருகே அமர்ந்திருந்தது ஒய்யார அழகுச் சிலை.

"கோபமாக்கும்?"

கேட்டபோது செவ்விதழ்களில் தெரிந்தது புன்னகை.

பதில் பேசாமல் இருந்தான்.

"தெரியும்."

என்று சொன்னது தேவதை.

"என்ன தெரியும்?"

என்று கேட்டான் சிறிது சினம் கலந்த குரலில் தளபதி.

"கோபமாய்த்தான் இருப்பீர்கள் என்று தெரியும்?"

சொல்லிக்கொண்டே அவன் முகம் நோக்கி கோபத்தை சிதறடித்து, காதல் தாபத்தை தூண்டும் விழிப்பார்வை வீசினாள்.

"கோபம் வரும் என்று தெரியும் அல்லவா? தெரிந்துமா அலட்சியமாய் பேசி என் திறமையை தூக்கி எறிவது போல் நடந்து கொண்டாய்?"

"அது சும்மா."

"என்ன சும்மா?"

"உங்களுக்கு கோபம் வருவதைப் பார்க்க ஒரு ஆசை. உங்களை குழப்பிவிட்டு வேடிக்கை பார்க்க ஆசை."

சில்லென்று வீசும் தென்றலாய் புன்னகை காட்டிப் பூரித்தாள்.

"அப்படியாக்கும்?"

என்றான். அவள் புன்னகையில் மனம் இழந்தபடி.

"அப்படித்தான்."

என்றாள் அவன் தன்னை விழிகளால் தழுவுவதை இரசித்தபடி.

"கோபம் வருவதைப் பார்த்தாய் அல்லவா?"

"பார்த்தேன். பார்த்தேன்."

"இப்போது வேகம் வருகிறது பார்."

என்றான். மறு நொடியே தளபதி கதிரவனின் கரங்கள் அந்த தந்தச் சிலையை தழுவிக் கொண்டன.

"வேண்டாம்."

என்றது சிலை.

"எனக்கு வேண்டும்."

என்று கொய்யாத பழங்களாய் அழகு காட்டிய இரு கனிகளை குறிவைத்தபடி சொன்னான் தளபதி.

அங்கே ஒரு போர்க்களம் உதயமானது.

சந்திரவதனி தன் தந்தையின் முன்னால் தன் இதய மன்னவனை எடுத்தெறிந்து பேசியதற்கு அவள் சொல்லாத காரணமும் ஒன்றுண்டு. அது என்ன? அதை திருவள்ளுவரே சொன்னால் தான் அழகு.

**உறாஅ தவர்போல் சொலினும் செறா அர் சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

குறள்–1096 அதிகாரம்–110

புறத்தே அயலார் போல் அன்பில்லாத சொற்களைச் சொன்னாலும், உள்ளத்தின் உள்ளே பகையில்லாத சொல் என்று விரைவில் அறியப்படுமாம்.

(19ம் பக்க மகாபாரதம் தொடர்ச்சி)

எங்கும் தேடுகிறார்கள். எந்தச் செய்தியும் இன்னும் வந்து சேரவில்லை.

**குந்தி:** எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது.

**விதுர:** பீமனை சுலபமாகக் கட்டிவிட முடியாது. அவன் காற்றைப் போன்றவன். எங்காவது பறந்து போயிருப்பான். அவ்வாறே திரும்பி வருவான்.

**குந்தி:** இந்த அநாதைக் குழந்தைகளின் தாய்க்குள்ள கவலைகள் உங்களுக்குப் புரியுமா?

**விதுர:** மதிப்புக்குரிய தந்தை பீஷ்மரும் மகாராஜாவும் இருக்கும் போது பாண்டவர்கள் எவ்வாறு அனாதைகளாக முடியும்?

-காட்சி மாற்றம்-

**நாகலோகம்– நாகராஜாவின் எதிரில் பீமனை நாகலோகக் காவலர்கள் நிறுத்தி அரசனுக்கு மரியாதை செலுத்துகின்றனர்.**

**நாக-காவ:** நாகராஜாவுக்கு வெற்றி உண்டாகட்டும்.

**நாகராஜன்:** இந்தச் சிறுனை ஏன் கொண்டு வந்தீர்கள்?

**நா.கா:** இவன் சாதாரண சிறுவனல்ல பிரபு! எமது எல்லைப் பாதுகாப்பினைச் சிதைத்து விட்டான்.

**நா.ரா:** இந்தச் சிறுவனா?

**நா.கா:** ஆமாம் பிரபு! மயக்கமாகி நீரில் கிடந்தான். பிறநாட்டு ஒற்றனாக இருக்கலாம் என்று கருதி எமது காவலர்கள் அவனைத் தீண்டியபோது எழுந்துவிட்டான். இவனை அடக்க பெரும் பாடுபட்டுவிட்டோம்.

**நா.கா2:** யாரோ இவனுக்கு விஷமூட்டியுள்ளனர். எங்கள் தீண்டுதலினால் விஷம் நீங்கியிருக்க வேண்டும்.

**நா.ரா:** இங்கு வாரும் சிறுவனே! நீ யார்?

**பீமன்:** நான் பீமன். குந்தியின் மைந்தன்.

**நா.ரா:** குந்தி மகாராணியின் மகனா நீ?

**நாகராஜன் எழுந்து பீமனை அணைத்து முத்தமிடுகிறான்.**

**நா.ரா:** குந்தியின் மகனே! உன் தந்தைவழிப் பாட்டன் இல்லத்துக்கே வந்திருக்கிறாய். கங்கா புத்திரர் பீஷ்மர் உனது தாய்வழி பாட்டனார். குந்தி எனது மகளின் மகள். நீடூழி வாழ்க! குந்தி எப்படி இருக்கிறாள்?

**பீமன்:** அப்பாவின் மறைவால் துயருற்றிருக்கிறார்.

**நா.ரா:** நீ இங்கு வந்தது அம்மாவுக்குத் தெரியுமா?

**பீமன்:** எப்படித் தெரிய முடியும்? துரியோதனனும் துச்சாதனனும் எனக்கு விஷம் கொடுத்து ஆற்றில் வீசிவிட்டனர்.

**நாக.ரா:** அப்போ குந்தி கவலையுடன் உன்னைத் தேடுவாள். நீ உடனே போயாக வேண்டும்.

**நாகராஜன் பீமனுக்கு சுரபானம் கொடுக்கிறார்.**

**நா.ரா:** இதனைப் பருகு மகனே!இதில் ஒரு கோப்பை குடித்தால் பத்து யானைகளின் பலம் கிட்டும்.

-காட்சி மாற்றம்-

**அரண்மனை**

**காந்தா:** பீமனுக்கு எத்தீங்கும் நடந்திருக்காது குந்தி! என் மனம் கூறுவது பொய்யாகாது. கண்ணீரைத் துடைத்துக்கொள்.

**விதுரர்:** நானும் அதனையே கூறுகிறேன் மகாராணி! குந்தியை சமாதானப் படுத்துவது கடினம்! இளவரசர் பீமன் திரும்பினால் மட்டுமே அவர் கண்ணீரை நிறுத்த முடியும்!

**பீமன் வந்து சேர எல்லோரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.**

**பீமன்:** அம்மா..!

**குந்தி:** பீமா...பீமா..! என் மகனே எங்கேயடா போயிருந்தாய் என் கண்மணியே?

**பீமன்:** என்ன நடந்தது தெரியுமா அம்மா? துரியோதனன் எனக்கு பாயசம் கொடுத்தான்..!

**யுதிஷ்:** பீமா..!

**எதையும் கூறவிடாமல் சைகையால் யுதிஷ்டிரன் பீமனைத் தடுக்கிறான்.**

**பீமன்:** நான் குடித்தேன். தூங்கிவிட்டேன். விழித்தபோது நாகலோகத்தில் இருந்தேன். நாகராஜா தங்கள் பாட்டனாராம் என்று கூறினார்கள் அம்மா!

**குந்தி:** ஆமாம் மகனே! இந்தக் கதைகள் இப்போது வேண்டாம். பெரியம்மாவிடம் போய் அவருடைய ஆசியைப் பெற்று வரலாம் வா!

**காந்தாரியிடம் இருவரும் செல்கின்றனர்.**

**குந்தி:** அக்கா! பீமன் வந்துவிட்டான்.

**காந்தா:** எங்கே போனாய் மகனே? நீடூழி வாழ்க! அதிக உறுதியுடன் வாழ்க!

**பீமன்:** நான் நல்ல பலசாலி ஆகிவிட்டேன். ஏழு கோப்பை சுரபானம் அருந்தினேன். ஒரு கோப்பை சுரபானம் பத்து யானைகளின் பலத்தைத் தருமென நாகராஜன் கூறினார்.

**அர்ச:** அப்போ இனி அண்ணனுக்கு எழுபது யானைகளின் உணவு தேவைப்படுமே!

**எல்லோரும் சிரிக்கின்றனர்.**

-காட்சி மாற்றம்-

**துரியோதனனின் இருப்பிடம்**

**துரியோ:** என்ன நடந்தது துச்சாதனா?

**துச்சா:** அந்த சாப்பாட்டு ராமன் வந்து விட்டான்.

**துரியோ:** வந்து விட்டானா? அந்தக் கொடிய விஷத்தை முறிப்பதானால் நாகலோகத்திலுள்ள பாம்புகளால்தான் முடியும் என்று மாமா சொன்னாரே!

**துச்சா:** எனக்குத் தெரியாது. நாகராஜா சுரபானம் கொடுத்ததாக அம்மா குந்தியிடம் கூறுவதைக் கேட்டேன். இனி நம்மையும் காட்டிக்கொடுத்து விடுவானே!

**துரியோ:** காட்டிக் கொடுத்து என்ன பண்ண முடியும்? அவன் ஒருவன். நாம் இருவர். அவன் பேச்சை யார் நம்புவார்கள்? தவிர மகாராஜா நிச்சயமாக எனக்குச் சாதகமாகவே இருப்பார்.

**துச்சா:** அப்போ அம்மா...!

**துரியோ:** அம்மாவை சமாளிப்பதுதான் சற்றுக் கடினமானது.

**துச்சா:** பாயசத்தைப் பற்றி எதுவும் பேசக்கூடாது. பீமனை நினைத்தால் பயமாக இருக்கிறது.

**துரியோ:** நீ என்னுடனேயே இருந்து கொள். இருவரை அவன் தனியாக நின்று என்ன செய்ய முடியும்?

-காட்சி மாற்றம்-

**பீமன்:** அவன் துரியோதனன் தலையை உடைப்பேன்.

**யுதிஷ்:** தலைகளை உடைப்பதை விடுத்து வேறு கதைகளைப் பேசுவோம்.

**பீமன்:** அண்ணா என்ன சொல்கிறார் என்று கேட்டாயா அர்ச்சுனா? பாயாசம் என்று விஷம் தந்தவனை தழுவிக்கொள்வதா?

**யுதிஷ்:** அவனைப் போல் நடக்க வேண்டாம் நீயும்! பீமா நீ மனிதனாய் நடந்துகொள்.

**யுதிஷ்:** மன்னிக்கப் பழகிக் கொள் தம்பி!

**பீமன்:** அப்படியானால் விஷம் தந்தமைக்கு நன்றி சொல்லி, இன்னும் வாங்கிக் குடிக்கட்டுமா நான்?

**யுதிஷ்:** அமைதியாய் இரு! நம் குடும்பப் பிரச்சனை வெளியே தெரிய வேண்டாம்.

**அர்ச்:** இது தங்கள் கட்டளையா?

**யுதிஷ்:** அப்படித்தான் அமைதிகாக்க முடியுமானால் கட்டளையாகவே இருக்கட்டும்.

**குந்தி வருகிறார்.**

**குந்தி:** ஆமாம்! இதுவே எனது கட்டளையும்! துரியோதனனுடன் எந்த ஒட்டோ உறவோ வேண்டாம்.

**பீமன்:** தங்கள் விருப்பப்படியே நடக்கிறோம் அம்மா!

**பின்னணிப் பாடல்**

**அன்பின் உறைவிடம் அன்னை-அந்த**
**ஐவரின் துணையும் அவளேயாம்**
**பின்னிப் பிணைந்த பாசக் கயிற்றால்**
**நன்நெறி காட்டும் நாயகி அவளே!**

-தொடர்ந்து வரும்-

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல–41

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| 5 | | | ■ | 6 | | |
| | ■ | | 7 | | ■ | |
| ■ | 8 | | | | 9 | |
| 10 | | ■ | | | | ■ |
| | | ■ | | ■ | 11 | |
| | | ■ | | ■ | 12 | |

### இடமிருந்து வலம்

1. இரகசியமாகச் செயற்படுகிறவர்.
3. இது வந்தால் பத்தும் பறக்கும்.
5. பிரச்சனைக்குரிய எழுத்தாளர்.
6. இது வந்தால் பகையும் வரும்.
8. இது இப்போது யாழ்ப்பாணத் திற்குச் செல்வதில்லை.
10. வித்தை சொல்லிக் கொடுப்பவர்.
11. இதற்காகவும் யுத்தங்கள் நடப்பதுண்டு.
12. இதற்குச் சித்திர வேலைப்பாடுகள் அழகு (திரும்பியிருக்கிறது)

### மேலிருந்து கீழ்

1. மொழிகளின் ஒன்று.
2. அடுத்தவர் பற்றிக் குறை சொல்வதை சிலர் இப்படியாகச் கொள்வதுண்டு.
4. ராசிகளின் ஒன்று.
6. பல கோவில்களில் உண்டு.
7. நால்வகைக் குணங்களில் இதுவும் ஒன்று.
8. கணவனின் மறுபெயர்.
9. மகாபாரதத்தில் இவரும் வருவார்.
10. விளக்கை இதனுள் வைத்தால் வெளிச்சம் வராது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 19.03.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-41
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-39க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | னு | மா | ர் | ■ | 2 தூ | 3 சி |
| 4 பி | ர | த | ம | ர் | ■ | ல |
| மா | ■ | 5 வி | யா | பா | 6 ர | ம் |
| னி | 7 கூ | ■ | 8 ம | ■ | சீ | பா |
| ■ | ந் | ■ | க | ■ | து | ட் |
| 9 மு | த | லா | ளி | ■ | ■ | டா |
| ள் | ல் | ■ | ர் | 10 பா | ண | ம் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.38இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. இ. சஜீவன்
   கொழும்பு-12.
2. ஐ. ஜாபீர்
   கிண்ணியா-03.
3. வி. பத்மநாதன்
   கொழும்பு-06.
4. ஒஸ்லி கபூர்
   அனுராதபுரம்.
5. அமுதா சுப்பிரமணியம்
   திருகோணமலை.
6. எம். முஜாகித் நௌபர்
   அக்குறணை.
7. எஸ். மணி
   குருநாகல்.
8. எஸ். ஜீவா
   களுவாஞ்சிக்குடி.
9. வி. ஜெயசிரி
   மட்டக்களப்பு.
10. பா. ரமணி
    நுவரெலியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம் அங்கம் 20

இவ்வாரம் (13.03.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** கல்வியைப் புகட்டுபவன் குரு. கல்வி கற்பதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டியது குடும்பத்திலுள்ள முதியவர்களின் கடமை. பெற்றாரின் அரவணைப்பை விட்டு குருகுல வாசமேற்று கல்வி கற்பது அன்றையப் பழக்கம். கடவுளுக்கு அடுத்த படியாக குருவுக்கு மதிப்பளிக்கப்படுகிறது.

பாண்டு புத்திரர்கள் குருகுலம் சென்ற அன்றையத் தினமே குரு கிருபாச்சாரியாரை திருதராட்டிரன் அரண்மனைக்கு அழைத்ததில் ஓர் அந்தரங்க எண்ணமும் அவருக்கு இருக்கிறது என்பது தெரிகிறது. மனிதனுக்குரிய பெலவீனங்கள் மன்னனுக்கில்லாமலா போய்விடும்? பாண்டு புத்திரர்கள், தன் மகன் துரியோதனனைப் போன்று சிறந்த அறிவுபெறுவதை மன்னன் விரும்பவில்லை போலும். திருதராட்டிரனின் இந்தச் செயல் துரோணாச்சாரியாரின் வரவுக்கு வழி வகுத்து விடுகிறது என்பதை அவர் அறியமாட்டார்.

இதே நேரத்தில் குந்தியின் மூத்த மகனையும் நாம் காணவேண்டிய கட்டத்திலுள்ளோம். ஆகவே, கிருபாச்சாரியாருடன் அஸ்தினாபுரம் செல்வோம்.

-காட்சி தொடக்கம்-

திருதராட்டிரன் அரண்மனை—பீஷ்மர் வருகிறார்.

**பீஷ்ம:** மகாராஜா! அதிரதனின் பிரச்சனையைத் தீர்க்க குரு கிருபாச்சாரியாரை ஏன் அழைத்து சங்கடத்தில் ஆழ்த்த வேண்டும்?

**திருத:** பெரியப்பா! அவர் எமது குலகுரு அல்லவா? இந்தப் பிரச்சனையை அவரும் அறிந்திருப்பது நல்லதென நினைக்கிறேன்.

**பீஷ்ம:** பாண்டு புத்திரர்கள் இன்றுதான் குருகுலம் சென்றார்கள். அத்தருணத்தில் குரு அங்கேயே இருப்பது நல்லதல்லவா?

**திருத:** தனது சகோதரர்களை துரியோதனன் கவனித்துக் கொள்வானே தந்தையே!

**கிருபாச்சாரியார்:** வாழ்க மகாராஜா!

**பீஷ்ம:** வாருங்கள் குருதேவரே!

**கிருபா:** விதுரரும் உடன் வந்திருக்கிறார்.

**திருத:** தயவு செய்து அமருங்கள். குருதேவரே! பாண்டு புத்திரர்களின் கல்வியில் ஏதாவது குறைபாடு ஏற்படக் கூடுமா?

**கிருபா:** கவலை வேண்டாம் மா மன்னரே! குழந்தைகளின் மனம் பூமியைப் போன்றது. அது வழமான பூமியானால் துளிர் வரத்தாமதம் ஏற்படாது. பாண்டு புத்திரர்களின் உள்ளம் நல்ல வளம் நிறைந்தது மகாராஜா!

**திருத:** அப்போ துரியோதனன்...?

**கிருபா:** அவனிடம் எக்குறையும் இல்லை. இருப்பினும் குதிரையைப் போன்று மனதுக்கும் கடிவாளம் அவசியம். கவலை வேண்டாம். துரியோதனன் பரந்த உள்ளம் படைத்தவன். கொடுப்பதானால் எதையும் கொடுப்பான். வேண்டாம் என்று துணிந்தால் ஊசித் துவாரத்தைத் தானும் விட்டுக் கொடுக்காத பிடிவாதக்காரன்.

**திருத:** கல்வியில் போதுமான கவனம் செலுத்துகிறானல்லவா?

**கிருபா:** முழுக் கவனத்துடனேயே கல்வியைப் புகட்டுகிறேன் மன்னவா! கவலைப்பட வேண்டாம்.

**திருத:** அப்படியானால் சரி. பெரியப்பா! இப்பொழுது அதிரதனின் பிரச்சனைக்கு வருவோம்!

**பீஷ்ம:** அப்படியே!

திருதராட்ரன் காவலனை அழைத்து அதிரதனை அழைத்து வரும்படி உத்தரவிடுகிறார்.

**விதுர:** மகாராஜா! அதிரதனால் எத்தகைய பிரச்சனை எழுந்துள்ளது?

**திருத:** பாண்டுவுக்குரிய கிரீடத்தை நான் இன்று அணிந்திருக்கிறேன்- அஸ்தினாபுரி அரியணை காலியாக இருக்கலாகாது என்பதற்காக. அந்தகாரம் என்பதற்கான விளக்கத்தை என்னைத் தவிர வேறு எவரால் பூரணமாக உணர முடியும்? மதிப்புக்குரிய பெரிய தந்தையும் மா மந்திரி விதுரரும் துணை நிற்பதனால் அரசின் சுமையினைத் தோள் மேல் தாங்குகிறேன். அஸ்தினாபுரி எல்லைகளும் பாதுகாப்பாக உள்ளன. ஆனால் இப்பொழுது எனது தேர்ச்சாரதி அதிரதன் என்னை விட்டு விலகிச் செல்ல விடை கோருகிறான்.

**கிருபா:** காரணம் என்னவோ?

**திருத:** என்றும் என்னுடன் அவன் பிணைக்கப்பட்டிருப்பதனால் ராதேயனை வளர்ப்பதில் தடைகள் இருக்கின்றனவாம்.

**விதுர:** ராதேயனா? யார் அது?

**காவலன்:** தேர்ச்சாரதி அதிரதன் வருகிறார் மகாராஜா!

**அதிரதன்:** மகாராஜாவுக்கு எனது தாழ்மையான வணக்கம்.

**திருத:** வாரும் அதிரதரே! ராதேயன் யார் என்று விதுரர் வினவுகிறார்.

**அதிர:** எனது மகன். உண்மையில் ஒரு சொந்த மகனைவிட அதிக அன்புடன் வளர்க்கப்படும் எனது வளர்ப்பு மகன்.

**பீஷ்ம:** அப்போ அவன் யாருடைய புதல்வன்?

**அதிர:** அதனை யான் அறியமாட்டேன் பிரபு! பகீரதி நதிக்கரையில் தான் என் குடிசை. எனது மனைவி ராதை ஒருநாள் வெளியே சென்றவள் இரவு வெகு நேரமாகியும் வரவில்லை....

-காட்சி பின் நோக்கு-

அதிரதன் இல்லம்— பணிக்குச் செல்லப் புறப்படும் போது மனைவி ராதை வருகிறாள்.

**அதிர:** இரவு முழுவதும் எங்கே போயிருந்தாய்?

**ராதை:** என் சினேகிதிக்குக் குழந்தை பிறந்திருக்கிறது.

தனக்குக் குழந்தை இல்லையே என்ற கவலையில் விம்முகிறாள்.

**அதிர:** எது நடக்க வேண்டுமோ அதுதான் நடக்கும்.

**ராதை:** என் தலைவிதி ஏன் வெறுமையாக இருக்க வேண்டும்..?

**அதிர:** அவ்வாறு கூறாதே! தாமதத்துக்கும் காரணமிருக்கலாம். கடவுள் நமக்கு சிறந்த பிள்ளையைத் தரக்கூடும். இறைவன் தவறுவதில்லையே!

இதே வேளை ஒரு குழந்தையின் அழு குரல் இருவருக்கும் கேட்கிறது.

**ராதா:** யார் குழந்தை அழுகிறது?

**அதிர:** போய்ப் பார்க்கலாம் வா. ஒரு வேளை நமக்கான குழந்தையாகவும் இருக்கலாம்!

••••

நதியில் ஒரு கூடை மிதந்து வருகிறது. கூடைக்குள் குழந்தையைக் கண்டு ராதை எடுக்கிறாள்.

-பின் நோக்கு முடிவு-

**அதிர:** நான் உண்மையை மறைக்காமல் தங்களிடம் கூறிவிட்டேன். அந்தச் சிறுவனுக்கோ வேறு எவருக்குமோ இது தெரியாது. அவன் எனது உண்மையான மகன் அல்லாதமையினால் அவனை வளர்க்கும் பொறுப்பும் அதிகமாகிவிட்டது. நான் விடை பெறலாமா மகாராஜா!

**பீஷ்ம:** அதிரதன் கூற்று சரிதான்.

**திருத:** இருப்பினும் பக்தியும் கீழ்ப்படிவுமுள்ள சாரதியில்லாமல் இந்த அந்தக மன்னன் என்ன செய்ய முடியும்?

**அதிர:** மகாராஜா! எனக்கு எந்த வகையிலும் குறைவில்லாத ஒரு சாரதியை அழைத்து வந்திருக்கிறேன்! என்னைப் பார்க்கிலும் சிறப்புடையவன் என்றும் கூறுவேன்.

**பீஷ்ம:** உனக்கிணையானவன் யாரப்பா?

**அதிர:** சஞ்சயன் என்பது அவன் பெயர் பிரபு!

அதிரதன் சஞ்சயனை அழைத்துவர வெளியே செல்கிறான்.

**திருத:** தங்கள் கருத்தென்ன பெரியப்பா?

**பீஷ்ம:** அதிரதன் பரிந்துரைப்பதால் அவனையே தேர்ச் சாரதியாக நியமித்துவிடலாம். தங்கள் கருத்து என்ன குருவே!

**கிருபா:** பீஷ்மரின் கருத்தே எனக்கும்.

**திருத:** விதுரரின் கருத்தினையும் அறிவது நல்லது பெரியப்பா!

**விதுர:** எனது மனம் அளிக்கும் தீர்ப்பைப் பொறுத்தது.

அதிரதன் சஞ்சயனுடன் வருகிறான்.

**சஞ்சயன்:** அஸ்தினாபுரத்தின் மாமன்னரே! எனது பணிவான வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.

**பீஷ்ம:** சஞ்சயா! தேர்ச் சாரதியின் முதற் கடமை என்ன?

**சஞ்ச:** தனது எஜமானுக்காகவே வாழவும் உயிர்த்தியாகம் செய்ய வேண்டியிருப்பின் உயிரைத் துறக்கவும் தயாராயிருக்க வேண்டும்.

**விதுரர்:** இரண்டாவது கடமை என்னவோ?

**சஞ்ச:** எஜமானருக்கு பிடிக்குமோ பிடிக்காதோ என்ற அச்சமின்றி எது சரி எது தவறு என்பதை தவறாமல் சுட்டிக்காட்டுவது. அத்துடன் ஒரு தாயானவள் தன் குழந்தையை வெய்யிலிலும் புழுதியிலிருந்தும் காப்பது போல் தனது எஜமானைக் காப்பாற்ற வேண்டும்.

கிருபாச்சாரியாரும் பீஷ்மரும் கேட்கும் வினாக்களுக்கு தகுந்த விடையளிக்கிறான் சஞ்சயன்.

**திருத:** சரி! இன்று முதல் சஞ்சயனை எனது தேரோட்டியாக நியமிக்கிறேன்.

சகலருடைய ஆசிர்வாதங்களையும் அதிரதன் பெறுகிறான்.

**அதிர:** ஓ மகாராஜா! தங்களுக்கு என்னாலான கடமைகள் அனைத்தையும் செய்து முடித்து விட்டேன். நான் விடை பெற அனுமதி தாருங்கள்.

**திருத:** போய் வா! என்றும் என் நினைவில் இருப்பாய்.

**பீஷ்ம:** போகலாம் அதிரதா! இறைவன் அருளிருந்தால் உன் வீட்டு முற்றத்து கதிரவனின் ஒளி உலகனைத்தும் பிரகாசிக்கட்டும்.

-காட்சி மாற்றம்-

அதிரதன் இல்லம்— கர்ணன் ஒரு தடியினை வில்லாக வளைக்க முற்படும் போது ஒரு முனிவர் வருகிறார். கர்ணன் வணங்குகிறான்.

**முனிவ:** நாராயண... நாராயண...நாராயண...! உலகிற் சிறந்த கருணை உள்ளம் கொண்டவனாக வளர்வாய் மகனே! ஒரு பிடி தானியம் கிடைக்குமா?

**கர்ண:** நிச்சயமாக பெரியவரே!

உள்ளே சென்ற கர்ணன் ஒரு பாத்திரம் நிரம்ப தானியம் கொண்டு வந்து கொடுக்கிறான்.

**முனிவ:** குழந்தாய்! நான் கேட்டது ஒரு கையளவு தானே!

**கர்ண:** எனது கையின் அளவு மிகச் சிறியதுதானே!

**முனிவ:** குழந்தாய் வேண்டும் வரம் கேள் தருகிறேன்!

**கர்ண:** எவரிடமும் எதையும் நான் கேட்க மாட்டேன்!

**முனிவ:** ஓ...பெருந்தன்மை கொண்டவனே! உலகில் சிறந்த கொடையாளியாவாய்! உனது ஆசைகள் நிறைவேற ஆண்டவன் அருள்வான். உலக மகா வீரர்களில் ஒருவனாவாய்! வாழ்க! வாழ்க!

••••

அதிரதனும் கர்ணனும் சூரியனை வணங்குகின்றனர்.

**அதிர:** நாளை முதல் உனக்கு தேரோட்டக் கற்றுத்தரப் போகிறேன் மகனே!

**கர்ண:** நான் தேரோட்டியாக விரும்பவில்லை அப்பா! நான் போர்க் கருவிகளைப் பாவிக்கும் முறைகளைக் கற்க விரும்புகிறேன்.

**அதிர:** அது சத்திரியர்களுக்குள்ள பயிற்சியல்லவா?

**கர்ண:** பண்டைக் காலத்தில் செய்யும் தொழிலைக் கொண்டுதான் சாதிப் பாகுபாடிருந்ததே தவிர பிறப்பால் இல்லை என்று நான் அறிகிறேன் அப்பா!

**அதிர:** ஆமாம் அது அந்தக் காலம். இன்று தொழில் பரம்பரைப் பாத்தியதையுடைய தாயிற்றே மகனே!

**கர்ண:** இருக்கலாம். பார்ப்போமே!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் அரண்மனை— அர்ச்சுனனும் அவனைத் தொடர்ந்து பீமனும் ஓடி வருகின்றனர். அர்ச்சுனன் பீஷ்மரின் மடியில் ஏறி அமர்கிறான்.

**பீமன்:** அப்பப்பா! அப்பப்பா! எனது பாயாசத்தை இவன் எடுத்து குடித்துவிட்டான்.

**பீஷ்ம:** சரி அதுக்கென்ன? உன் தம்பிதானே!

**பீமன்:** எனக்கு உண்ண எதுவுமில்லையே!

**அர்ச்:** ஏன்! நேற்று என்னுடைய உணவை நீ எடுத்துச் சாப்பிட்டாயே! அதனையும் அப்பப்பாவிடம் சொல்லேன். அம்மா எப்போதும் இவருக்கு இரண்டு மடங்கு உணவு தருகிறார். எப்போது பார்த்தாலும் அடுப்படியில் சுற்றுகிறார். எல்லா வற்றையும் உண்கிறார்.

**பீமன்:** சமயல் முறையைப் பார்த்துப் பழகத்தான் அடுப்படி போகிறேன். அப்பப்பா என் பாயாசத்தை வாங்கிக் கொடுங்கள்.

**பீஷ்ம:** அதெப்படி பீமா! குடித்துமுடித்ததை திரும்பப் பெறுவது எப்படி? நாளை உனக்காக ஏராளமான பாயாசம் செய்யச் சொல்கிறேன் சரிதானே? (அர்ச்சுனனிடம்) சரி போங்கள்-அம்மா தேடுவார்.

**அர்ச்:** அவனுடன் போனால் அடிப்பான். என்னிடம் அவனுக்கு பாசமுண்டுதான். ஆனால் இன்று கோபமாக இருக்கிறான்.

**பீஷ்ம:** அப்போ பிரச்சனை கடுமையானதுதான்!

**அர்ச்:** அப்பா! நான் இங்கேயே படுக்கட்டுமா?

**பீஷ்ம:** மகனே! நான் உங்கள் அப்பா அல்ல என்று எத்தனை தடவை கூறியிருக்கிறேன். நான் உங்கள் அப்பாவின் அப்பா! அப்பப்பா. புரியுதா! (பீமனிடம்) மகனே! அம்மாவிடம் போய்க் கூறு- தம்பி தூங்கியதும் நான் கொண்டு வருகிறேன். நீடூழி வாழ்க!

பீமன் சென்றதும் அர்ச்சுனனிடம்- உங்கள் படிப்புகள் எப்படி? ஆரம்பித்து விட்டதா?

**அர்ச்:** இல்லை அப்பப்பா! பெரியப்பா குலகுருவை அழைத்துவிட்டார். அவர் திரும்பி வரவில்லையே! அங்கு ஏராளமான ஆயுதங்கள் இருந்தன. ஒரு நாள் வில்லை எடுத்தேன். ஆனால் அண்ணன் தர்மன் தடுத்துவிட்டான். குருவின் கட்டளையில்லாமல் தொடலாகாது என்றான். ஆயுதங்களுக்கு பூஜை வைக்காமல் எடுக்கலாகாது என்றான். அப்பப்பா! ஆயுதங்களும் கடவுளா?

**பீஷ்ம:** ஆயுதங்கள் ஆண்டவனல்ல. ஆயுதங்கள் மூலம் ஆண்டவனை வணங்க வேண்டும். எந்தக் காரியத்தைத் தொடங்குவதானாலும் இறைவனைத் தொழ வேண்டுமல்லவா? ஆசிரியர் அறிவைப் புகட்டுவதாக இருந்தாலும், அறிவு ஆண்டவனின் அருட்கொடை அர்ச்சுனா!

-காட்சி மாற்றம்-

அரண்மனை—யுதிஷ்டிரனிடம் விதுரர் வருகிறார்.

**விதுர:** முடிக்குரிய இளவரசரே! வந்தனம்!

**யுதிஷ்:** சித்தப்பா! ஏன் அப்படி அழைக்கிறீர்கள்?

**விதுர:** நவக்கிரகங்கள் தங்களுக்கென ஒருபாதையை வகித்திருப்பது போல் ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு. அஸ்தினாபுரத்தின் அரியணையில் ஏற வேண்டியவன் நீ. பிரதம அமைச்சர் என்ற நிலையில் நான் அந்த மதிப்பை அளிக்கக் கடமைப்பட்டவன். இந்தக் கடமையை கிருபாச்சாரியார் தெரிவிக்காவிட்டாலும் பணிப்பெண்ணின் மகனான நான் என் கடமையை மறக்கலாமா?

**யுதிஷ்:** சரி! தங்கள் மரியாதையை ஏற்கிறேன். ஆனால், இப்பொழுது எனது சித்தப்பாவின் தாழ் பணிந்து இவன் மரியாதை செலுத்துவதை ஏற்கிறீர்களா? இக்காலத்தைய அறிஞர்களிடம் இல்லாத அரசியல் அறிவும் ஆற்றலும் தங்கள் பாதத்தில் ஒட்டிக்கிடக்கும் புழுதியில் இருக்குமல்லவா?

**விதுர:** வாழ்க நீடூழி! அரசியல் பெரும் சிக்கலாகிவிட்டுள்ளது மகனே! உனக்கு இவற்றை விளங்கும் பருவம் இன்னும் வரவில்லை. காலம் வரும். அது சரி! குருகுலத்தில் கல்வி பயில வேண்டியவர்கள் அரண்மனைக்கு ஏன் வந்தீர்கள்?

**யுதிஷ்:** நாங்கள் அங்கு சென்ற அன்றே பெரியப்பா குருவை அழைத்து விட்டார். அவர் திரும்பவில்லை. பீமனுக்கோ துரியோதனனைப் பிடிக்காது. இருவரும் சகோதரர்கள் என்பதனால் அனுசரித்துப் போகுமாறு பீமனைக் கேட்பேன். ஆனால் அவன் குணம் தெரியுந்தானே!

**விதுர:** இதனால் குருகுலத்தை விட்டு ஓடிவந்து விட்டீர்களாக்கும்! இந்தச் சவாலை ஏற்க முடியாவிட்டால் வாழ்க்கை என்னாகும்? தனது குடும்பம், கிராமம், நகரம் பின்னர் நாடு அதன் பின்னர் சாம்ராஜ்யம் என்று பல பொறுப்புகளை ஏற்கும் மன்னனின் கடமை மிக மிகக் கடுமையானது. எத்தகைய தியாகத்தையும் ஏற்கப் பழகிக் கொள்ள வேண்டும். சகோதரர்களுக்கு இடையில் ஏற்படும் பிணக்குகளுக்காகப் பயந்தால் நாளை போர் முனையை விட்டுப் பின்வாங்கிவிடுவாயோ? குருகுலத்தில் மூத்தவன் நீ. சவால்களை ஏற்றுச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு உனக்குண்டு. தம்பிமாரை அழைத்துக் கொண்டு உடனே குருகுலம் செல்ல வேண்டும்.

**விதுர:** தங்கள் கட்டளைப் படியே புறப்படுகிறோம் சித்தப்பா!

**விதுர:** தர்மராஜனாக நீடூழி வாழ்க!

-காட்சி மாற்றம்-

அரண்மனை—சகுனியும் துரியோதனனும் சொக்கட்டான் விளையாடுகின்றனர்.

**சகுனி:** சிறந்த ஆட்டக்காரனின் கட்டளையை பகடைக் காய்களும் கேட்டு பணிந்துவிடும். இதோ பார் உன்னை வெல்ல எனக்கு 6 தேவை. இதோ 6 கிடைக்கிறது பார்த்தாயா? ஒருவன் வெற்றியீட்ட, எது தேவை என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும்.

**துரியோ:** ஆனால் மாமா...!

**சகுனி:** இடையில் பேசாதே! சொல்வதைக் கவனி! அன்று பீஷ்மர், இராஜ தந்திரம் என்ற அம்பை விதுரர் மூலம் ஏவி உன் தந்தையின் அரியணை ஏறும் உரிமையைப் பறித்தார். இப்பொழுது அதே விதுரர் மூலம் யுதிஷ்டிரனுக்கு ஆட்சியைக் கொடுக்கத் திட்டமிடப்படுகிறது. அந்தப் பணிப்பெண்ணின் மகன் விதுரன், யுதிஷ்டிரனை இளவரசனாக்கி விட்டால் அஸ்தினாபுரம் அவனுக்கே போய் விடும். இன்றுள்ள அரசன் திருதராட்டிரனின் மகன் நீ. உனக்குத்தான் பிறப்புரிமை உண்டென்பதை மறந்து விடாதே! மாமாவின் சொற்படி நடந்தால் உனது அரசுரிமையை எவராலும் பறிக்க முடியாது.

**துரியோ:** நான் என்ன செய்ய வேண்டும் மாமா?

**சகுனி:** பாண்டவர்கள் ஐவர். 5 விரல்களும் இணைந்தால் உறுதியான முஷ்டியாகி விடும்.

**துரியோ:** நாங்கள் நூறுபேர் அல்லவா?

**சகுனி:** நூறானாலும் பலமான முஷ்டியாகி விடுமா?

**துரியோ:** அவர்களை எனக்குப் பிடிக்கவேயில்லை மாமா!

**சகுனி:** எனக்கும்தான். அவர்களை வீழ்த்த ஒரேவழிதானுண்டு. வஞ்சனையால் தான் அவர்களை வீழ்த்த வேண்டும். தந்திரமாக அவர்களை சிநேகம் பண்ணு. பலம், நல்லொழுக்கம் ஆகியவற்றில் அவர்கள் உயர்ந்தவர்கள். கபடும் வஞ்சகமும் அவர்களிடத்தில் இல்லை. ஆகவே வஞ்சக வலையை விரி. பீமன் சாப்பாட்டுப் பிரியன்.

**துரியோ:** ஆமாம். அவன் எதையும் சாப்பிடுவான்.

**சகுனி:** அவன் விஷத்தையும் சாப்பிடுவானல்லவா? உன் திட்டத்தை இங்கிருந்தே தொடங்கு.

பகடையைக் குலுக்கிப் போட 8 விழுகிறது.

**சகுனி:** பார்த்தாயா- கேட்டது கிடைக்கிறது.

-காட்சி மாற்றம்-

நதிக்கரையில் பீமன் இருந்து கற்களை நீரில் எறிந்து கொண்டிருக்கிறான். துரியோதனன் அவனை அணுகுகிறான்.

**துரியோ:** எல்லோரும் விளையாடுகிறார்கள். நீ ஏன் தனியாக இருக்கிறாய்? (பீமனிடம் ஒரு பழத்தைக் கொடுக்கிறான் தானும் உண்கிறான்.)

**பீமன்:** நான் பசியாக இருக்கிறேன். வெறும் வயிற்றுடன் எப்படி விளையாடுவது? இன்று நிரம்பப் பாயாசம் தருவதாக அப்பப்பா கூறினார். ஆனால் கிடைக்கவில்லை.

**துரியோ:** அப்பப்பா மறந்திருக்கலாம். என்னுடன் வா. நான் ஏராளமாகத் தருகிறேன். யாருக்கும் தெரிய வேண்டாம். துச்சாதனன் காவலுக்கு இருக்கிறான்.

**பீமன்:** அப்போ அவனே பாதியைக் குடித்திருப்பான்!

**துரியோ:** இல்லை. அவன் என் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பவன். பாயாசம் குடித்துவிட்டு வந்து விளையாடலாம்.

இருவரும் ஒன்றாகப் போவதை யுதிஷ்டிரன் காண்கிறான்.

**நகுலன்:** பிடித்துவிட்டேன் அண்ணா!

**யுதிஷ்:** என்ன? மேற்கிலே சூரியோதயம் போல் இருக்கிறதே! பீமனும் துரியோதனனும் ஒன்றாக எங்கோ கிளம்பிவிட்டனரே!

**நகுல:** நீங்கள் சகோதர ஒற்றுமை பற்றிக் கூறியிருந்தீர்களல்லவா? அதுதான்.

••••

துரியோதனனின் விடுதியில் பீமன் பாயாசம் அருந்துவதை துரியோதனனும் துச்சாதனனும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

**பீமன்:** நீங்கள் இருவரும் அருந்தவில்லையா?

**துச்சா:** நீ முதலில் அருந்து.

**துரியோ:** மீதமிருந்தால் நாங்கள் அருந்துகிறோம்.

ஓரளவு பருகிய பின் பீமன் மயக்கமடையும் நிலையில்...

**பீமன்:** போதும்! இதற்கு மேல் வேண்டாம்.

**துரியோ:** போதும் என்று நீ எப்போதும் சொல்வதில்லையே! என்ன துச்சாதனா?

**பீமன்:** எனக்குத் தூக்கம் வருகிறது. தூங்கி எழுந்ததும் மீதியைக் குடிக்கிறேன்.

பீமன் மயக்க முறுகிறான். நன்றாக மயங்கிவிட்டான் என்பதனை உறுதி செய்துகொள்ளுகின்றனர் இருவரும்.

••••

**யுதிஷ்:** அர்ச்சுனா! பீமன் இன்னும் திரும்பவில்லையே! அவன் துரியோதனனுடன் சென்றமையால் எனக்குக் கவலையாக இருக்கிறது.

**அர்ச்:** கவலைப்படாதீர்கள். ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கூறினீர்கள். அது தான் ஒன்று பட்டுள்ளார்கள் போலும்!

••••

துரியோதனனும் துச்சாதனனும் பீமனை ஒரு பாயில் சுருட்டிக் கட்டுகின்றனர்.

**துரியோ:** சீக்கிரம்! யாராவது வந்தால் இலாபத்தைவிட நட்டமாகி விடும்! அப்படியே கங்கையில் வீசிவிடலாம். பாண்டவர்கள் ஒரு கையானால் இன்று ஒரு விரல் துண்டிக்கப்படுகிறது.

பீமனை கங்கையில் கொண்டுபோய் வீசுகின்றனர்.

••••

யுதிஷ்டிரனும் ஏனையோரும் பீமனைக் காணாது காடுகளில் தேடுகின்றனர்.

**யுதிஷ்:** பீமா...! தம்பி பீமா!

**அருச்:** நீங்கள் வீண் கவலைப்பட வேண்டாம். எங்காவது வயிறு முட்ட தின்றுவிட்டு உறங்கியிருப்பான்.

**யுதிஷ்:** ஆனால் இதுவரை எப்போதும் பீமன் இப்படி நடந்து கொள்ளவில்லையே!

**நகுல:** ஒருவேளை அரண்மனை சென்றிருக்கலாம்.

**சகா:** நானும் அவ்வாறுதான் எண்ணுகிறேன்.

-காட்சி மாற்றம்-

அரண்மனை—துரியோதனனும் சகுனியும்.

**சகுனி:** என் மருமகனே! இன்று என் உள்ளம் முழுவதும் மகிழ்ச்சியைப் பெருக்கிவிட்டாய். மாமாவின் புத்திமதிகளைத் தொடர்ந்து கேள். உரிய பயனைக் காண்பாய்! காந்தாரத்தை விடுத்து நான் இங்கே காரணமில்லாமல் தங்கியிருக்கவில்லை. ஒரே ஒரு இலட்சியம் தான் என்னை அஸ்தினாபுரத்துடன் பிணைத்து வைத்திருக்கிறது.

••••

காந்தாரியின் அந்தப்புரம்.

**காந்தா:** என்ன? குருகுலத்திலிருந்து பீமன் திரும்பவில்லையா? துரியோதனன் எங்கே?

**பணிப்பெண்:** இளவரசர் தன் மாமனாருடன் இருக்கிறார். மகாராணி!

**திருத:** உனக்கு துரியோதனன் மீது ஏன் எப்போதும் சந்தேகம்?

**காந்:** ஒரு மரத்தின் தன்மையினை பூமிதானே அறிய முடியும்! அவனுடைய போக்கு எனக்கு அச்சத்தைத் தருகிறது. அவனை தக்கபடி வழி நடத்தாவிட்டால் வருங்கால வரலாறு நம்மையே திட்டக்கூடும்.

**திருத:** அஸ்தினாபுரத்தை வரலாறு நெருங்கும் போது நாம் வரலாற்றுக்கப்பால் சென்று விடுவோம். எனக்கு வரலாற்றை நினைக்க நேரமில்லை.

**காந்:** அப்போ பீமன் குருகுலத்திலிருந்து திரும்பவில்லை என்பதை நினைத்துப் பார்க்கவும் நேரம் இல்லையா பிரபு?

••••

காவலர்கள் பீமனை வனத்தில் தேடுகின்றனர்.

**காவலன்:** ஏதாவது துப்பு கிடைத்ததா? அஸ்தினாபுரி இளவரசர் ஒருவரைக் காணவில்லை. பாண்டு மன்னரின் மகனைப் பற்றி இந்த மரஞ்செடி கொடிகள் எதையும் கூறுமா?

**காவ-2:** பீமனின் மறைவில் துரியோதனனின் சூழ்ச்சி இருக்கும் என்றே எனக்குப் படுகிறது.

**காவ-3:** யாராவது கேட்டால் ஆபத்து-மெல்லப் பேசு.

-காட்சி மாற்றம்-

குந்தி அழுதுகொண்டிருக்கும் போது துரியோதனன் அங்கு வருகிறான்.

**குந்தி:** நீடூழி வாழ்க! மகனே! பீமனை உன்னுடன் பார்த்ததாக யுதிஷ்டிரன் சொன்னான்.

**துரியோ:** ஆமாம் சித்தி! சகோதரர்கள் சச்சரவு படக் கூடாது, ஒற்றுமையாக வாழ வேண்டும் என்று மாமா திட்டினார். அதனால் பீமனுடன் சேர்ந்து விளையாடினேன். அண்ணா தேடுவார் என்று கூறி இடையில் விளையாட்டை நிறுத்திவிட்டு போய்விட்டான்.

**குந்தி:** ஆனால் அவன் யுதிஷ்டிரனிடம் போகவில்லையே!

**துரியோ:** அதுதான் எனக்கும் கவலை தருகிறது.

**விதுரர்:** வணக்கம் அம்மணி! காவலர்கள்

(18ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com




## அபாயமான சாகசம்

மயிர்க்கூச்செறியும் பயங்கர சாகசங்களை செய்து காட்டி சாதனை படைப்போர் பல புதுமைகளைச் செய்து மக்களை மகிழ்வூட்டுவோர்கள். இவர்கள் தங்களுக்கு உயிர் அபாயம் ஏற்படும் என்பதற்காக தயக்கம் காட்டுவதில்லை.

குப்பை கூளங்களை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய பார வண்டியை பூமியிலிருந்து பல அடிகள் மேல் நோக்கிக் கிளப்பி, 50 அடிவரை அந்தரத்தில் பறந்து, பயங்கரமான வெடி ஒன்று வெடித்து தீச்சுவாலை எழும்பும் இடத்தில் வண்டியைத் தரை இறக்கி, ஒரு சிறு காயமுமின்றி வண்டியைவிட்டு வீர நடையுடன் இறங்குகிறார் 'கப்பாஸ் ஸ்டண்ட்மான்' எனப் பெயர் பெற்ற டென்னிஸ் பிஷேரோ.

வட கரோலினாவிலுள்ள ஒரு மைதானத்தில் பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் அவர் செய்த சாகசக் காட்சியே படத்தில் வியக்க வைக்கிறது.



## குருளையோடு தவழும் மழலை

மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கும் அவசியம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனிதக் குழந்தைக்கு சிங்கக் குருளைபோல் நடக்க கற்றுக் கொடுக்கத்தானே வேண்டும். குருளையைக் கூட்டாளியாக்கிக் கொண்டு கொஞ்சும் மழலை அதனோடு சுற்றித் திரிந்து கற்றுக் கொள்கிறது.



## வருடம் ஒன்று விருது இரண்டு!

ஃபிரெடி ஸ்பென்சர் என்ற அமெரிக்க மோட்டார் சைக்கிள் சவாரி வீரர் ஒரே ஆண்டில் 1985ல் இரு போட்டிகளில் வெற்றியீட்டினார். ஜப்பான் தயாரிப்பான 250 சீசீ மோட்டார் சைக்கிள் போட்டியிலும் 500 சீசீ மோட்டார் சைக்கிள் போட்டியிலும் இவரே முதல் பரிசினை வென்றெடுத்தார். ஒரே வருடத்தில் இரு போட்டிகளில் வெற்றியீட்டிய பெருமை ஃபிரெடியையே சாரும். அதனால் உலக சாதனைப் புத்தகத்தில் சேரும் நிலையை அடைந்துவிட்டது இவரது பெயர்.



## பாதை என்றால் பாதைதான்!

நெடுஞ்சாலைகள் சகல நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால் அந்த நெடுஞ்சாலைகளையெல்லாம் புறம் தள்ளிவிடும் மாபெரும் நெடுஞ்சாலை அமெரிக்காவில் இருக்கிறது. அதுதான் உலகில் மிக நீளமான, மற்றும் சிறந்த போக்குவரத்து வசதி கொண்ட, நம்நாட்டு சாலைகள் போல் குழிகள் குறுக்கே இல்லாத பாதை.

அதன் நீளம் 6,260,177 கிலோமீட்டர். அமெரிக்காவின் பல மாநிலங்களை இப்பாதை இணைக்கிறது.

தினமுரசு வாரமலர்






குதிரைக்கு கொம்பு இல்லை. ஆனால் மனதிலே தெம்பு இருக்கிறது. படத்தில் உள்ள குதிரை பந்தயங்கள் பல கண்டு பரிசுகள் பல வென்றுள்ளது. குதிரையின் உரிமையாளர் அதன் பக்கத்திலே உள்ள பாவை. பரிசு வென்று வந்த தன் செல்லக் குதிரைக்கு பாவையவள் வெல்ல முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும் காட்சிதான் இது.


